
Not for sale

செப்டம்பர் - அக்டோபர் 2008

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom



# பூமியின் மகிமையான எதிர்காலம்

கிறிஸ்துவின் ராஜ்யம் • நியாயத்தீர்ப்பின் நாள் • பரிபூரண மனிதனும் அவனுடைய சுற்றுச் சூழலும் • பரதீஸ் • சகல ஜாதிகளின் விருப்பம் திரும்ப கொடுத்தலின் காலம் • ஜீவதண்ணீர்

# பூமியின் மகிமையான எதிர்காலம்



# ஆதியிலே

***"கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால் -வானம் எனக்குச் சிங்காசனம், பூமி எனக்குப்பாதபடி.."*** **(ஏசாயா 66 : 1)**

***"...............என் பாதஸ்தானத்தை மகிமைப்படுத்துவேன்"*** **(ஏசாயா 60 : 13)**

கிறிஸ்தவர்கள் அடிக்கடி பரலோகத்தை பற்றி பேசுவதை காண்கிறோம். ஆனால் பூமியின் எதிர்காலத்தை பற்றி எப்பொழுதாவது மாத்திரம் பேசுகிறார்கள். இருந்தபோதிலும், தேவன் தீர்க்கதரிசிகள் மூலமாக பேசும் பொழுது அவர் பூமியை வெறுமையாக இருக்கச் சிருஷ்டியாமல் குடியிருப்புக்காக உருவாக்கினார் என்று வாசிக்கிறோம். (ஏசாயா 45:18) இப்பூமி மற்றும் வானம் இரண்டையும் வருங்காலத்தில் அக்கினிக்கு இறைக்குவதை அடையாளமாக உரைத்த பிறகு,பேதுரு கூறுகையில்,"*அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்*" (11பேதுரு 3: 13)என்கிறார். "புதிய பூமி" என்று ஏன் குறிப்பிட வேண்டும் ? ஹெரால்டின் இந்த வெளியீடு அந்த கேள்விக்கான பதிலை ஆராய்கிறது.

1852 ல் வெளி வந்த " TheSaint's Inheritance" அல்லது" The World To Come என்ற புத்தகத்தின் முன்னுரையில் Henry.F.Hill எழுதும்பொழுது - "*பூமியானது அழிக்கப்படும் என்பதற்கு பதிலாக, காலங்கள் நிறைவேறும் பொழுது, ஏதேனின் நிலைமைக்கு சீர் பொருந்தப்படும் அல்லது அதனிலும் மகிமையான நிலையை அடையும் என்ற போதனை சபையால் ஒருபொழுதும் கள்ளப் போதனை என்று கருதப்படவில்லை ஒரு முக்கிய பிழை என்றும் கருதப்படவில்லை என்றாலும், அது தற்காலத்தில் ஒதுக்கப்பட்டிருப்பது, அதற்கு ஆதாரவாக எடுத்து வைக்கப்பட்டிருக்கிற அனைத்தும் (இந்த புத்தகத்தில்)தேவனுடைய வார்த்தையிலிருந்து கவனமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக வேதத்திலிருந்து சரளமான குறிப்புதல் பயன்படுத்தப்பட்டுள்ளன.*" Henry.F.Hill போல நாமும் வேதத்திலிருந்து சரளமான குறிப்புகளை தருகிறோம்.

நாம் இந்த மாத பத்திரிக்கை "பிரகடனப்படுத்துகிற (Herald)" கிறிஸ்துவின் இராஜ்யத்துடன் துவங்க நியாயத்தீர்ப்பின் நாள் அதை தொடர்கிறது. இதற்கு பயப்படுவதற்கு பதிலாக பழைய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள், தேவன் குறுக்கிட்டு அவருடைய நியாயத்தீர்ப்புகளின் மூலம் உலகம் நீதியை கற்றுக் கொள்ளும் காலத்தை வாஞ்சித்தார்கள். (ஏசாயா 26 :9)

பரிபூரண மனிதன் மற்றும் அவனுடைய சுற்றுச் சூழல் என்பது ஏசாயா 35 ம் அதிகாரத்தின் வசன வாரியாக ஆராய்ச்சியோடும் இந்த பாடத்தில் எதிர்காலத்தில் மனுக்குலம் பூமிக்குரிய பரிபூரண நிலைக்கு திரும்புகிற "பரிசுத்த வழியாகிய பெரும் பாதையை " கற்றுக் கொள்ளுகிறோம்.

இருவரும் சிலுவையில் மரிக்கும் தருவாயில் பேசின,(பரதீஸ்) புரிந்து கொள்வதற்கு கடினமாக தோன்றும் வார்த்தைகளை ஆய்வு செய்கிறது.

தேவனுடைய திட்டமானது, அவரை தற்போது அறிந்துகொள்ளாதவர்களையும், தன்னில் உள்ளடக்கியுள்ளது. ஜாதிகளினால் விரும்பத்தக்கது ஒவ்வொருவரும் பரலோகத்தைக் காட்டிலும் பூமியை தேர்ந்தெடுக்கும் விதத்தை விவரிக்கிறது. பேதுருவின் பிரசங்க வரிகளில் ஒன்றான திரும்பக் கொடுத்தலின் காலங்கள், பூமியில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிற மேன்மையான வாழ்க்கையை குறித்த வசனங்களை ஆராய்கிறது. வேதம், ஜீவனை தண்ணீர் மூலம் எவ்வாறு சித்தரிக்கிறது என்பதை ஜீவத் தண்ணீர், வழியாக நாம் ஆராய்ந்து நிறைவு செய்கிறோம்.

தேவன் பூமிக்கு திட்டமிட்டுயிருக்கிற மகிமையான எதிர்காலத்தை நாம் புரட்டி பார்க்கையில் புத்துணர்ச்சி கொள்வோமாக.

## செப்டம்பர் / அக்டோபர் 2008


✣ **ஆதியிலே** ........................ 1

பூமியின் மகிமையான எதிர்காலம்

✣ **கிறிஸ்துவின் ராஜ்யம்**........................ 2

தேவனுடைய கற்பனைகளால் போதிக்கப்பட்ட பின்பு மனுக்குலம் மீண்டும் " தேவ குமாரர்களாக " கருதப்படுவர்.

✣ **நியாயத்தீர்ப்பின் நாள்** 6

அவிசுவாசிகளுக்கு இறுதி நிலை மரணத்தில் தீர்மாணிக்கப்படுவதில்லை. அவர்களின் நியாயத்தீர்ப்பு இனி வரக்கூடியதாக இருக்கிறது.

✣ **பரிபூரண மனிதனும் அவனுடைய சுற்றுச் சூழலும்** 10

ஏசாயா 35 ல் உள்ள பெரும்பாதையான பரிசுத்தவழி – வசன வாரியாக ஆராய்தல்

✣ **பரதீஸ்** ........................ 15

இயேசு சிலுவையில் இருந்த கள்ளனுக்கு அவன் அன்றைய தினம் மரிப்பதில்லை என்று வாக்கு கொடுக்கவில்லை.

✣ **சகல ஜாதிகளின் விருப்பம்** ........................ 18

மனுக்குலம் விரும்புகிற ஏதேன் போன்ற ஒரு பூமி உணரப்படும்.

✣ **திரும்பக் கொடுத்தலின் காலம்** ........................ 21

பெந்தெகொஸ்தே நாளில் முதற்கால தீர்க்கதரிசிகள் மனுக்குலத்தில், ஒவ்வொருவருக்கும் தீர்க்கதரிசனமாக உரைத்ததை பேதுரு விவரித்தார்.

✣ **ஜீவத்தண்ணீர்** ........................ 25

தேவனுடைய சிங்காசனத்திலிருந்து பாய்கிற தண்ணீர் மனுக்குலத்தை போஷித்து குணமாக்கும்.


**கவிதைகள் மற்றும் சிறுக்கட்டுரைகள்**


"தீர்க்கதரிசிகளின் கீதம்" ........................ 9

"சத்திய வார்த்தை" ........................ 14

"தேவ குடும்பத்தின் ஒருமை" ........................ 20

சங்கீதம் 72 (தெரிந்து கொள்ளப்பட்ட வசனங்கள்) ........................ 23

"வருங்காலத்தை குறித்து பேசின தேவனுடைய தீர்க்கதரிசிகள்" ........................ 24

"காரல் ஹேகன்சிக் " ........................ 29

"உலகதினம்" 30

"கனப்பொழுது உங்களது கண்களை மூடுங்கள்." (பின் அட்டையில்)

# கிறிஸ்துவின் இராஜ்யம்

**"உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப் படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக."(மத்தேயு 6 : 10)** Ernie Kuenzli

தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தில் ,முக்கியமான பகுதியான, கிறிஸ்துவின் ஆயிர வருட ஆட்சியில் பூமிக்குரிய இராஜ்யம் அநேகருக்கு இரகசியமாகவே இருக்கிறது. இந்த இராஜ்யத்தை குறித்து இயேசு கற்பித்த மாதிரி ஜெபத்தில், மேலே சொன்ன வசனத்தில் குறிப்பிடுகிறார். இந்த இராஜ்யமானது, பூமியில் உள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தத்தின் பூமிக்குரிய பகுதி நிறைவடைந்து "*..கடற்கரை மணலைப்போலவும் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றும், உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள் என்றும்,..* "(ஆதியாகமம் 22: 17) ஏசாயா, பேதுரு மற்றும் யோவான் எழுதின புதிய வானங்களும், புதிய பூமியும் இதுவே (ஏசாயா 65: 17, 1பேதுரு 3 : 13, வெளி 21: 1)

கிறிஸ்துவின் இராஜ்யம் ஆவிக்குரிய மற்றும் பூமிக்குரிய பகுதிகளாக, இரண்டு பகுதிகளை கொண்டுள்ளது. கிறிஸ்து மற்றும் அவரை பின்பற்றும் சபையை (கலாத்தியர் 3: 16,29) ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தத்தில் "வானத்து நட்சத்திரங்களை போல" (ஆதியாகமம் 22 : 17) என்று ஆவிக்குரிய பகுதியை விவரிக்கிறது.இராஜ்யத்தில், கிறிஸ்துவும், சபையும் பூமிக்குரிய சந்ததியை வளர்த்து ஆசீர்வதிக்க வேண்டியது அவர்களின் வேலையாகும்.

ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தத்தில் சொல்லப்பட்ட பூமிக்குரிய பகுதி ஆதியாகமம் 28: 13,14 ஆம் வசனங்களில் யாக்கோபிடம் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது. அவருடைய வித்து அல்லது சந்ததியை பற்றி 14-ஆம் வசனம் விவரிக்கிறது "*அதற்கு மேலாகக் கர்த்தர் நின்று: நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனுமாகிய கர்த்தர்; நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன். உன் சந்ததி பூமியின் தூளைப்போலிருக்கும்; நீ மேற்கேயும், கிழக்கேயும், வடக்கேயும், தெற்கேயும் பரம்புவாய்; உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்.*" புது உடன்படிக்கையை அடித்தளமாக கொண்ட கிறிஸ்துவின் இராஜ்யமானது யாக்கோபின் சந்ததி, முழு மனுக்குலத்தோடு இணைந்து வளர்ந்து பூமியை நிரப்பும்.

இந்த இராஜ்யத்தின் நோக்கம் என்னவென்றால், ஆதாமின் பாவத்தினால் ஏதேனில் மனுக்குலம் இழந்த அத்தனையும் திரும்பக் கொடுப்பதாகும். இப்படியாக, திரும்பக் கொடுத்தலானது மனிதனுக்கு நித்திய ஜீவனையும், பூரண சுகத்தையும், பூமியின் மேல் அதிகாரத்தையும், மற்றும் தேவனுடைய பிள்ளைகளாகும் ஐக்கியத்தைக் கொண்டு வரும். திரும்பக்கொடுத்தல் என்றால் பூமியின் மேல் உள்ள சாபத்தை அகற்றுவதையும் பொருள்படுத்தும். இந்த இராஜ்யமானது ஆவிக்குரியவைகளும் பூமிக்குரியவைகளும் தேவனுக்கு விரோதமாக போராடுவதை முடிவுக்குக்கொண்டு வரும். தேவனுடைய சகல எதிரிகளும், ஆதாமின் மரணம் உள்பட அழிக்கப்பட்டு தேவனே " *சகலத்திலும் சகலமுமாயிருப்பார்.* "(1கொரிந்தியர் 15 : 28)

பூமியின் எல்லை மட்டும் கிறிஸ்துவின் இராஜ்யம் இயங்கும். ஆதாமின் மரணமாகிய சிறையிலிருந்து முழு மனுக்குலத்தையும் இந்த இராஜ்யம் விடுவிக்கும். (ஏசாயா 42 : 7, 49: 9, 61 : 1) இந்த இராஜ்யமானது, இன்று இருக்கும் சகல பூமிக்குரிய இராஜ்யங்களையும் மறைந்து, மனுக்குலத்தை ஒரே பரிசுத்த ஜாதியாக மாற்றும் (சங்கீதம் 2:9, தானியேல் 2:44, வெளி2 - 27) இது அனைவருக்கும் தேவனை பற்றி போதிக்கும் (எரேமியா 31: 34, ஏசாயா 11 :9, ஆபகூக் 2 : 14) இது இன்றைய சுற்றுச் சூழலில் உள்ள பாவம், சுயநலத்திற்கு பதிலாக அனைவராலும் ஆவலுடன் எதிர்ப்பார்க்கப்படும் பரதீஸாக மாற்றும். (ரோமர் 8 : 19)

## இராஜ்யத்தின் பகுதிகள் :

இந்த புதிய அரசாங்கமானது ஆவிக்குரிய அடிப்படையை கொண்டதாகவும் "*.............புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தை தேவனிடத்தினின்று பரலோகத்தை விட்டு இறங்கி வரக்கண்டேன்...*" என்று (வெளி 21 : 2) சித்தரிக்கிறது. கிறிஸ்துவும் சபையும் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி பிரதான ஆசாரியத்துவத்தை மையமாகக்கொண்டு இந்த அரசாங்கம் இயங்கும்.(எபிரெயர் 5: 6,8 - 10) இந்த மெல்கிசேதேக்கின் முறைமையின் ஆசாரியனாகவும், இராஜாவாகவும் பணி புரிந்து, மனிதனின் ஆன்மீகத்திற்கும், உலக சம்மந்தப்பட்டவைகளுக்கு இவர்கள் பொறுப்புள்ளவர்களாவார்கள்.(வெளி1:6,5:10) இராஜ்யத்தின் துவக்கத்தில், ஈடுபலியின் நன்மையை அடையாளப்படுத்தும் கிறிஸ்துவின் இரத்தம் ஆதாமின் மரணத் தீர்ப்பிலிருந்து முழு மனித குடும்பமும் விடுவிக்க பயன்படுத்தப்பட்டு, புதிய உடன்படிக்கை நிறைவடையும்.(மத்தேயு 26 : 28, ரோமர்5:18,19) இது மனிதனுடைய மத்தியஸ்தமாக செயல்பட்டு, மனுக்குலத்தை கிறிஸ்துவிடம் சேர்க்கும். (எபிரெயர்12 :24) கிறிஸ்து ஆயிர வருடங்களை பயன்படுத்தி ஒவ்வொருவரையும் முழுமை பெற,பரிசுத்த வழியில் நடத்தி,மறுபடியும் தேவனோடு இசைந்திருக்கச் செய்வார். (ஏசாயா 35 : 8)

இராஜ்யத்தில் கிறிஸ்துவும், சபையும் பூமியின் எல்லா அமைப்புகள் மேலும் ஆட்சி புரிந்து, மனித ஆட்சியின் கீழ் இருக்கும் எல்லா மதம்,பொருளாதாரம், சமுதாயம், அரசியல் அமைப்புகளை மாற்றி அமைப்பார்கள்( நாகூம் 1:5, வெளி19 :15)இந்த ஆட்சியை

"இருப்புக் கோல்" ஆட்சி என்று அடையாளப்படுத்தப்படுகிறது. ஒருவரும் அதற்கு முன் நிற்கவோ,எதிராக வளரவோ முடியாது. (சங்கீதம் 2:1 - 9, வெளி 2:27)

கிறிஸ்துவின் இராஜ்யத்தின் ஆவிக்குரிய அரசாங்கத்திற்கு பூமிக்குரிய பிரதிநிதிகள் இருப்பார்கள்.இவர்கள் பழைய ஏற்பாட்டின் நீதிமான்கள் என்று குறிப்பிடப்படுகிறார்கள். இவர்கள் பழைய ஏற்பாட்டில் தேவன் மேல் விசுவாசமும், கீழ்படிதலும் உள்ள தனி நபர்கள். கிறிஸ்துவின் மரணத்திற்கு முன்னதாகவே இவர்களின் விசுவாசம் நிரூபிக்கப்பட்டது. (எபிரெயர்11 :4- 38) இவர்கள் பூமியின் மேல் பிரபுக்களாக இருப்பார்கள், கிறிஸ்துவும், சபையும் "எருசலேமிலிருந்து கர்த்தரின் வார்த்தையை" இவர்கள் மூலமாக பூமிக்கு அறிவிப்பார்கள். (சங்கீதம் 45 :16,ஏசாயா 2:3)தனி நபர்களாகிய ஆபேல்,நோவா, ஆபிரகாம், சாராள், யோசேப்பு, மோசே, ராகாப் மற்றும் எபிரெயர் 11 ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருப்பவர்கள் கிறிஸ்துவின் அங்கத்தினர்களிடமிருந்து கட்டளைகளை பெற்று தாங்கள் பெற்ற அனுபவங்ளையும் பயன்படுத்தி தேவனுடைய குணங்களைப்பற்றியும், சத்தியத்தின் கோட்பாடுகளை பற்றியும், நீதியையும் முழு மனுக்குலத்திற்கு போதிப்பார்கள்.

இராஜ்யத்தின் பூமிக்குரிய பகுதி இஸ்ரயேல் ஜாதியை மையமாக கொண்டிருக்கும். கிறிஸ்துவின் இராஜ்யத்தின் அடித்தளம் இஸ்ரயேல் வீட்டாரோடு ஏற்படுத்தும் புது உடன்படிக்கையாகும். (எரேமியா 31:31-33, எபிரெயர் 8:8-10) இஸ்ரயேலர்களை தங்களுடைய சொந்த தேசத்தில் கூட்டிச் சேர்த்தல், மற்றும் யாக்கோபின் உபத்திரவங்கள் நிமித்தம் வரும் அழிவிலிருந்து தேவன் அவர்களை விடுவிப்பது, போன்ற காரியங்கள் இந்த புதிய உடன்படிக்கைக்குள் தங்களை உட்படுத்திக் கொள்ள ஆயத்தப்படுத்தும்.(எசேக்கியேல் 20: 37) இந்த உடன்படிக்கையின் கீழ்,தேவன் இஸ்ரயேலர்களை சுத்திகரித்து, சதையான இருதயத்தை கொடுத்து,அவருடைய பிரமாணங்களை அதில் எழுதுவார்.அவர் தம்முடைய ஆவியை கொடுத்து அவருடைய வழியில் நடத்துவார்.அவர்கள் அவருடைய ஜனங்களாக இருப்பார்கள், அவர் அவர்களுடைய தேவனாயிருப்பார். (எசேக்கியேல் 36 -24-28)

மீதி இருக்கும் மனுக்குலம் இதே செயல் முறைகளை கடைபிடித்து இந்த உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களை பகிர்ந்து கொள்ள வாஞ்சிப்பார்கள்.(எசேக்கியேல் 36:36) அவர்கள் எருசலேமுக்கு சென்று "*நாம் கர்த்தருடைய சமூகத்தில் விண்ணப்பம் பண்ணவும் சேனைகளின் கர்த்தரைத் தேடவும் தீவிரித்துப்போவோம் வாருங்கள்."* என்பார்கள். மேலும் முழுமனுக்குலமும் நாங்களும் போவோம் என்று சொல்லுவார்கள். " முழுமனுக்குலமும் ஒரு யூதனுடைய வஸ்திரத்தொங்கலைப் பிடித்துக்கொண்டு: தேவன் உங்களோடே இருக்கிறார் என்று கேள்விப்பட்டோம்; ஆகையால் உங்களோடேகூடப் போவோம் என்று சொல்லி, அவனைப்பற்றிக்கொள்வார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றார்." "(சகரியா8:21-23) இஸ்ரயேல் ஆசீர்வாதங்களுக்கு ஒரு மாதிரியாக விளங்கும். மீதி இருக்கும் மனுக்குலம் இஸ்ரயேலர்களாக மாறி, ஆசீர்வாதங்களை பெற வாஞ்சிப்பார்கள் (சகரியா 8 :13) இவ்விதமாக யாக்கோபின் சந்ததி, " உன் சந்ததி பூமியின் தூளைப்போலிருக்கும்; நீ மேற்கேயும், கிழக்கேயும், வடக்கேயும், தெற்கேயும் பரம்புவாய்; உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்." (ஆதியாகமம் 28 :14)

## இன்று இருக்கும் வேறுபாடுகள் :

கிறிஸ்துவின் இராஜ்யத்திற்கும், இன்றைய தீமையான உலகத்திற்கும் மிகப் பெரிய அளவில் வித்தியாசங்கள் உண்டு. கிறிஸ்துவின் இராஜ்யம் நீதியின் அடிப்படையைக் கொண்டிருக்கும். (ஏசாயா 11 : 4) அடிப்படை மைய ஆதாரமாக கிறிஸ்துவும் சபையும் கொண்ட தலைமையில் "பரிசுத்த ஜாதி அல்லது இராஜ்யம் இயங்கும். (1பேதுரு 2:9).மனுஷன் நீதியை கற்றுக்கொண்டு பரிசுத்தத்தில் வளருவதே இந்த இராஜ்யத்தின் நோக்கமாகும். இராஜ்யம் செயலாற்றும் காலத்தில் தேவனுடைய நியாயத்தீர்ப்பு நடைபெறும் பொழுது பூமியின் குடிகள் நீதியை கற்றுக் கொள்ளுவார்கள். (ஏசாயா 26 :9)

இந்த இராஜ்யத்தில் "*என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை; கேடுசெய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்.*"(ஏசாயா 11:9) " *இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன்முதல் பெரியவன்மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்*" (எரேமியா 31 :34) இந்த இராஜ்யத்தின் மூலமாக தேவன் " *அப்பொழுது ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு, நான் அவர்கள் பாஷையைச் சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவேன்.*" (செப்பனியா 3: 9) (ஏசாயா 2:3,11:9) எரேமியா 31:34) மேற்கூறியவைகளின் அடிப்படையில் கர்த்தரை அறிகிற அறிவு கிறிஸ்துவின் இராஜ்யத்தின் பூமிக்குரிய பிரதிநிதிகளாகிய முற்பிதாக்கள் மூலம் வந்தடையும் என்ற முடிவுக்கு நாம் வரலாம். இன்றைக்கு இருக்கும் மின்னணு தொடர்பு சாதனங்களையும் மற்றும் பரலோகத்தின் தேவனுடைய ஞானத்தை பூமி முழுவதும் அறிவிப்பதற்கும் இனி கண்டுபிடிக்கப் படும் நவீன விஞ்ஞான கண்டுபிடிப்புகளையும் பயன்படுத்துவார்கள் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

தேவனுடைய வார்த்தைகளும் சட்டங்களும், சந்தேகமற்ற தெளிவான முறையில் போதிக்கப்படும். ஒவ்வொருவரும் தேவன் மற்றும் தன் தன் அயலானோடும் தாங்கள் கொண்டிருக்கும் விருப்பமும் சித்தமும் சந்தேகமின்றி குழப்பமில்லாமல் வெளிப்படுத்தப்படும். தேவனை பற்றி அறிந்து கொண்டு, அதனால் வரும் ஆசீர்வாதங்களை ஜனங்கள் மனப்பூர்வமாக ஏற்று கொள்ளுவார்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி கூறுகிறார். "திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும் யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள் அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில்

நடப்போம் என்பார்கள் ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்" (ஏசாயா 2:3)

இராஜ்யத்தில் கற்களைப் பொறுக்கிப் போடுவேன். கரடு முரடானவை சமமாக்கப்படும், கோணலானவைகள் செவ்வையாக்கப்படும், பள்ளமெல்லாம் உயர்த்தப்படும், சகல மலையும் குன்றும் தாழ்த்தப்படும் என்று தீர்க்கதரிசியாகிய ஏசாயா எழுதுகிறார். (ஏசாயா 40 :4, 42:16, 62 :10) தேவனுடைய இராஜ்யத்தில் நீதிக்கு விரோதமான சகல தடைகளும் தீமையின் சுவடுகளும் முற்றிலும் அகற்றப்படும் என்று அடையாள பாஷையில் தீர்க்கதரிசி குறிப்பிடுகிறார். அதிலிருந்து அகற்ற வேண்டிய மிகப் பெரிய கல் சாத்தான். ஜாதிகளை இனி மோசம் போக்கதாதபடிக்கு அவன் கட்டப்படுவான் (வெளி 20: 2,3) மனுக்குலம் நீதியை கற்றுக் கொண்டு, இறுதி பரீட்சைக்கு ஆயத்தமாகும்வரை சாத்தான் செயல் இழந்திருப்பான்(வெளி 20:7,8)

மனிதனுடைய எதிரிகளும் மற்ற கற்களும் அகற்றப்படும் (ஏசாயா 35 :9) சுயநலம், விழுந்து போன அரசியல், மதம், சமுதாயம், பொருளாதார அமைப்புகள் மற்றும் மற்ற ஸ்தாபனங்களாகிய கற்கள் அகற்றப்படும். இன்று பூமியில் இருக்கும் சகல ஒழுங்குகளும் கிரியைகளும் "அக்கினியால் பட்சிக்கப்படும்" என்று அடையாளமாக சொல்லப்பட்டிருக்கிறது. (11பேதுரு 3:10) மனித பலவீனத்தை பயன்படுத்தி பாவம்செய்ய தூண்டும் கூட்டங்களும் அகற்றப்படும். சுயநலத்தின் அடிப்படையிலான பொருளாதாரம் முடிவடையும். இராஜ்யத்தில் ஜீவத்தண்ணீரும் , ஆசீர்வாதமும் அனைவருக்கும் இலவசமாக கொடுக்கப்படும் (ஏசாயா 55:1, வெளி 22 :17) ஐசுவரியவான்களுக்கும், தரித்திரர்களுக்கும் உள்ள வேறுபாடுகள் மூடப்படும். இனி ஒருவர் மேல் ஒருவர் அதிகாரம் செலுத்த மாட்டார்கள். ஒவ்வொரு தனி நபரும் தன்னுடைய கையின் கிரியைகளில் மகிழ்வார்கள். விருதாவாக அவர்கள் உழைப்பதுமில்லை, அவர்களின் பிள்ளைகள் மேல் துன்பங்கள் சுமத்தப் படுவதுமில்லை. (ஏசாயா 65 :21-23)

ஜாதிகள் , ஜனங்கள் மற்ற இனங்களுக்குள் இருக்கும் முரட்டாட்டங்களும், சண்டைகளும், பகைகளும், விரோதங்களும் முடிவடையும். "என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்கு செய்வாருமில்லை; கேடு செய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்." (ஏசாயா 11 : 9) கிறிஸ்துவின் இராஜ்யத்தின் உத்தரவோடு, மனுக்குலம் " *அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள்; ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதில்லை, இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை.*" (ஏசாயா2:4) போர்க்குரிய ஆயுதங்களையும் அழிவுக்குரிய ஆயுதங்களையும் , சமாதானத்திற்குரியவைகளாக மாற்றி, தங்களுக்கும் மற்றவர்களுக்கும் ஆசீர்வாதங்களை வருஷிக்க செய்வார்கள். அனைவரும் தேவனிடத்திலும், முழு மனுக்குலத்தினிடத்திலும் அன்பு செலுத்த சமாதானத்தை கற்றுக் கொள்வார்கள்.

மிருக உலகத்தில் இருக்கும் பகையும் விரோதங்களும் முடிவடையும் "*அப்பொழுது ஓனாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும், புலி வெள்ளாட்டுக்குட்டியோடே படுத்துக்கொள்ளும்; கன்றுக்குட்டியும், பாலசிங்கமும், காளையும், ஒருமித்திருக்கும்; ஒரு சிறு பையன் அவைகளை நடத்துவான். பசுவும் கரடியும் கூடிமேயும், அவைகளின் குட்டிகள் ஒருமித்துப் படுத்துக்கொள்ளும்; சிங்கம் மாட்டைப்போல் வைக்கோல் தின்னும்.*" (ஏசாயா 11 : 6,7)

பூமியின் மேல் இருக்கும் சாபம் நீக்கப்படும் மனுக்குலத்தை இனி சேதப்படுத்தாத படி இயற்கையின் சீற்றங்கள் கட்டுக்குள் வைக்கப்படும். பூமியில் பஞ்சத்தினால் உண்டாகும் அழிவு நிறுத்தப்படும். " *வெட்டாந்தரை தண்ணீர்த்தடாகமும், வறண்ட நிலம் நீரூற்றுகளுமாகும்...* " (ஏசாயா 35:7) தானியங்களை அழிக்கும் பூச்சிகளும் வியாதிகளும் இனி இராது. இவை அனைத்தும் பிரேத குழிகளிலிருந்து எழும்பும் பில்லியன் கணக்கான ஜனங்களுக்கு உணவு அளிக்க இந்த பூமியின் விளைச்சல் அதிகரிக்க உதவும். (சங்கீதம் 67:6, எசேக்கியேல் 34: 25 -27)

## உடைந்ததை சீர்பொருத்தல்

கிறிஸ்து மற்றும் சபையின் மூலம் செயலாற்றும் தேவனுடைய வல்லமை உடைந்த அனைத்தையும் சீர்பொருத்தும். முதலில், கிறிஸ்துவின் ஈடுபலியின் நன்மையானது ஆதாமின் சாபத்திலிருந்து முழு மனுக்குலத்தையும் விடுவிக்க பயன்படுத்தப்படும். இது மரித்துக்கொண்டு மரிக்கும் செயல்களையும், மரணத்தையும் முடிவுக்கு கொண்டு வரும். கிறிஸ்து மற்றும் சபையும் பிரேதக்குழியில் உள்ள அனைவருக்கும் ஜீவனைக் கொடுத்து கர்த்தரின் வார்த்தைகளை கேட்டு, நீதியைக் கற்று கொள்ள உதவி செய்வார்கள்.(யோவான் 5:28,29).

கிறிஸ்துவின் நன்மைகளை செயலாற்றும் பொழுது எல்லா வியாதிகளும் குணப்படும்."*வியாதிப்பட்டிருக்கிறேன் என்று நகரவாசிகள் சொல்வதில்லை; அதில்வாசமாயிருக்கிற ஜனத்தின் அக்கிரமம் மன்னிக்கப்பட்டிருக்கும்.*" (ஏசாயா 33 :24) ஆதாமின் சாபத்தின் ஒரு பகுதியாக மனுக்குலத்தை வாட்டும் உடலிரீதியான நோய்களான புற்று நோய்,இருதய நோய்கள், வயோதிகம், மனச் சிதைவுகள் அனைத்தும் குணமாக்கப்படும். பிரேதக் குழியிலிருந்து எழும்பும் மனுக்குலம் தேவனால் கொடுக்கப்பட்ட, நோயற்ற பூரண சரீரத்தை பெறும். (1கொரிந்தியர் 15:38-40) ஆதாமின் சாபம் நீக்கப்பட்ட பின், ஒவ்வொருவரும், இராஜ்யத்தின் சத்தியம் மற்றும் நீதியின் செய்திகளை தெளிவாக புரிந்து கொள்ளுவார்கள்.தங்களுடைய இருதயத்தில் மனப்பூர்வமாக விரும்பினால், இந்த செய்திகளை அப்பியாசப்படுத்தி பரிசுத்த வழியில் வளர்ச்சி அடையாலாம். (ஏசாயா 35:8)

ஆனால் பிரேதக் குழியிலிருந்து எழும்பும் ஒவ்வொருவரும் இக்காலத்தில் இருக்கும் விழுந்து போன குணலட்சணங்களோடு தான் எழுந்திருப்பார்கள். ஒருவருடைய மரணத்தின் போது இருந்த நோக்கம், செயல்பாடுகள், சுயநலன்கள் மற்றும் அபூரண நிலையே உயிர்த்தெழுந்த பின்னும் இருக்கும். ஒவ்வொருவரின் குணங்களை மாற்றி அமைத்து இருதயத்தில் பூரண மனிதர்களாக சீர் பொருத்துவது இராஜ்யத்தின் வேலையாக இருக்கும். இவை அனைத்தும் ஒருவருடைய விருப்பத்தை பொருத்ததே. கல்லான இருதயத்தை எடுத்து விட்டு சதையான இருதயத்தை பொருத்த வேண்டும் என்று இதை குறித்த வசனங்கள், விவரிக்கிறது. (எசேக்கியேல் 11 :19,20) மனிதனுடைய சுயாதீனத்தை பறித்துக் கொள்ளாமல், இவைகளை இராஜ்யம் எப்படி செய்யும் ?

தேவன் மனித குடும்பத்தின் மேல் வைத்த மிகப்பெரிய அன்பு இராஜ்யத்தின் ஆசீர்வாதங்கள் மூலம் வெளிப்படுத்தப்படும். இந்த ஆசீர்வாதம் மனுக்குலத்தின் மேல் ஊற்றப்படும்பொழுது, கல்லான இருதயங்கள் கறையும்.ஏசாயா தீர்க்கதரிசி இந்த ஆசீர்வாதங்களை குறித்து சொல்லும் பொழுது, மனித இனம், இந்நாள் வரைக்கும் கண்டிராத ஒரு கொழுத்த பந்திக்கு ஒப்பிடுகிறார். (ஏசாயா25:6-8) சகல பிரச்சனைகளையும் தீர்க்கும், இந்த ஆசீர்வாதங்களுக்கான பொறுப்பு என்னவென்றால், "*அக்காலத்திலே: இதோ, இவரே நம்முடைய தேவன்; இவருக்காகக் காத்திருந்தோம், இவர் நம்மை இரட்சிப்பார்; இவரே கர்த்தர், இவருக்காகக் காத்திருந்தோம்; இவருடைய இரட்சிப்பினால் களிகூர்ந்து மகிழுவோம் என்று சொல்லப்படும்.*" (ஏசாயா 25: 9)

கடினமான மனித இருதயம் உடையும், அப்பொழுது தேவனுடைய பிரமாணங்கள் சிந்தையில் போடப்பட்டு.இருதயத்தில் எழுதப்படும்.(எரேமியா 31 :33) இந்த காரியத்தை சபை,மற்றும் கிறிஸ்துவும் ராஜ்யத்தின் அனுபவங்கள் மற்றும் கல்வியின் மூலமாகவும் செயலாற்றுவார்கள். அனைத்து உதவிகளையும் செய்து அனைவரையும் வழிநடத்துவார்கள். ஜீவத்தண்ணீர்கள் வழியாக அனைவரும் வழி நடத்தப்படுவர், அதில் ஒருவரும் இடறுவதில்லை. (எரேமியா 31:9)


இந்த செயல்பாடுகள் மத்தியில், தேவன் மாம்சமான யாவர் மேலும் அவர் ஆவியை ஊற்றுவார்.(யோயேல்2:28) சுவிசேஷ யுகத்தில் சபையோரைபோல், இராஜ்யத்தில் மனுக்குலம் ஆவிக்குரிய சத்தியங்களை தெளிவாக புரிந்து கொண்டு, தேவனுடைய குணலட்சணங்களையும், கற்பனைகளையும், கோட்பாடுகளையும், அறிந்து, அவைகளை மெச்சிக் கொண்டு,தங்களுடைய சிந்தையிலும், இருதயத்திலும், அவைகளை ஏற்றுக்கொண்டு அப்பியாசப்படுத்த முயற்சிப்பார்கள். மனுக்குலத்தின் இருதயமும், குணலட்சணங்களும், தேவன் மற்றும் கிறிஸ்து குணங்களுக்கு ஒப்பாக மாற்றப்படும். ஆகவே மீண்டுமாக அனைவரும் தேவனுடைய புத்திரராவார்கள். ஆவியின் கனியாகிய இந்த உன்னதமான தெய்வீக அன்பே இந்த மாற்றங்களின் விளைவாக இருக்கும். இந்த காரியத்தை "வெள்ளாடு, செம்மறியாடுகளின்" உவமையில் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. இங்கு தன் அயலானுக்காகச் செய்யும் உதவிகளையும் அன்பையும் பற்றி சொல்லப்படுகிறது. (மத்தேயு 25:34 -40) இப்படிப்பட்ட நபர்கள் இறுதி பரீட்சையில் தேர்வு பெற்று தேவன் வாக்களித்த, நித்திய ஜீவனையும், பூமியின் மேல் ஆளுகையையும் பெறுவார்கள்.இந்த ஆச்சரியவிதமான மாறுதல்களை சபை மற்றும் கிறிஸ்துவின் மூலம் தேவனுடைய சர்வவல்லமை செயலாற்றும்.

இந்த இராஜ்யம் "கொஞ்ச காலம்" என்று சொல்லப்படுகிற இறுதி பரீட்சையோடு முடிவடையும்.(வெளி 20:2,3,7-10) இந்த பரீட்சையின்பொழுது காவலிலிருந்து சாத்தான் கட்டவிழ்க்கப்பட்டு மனுக்குலத்தை மீண்டும் கடைசியாக ஒரு முறை வஞ்சிக்க வாய்ப்பு கொடுக்கப்படும். இந்த பரீட்சையில் தேவனோடு இசைந்திராமல் தேவ சித்ததை செய்ய மறுத்து, அபூரணமாக இருக்கும் இருதயங்கள் வெளியரங்கமாகும். இந்த அபூரணமான இருதயங்கள் தேவனோடு போராடி, அதன் முடிவாக இரண்டாம் மரணம் அடைவார்கள்( வெளி 21:8) இனி இவர்கள் செய்யும் பாவத்திற்கு எந்த விதமான பலிகளோ, மன்னிப்போ கொடுக்கப்பட மாட்டாது. இந்த மரணத்தில் பங்கடைவர்கள் ஜீவனிலிருந்து நித்தியமாக கடந்து செல்வார்கள். (எபிரெயர்10 :26)

இந்த பரீட்சையின் முடிவில் ,சாத்தானும் அழிக்கப்படுவான் (ரோமர் 16 :20) இப்படியாக, தேவனுடைய கோட்பாடுகள் மற்றும் நீதியின் சட்டங்களின் எதிர்ப்பு முற்றிலுமாக முடிவடையும். எல்லா சத்துருக்களும் அழிக்கப்பட்டு, இராஜ்யம் பிதாவினிடத்தில் திரும்ப கொடுக்கப்படும்(1கொரிந்தியர் 15:24-28) மத்தியஸ்தரின் வேலை முடிவு பெற்று மனுக்குலம் பாதுகாப்புடன் மீண்டும் சிருஷ்டிகரோடு நேரடியாக ஐக்கியப்படுவார்கள். மீண்டுமாக, இவர்களுடைய நெற்றிகளில் தேவனுடைய நாமம் தரிக்கப்பட்டு தேவனுடைய புத்திரராயிருப்பார்கள். (வெளி 22:4) இவ்வழியாக, தேவன் அனைத்தையும் தன்னோடு ஒப்புரவாக்கி கொள்ளுவார். (கொலோசேயர் 1 :20)

பூரண இருதயத்தோடும், தெய்வீக அன்போடும் ஆவியின் கனிகள் நிறைவோடும், தேவனுடைய சாயலுக்கும் ரூபத்திற்கும் ராஜ்யமானது மனுக்குலத்தை சீர்பொருத்தும். ஒவ்வொரு தனி நபருக்கும் பாவத்தின் அனுபங்கள், கீழ்ப்படியாமையின் விளைவுகளை கற்றுக் கொடுத்திருக்கும். ஒவ்வொருவருடைய இருதயத்திலிருந்து கீழ்ப்படியாமையின் என்ற எண்ணங்கள் வேரோடு பிடுங்கப்பட்டதினால் இனி மரணம் இராது. தேவன் என்றுமே விரும்பியபடி மீண்டும் மனுக்குலம் பூமியை ஆளுவார்கள். ( சங்கீதம் 8:5-8) அனைவர் மேலும் ஆசீர்வாதத்தை பொழியும் தேவனை உண்மையில், அனைவரும் போற்றி துதிப்பார்கள். ( சங்கீதம் 67:3-7)





## " கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்."(ஆமோஸ் 3:7)[1]

Aaron Kuehmichel

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் அடிப்படையாக, இஸ்ரயேல் ஜாதியை சம்மந்தப்பட்டேயிருந்தது. வட இராஜ்யத்தின் 10 கோத்திரங்கள், அல்லது தெற்கில் உள்ள யூதா இராஜ்யத்தின் இரண்டு கோத்திரங்களை பற்றியே சொல்லப்பட்டு வந்தது. அவ்வப்பொழுது மற்ற தேசங்களுக்கும் தீர்க்கதரிசிகளால் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது. இதற்கு நினிவேயின் அழிவை குறித்து தீர்க்கதரிசனம் உரைத்த யோனா ஒரு எடுத்துக்காட்டாவார். அல்லது உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனம் மற்ற தேசங்களுக்கும், இஸ்ரயேல் மற்றும் யூதாவுக்கும் பொருந்தக்கூடியதாக இருந்தது. ஏசாயாவின் தீர்க்கதரிசனங்களும் அப்படியாகவே இருந்தது.

பல முறைகள் தீர்க்கதரிசிகள் மூலம் தேவனால் சொல்லப்பட்ட வார்த்தைகள் நியாயத்தீர்ப்பையும், அவர்களின் தீய செயல்களால் வந்த தீர்ப்பையும் குறித்தே அறிவிக்கப்பட்டது. இஸ்ரயேலின் தீய செயல்கள் பல உருவெடுத்து -விக்கிரகாராதனை,வேசித்தனம்,பெருமை, அவிசுவாசம் மற்றும் பல. புற ஜாதிகளை பொருத்தமட்டில், இஸ்ரயேல் ஜாதியை ஒடுக்கவதே அவர்கள் செய்த தீய செயலாகும்.

தீர்க்கதரிசிகள் மூலம் பெற்ற செய்திகளுக்கு பிரதிபலிப்புகள் வித்தியாசப்பட்டாலும் தேவனால் நியாயத்தீர்ப்பு கையளிக்கப்பட்டது என்று சொல்லப்பட்ட வார்த்தைகள் சரியாக புரிந்து கொள்ளப்பட்டது. அபூர்வமாக சில நேரங்களில் நியாயத்தீர்ப்பின் எச்சரிப்பு கொடுக்கப்பட்டு, மனம் மாற்றங்களும் ஏற்பட்டுள்ளது. பல முறைகள் தீர்க்கதரிசனங்கள் புறக்கணிக்கப்படாமல் இருந்தாலும், தீர்க்கதரிசிகள் புறக்கணிக்கப்பட்டு, கொலை செய்யப்படுவார்கள் . அப்படியே அவர்களை கொலை செய்யாமல் விட்டுவிட்டாலும், மிகவும் உபத்திரவப்படுத்தினார்கள்.

தீர்க்கதரிசனமான நியாயத்தீர்ப்பு வழக்கமாக கேட்கக்கூடியவர்களின் "நாளில்"நிறை வேற்றப்பட்டது. அவர்களுக்கு அதுவே நியாயத்தீர்ப்பின் நாளாக இருந்தது. கண்கள் கண்டதை விட அதிகமான செய்திகள் உண்டு என்பதை இப்பொழுது நாம் உணரலாம். ஆகவே நியாயத்தீப்பின் நாள் என்றால் இன்னும் பல ஆழமான காரியங்களும் சம்பவங்களும் நடைபெற இருப்பதால் தேவன் இதை பற்றி அவருடைய வார்த்தைகளை நீண்ட காலமாக பாதுகாத்து வந்திருக்கிறார்.

தேவன் ,"கர்த்தரோ என்றென்றைக்கும் இருப்பார்; தம்முடைய சிங்காசனத்தை நியாயத்தீர்ப்புக்கு ஆயத்தம் பண்ணினார். அவர் பூச்சக்கரத்தை நீதியாய் நியாயந்தீர்த்து, சகல ஜனங்களுக்கும் செம்மையாய் நீதிசெய்வார். "(சங்கீதம் 9 :7,8) என்றும்,"அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர்போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார் என்றான். "(அப்போஸ்தலர் 17:30,31) என்றும் நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. மனுஷ குமாரனாக இருப்பதினால் நியாயத்தீர்ப்பு செய்யும் அதிகாரத்தை தேவன் தனக்கு கொடுத்தார் என்று இயேசு கூறுகிறார். காலம் வருகிறது, அப்பொழுது பிரேதக்குழியில் இருப்போர் அனைவரும் அவருடைய சத்தத்தை கேட்டு , சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் நியாயத்தீர்ப்புக்கும் எழுந்து வருவார்கள். (யோவான் 5:27-29) என்று இயேசு குறிப்பிடுகிறார். லாசரின் சகோதிரி மார்த்தாள்," " (யோவான் 11:24) அதற்கு மார்த்தாள்: உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசிநாளிலே அவனும் உயிர்த்தெழுந்திருப்பான் என்று அறிந்திருக்கிறேன் என்றாள்."கடைசி நாளில்" கிறிஸ்துவின் ஆட்சி மற்றும் நியாயத்தீர்ப்பில் உயிர்த்தெழுதல் நடைபெறும். பாவத்திலிருந்தும், மரணத்திலிருந்தும் மனித இனம் மீட்கப்பட்டு, மீண்டும் முன் இருந்த நிலைமைக்கு திரும்பும் காலமாக இருக்கும். இவை அனைத்தும் தேவனுடைய வேலைகளாக இருந்தாலும், இவைகளை செயலாற்றும் பொறுப்பை அவருடைய குமாரனுக்கு கையளித்தார்.

நியாயத்தீர்ப்பின் நாள் மற்றும் தேவ பக்தி இல்லாதவர்களின் அழிவைக் குறித்து பேதுரு எழுதும் பொழுது," *இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவபக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள்வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது.. பிரியமானவர்களே, கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம்வருஷம்போலவும், ஆயிரம் வருஷம் ஒருநாள் போலவும் இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்கவேண்டாம்.*" (IIபேதுரு 3:7,8)

வரும் நாளில் நீதியுள்ளவர்கள் பரிசை பெற்று, துன்மார்க்கர் தண்டிக்கப்படுவதற்கு அதிகமான காலம் செல்லும். தேவனை நீதியோடு தொழுது கொள்வதற்கு அல்லது அவருக்கு கீழ்ப்படியாமல் துன்மார்க்கமாக நடப்பதற்கு, முழுமையான ஞானத்தின் அடிப்படையில், அனைவருக்கும் வாய்ப்பு கொடுக்கப்படக்கூடிய ஒரு தற்காலிகமான காலமாயிருக்கும்.

### வரும்நாளின் நியாயத்தீர்ப்பு

உலகத்தின் நியாயத்தீர்ப்பு, ஆயிர வருட காலப்பகுதியில் கிறிஸ்துபூமியை ஆட்சி புரிந்து, ராஜாவாகவும், நியாயதிபதியாகவும் செயல்படும் ஒரு முழு யுகமாகும். இயேசுவை விசுவாசத்தோடு பின்பற்றினவர்கள் இயேசுவோடு உலகத்தை நியாயந்தீர்ப்பார்கள் (ரோமர் 8 :17,1கொரிந்தியர் 6:2,வெளி 20 :4,6)

1. All Scripture quotations are from the NASB unless otherwise specified

நியாயத்தீர்ப்பின் நாளை குறித்து வேத வசனங்கள் கீழ் காணும் சில முக்கியமான உண்மைகளை போதிக்கிறது.

1. இந்த நியாயத்தீர்ப்பு நீதியாகவும், நேர்மையாகவும் நடைபெறும்.

2. கிறிஸ்து மற்றும் அவரை உண்மையோடு பின்பற்றினவர்கள் நியாயம் விசாரிப்பார்கள்.

3. நியாயத்தீர்ப்பின் நாள் ஆயிர வருடங்களை கொண்டதாகும். இது இருபத்து நான்கு மணி நேரம் அல்ல.

4. இந்த நியாயத்தீர்ப்பில் அனைவரும் உட்படுத்தப்படுவார்கள்.

தேவன், மனுஷனின் மரணத்தின் பொழுது, நித்தியமான விதியை தீர்மாணிப்பது இல்லை. தன்னுடைய போதனைகளை ஏற்று கொள்ளாதவர் இப்பொழுது நியாயம் தீர்க்கப்படுவதில்லை என்று இயேசு குறிப்பிடுகிறார்." *ஒருவன் என் வார்த்தைகளைக் கேட்டும் விசுவாசியாமற் போனால், அவனை நான் நியாயந்தீர்ப்பதில்லை; நான் உலகத்தை நியாயந் தீர்க்கவராமல், உலகத்தை இரட்சிக்கவந்தேன்."* (யோவான் 12 :47,48, யோவான் 3:17)

இன்று இயேசுவை "அறியாதவர்களுக்கு" வரும் நாள் கையளிக்கப்படுகிறது. இப்பொழுது விசுவாசியாதவர்கள் நியாயம் தீர்க்கப்படுவதில்லை, ஆனால் விசுவாசிப்பவர்கள் இப்பொழுதே நியாயம் விசாரிக்கப்படுகிறார்கள். (லூக்கா 12:46,47) வசனங்களின் அடிப்படையில், "நியாயத்தீர்ப்பு" என்றால், இறுதி தீர்ப்பு மட்டும் அல்ல,சோதனையின் காலமும் அதற்குட்பட்டிருக்கிறது. ஆகவே பேதுரு குறிப்பிடும் பொழுது, " *பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல்,கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்." (1பேதுரு 4-12,13)* இதை குறித்து தொடர்ந்து ..."*நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக்குங்காலமாயிருக்கிறது; முந்தி நம்மிடத்திலே அது துவக்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்?* " (1பேதுரு4 :17) என்கிறார். "தேவனுடைய வீட்டார்" என்று தங்களை கருதுபவர்களுக்கு நியாயத்தீர்ப்பின் காலமாக இருக்கிறது என்று பேதுரு தெளிவாக விசுவாசித்திருக்கிறார்.

வெளிப்படையாக தங்களுடைய ஜீவனை கிறிஸ்துவுக்கு இன்று அற்பணித்த அனைவரும் (ரோமர் 12:1,2) நித்திய ஜீவனுக்காக சோதிக்கப்படுகிறார்கள். இயேசு,"*என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட் பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்."* (யோவான் 5:24) என்கிறார். இன்று விசுவாசத்தினால் மரணத்திலிருந்து ஜீவனுக்கு கடந்து செல்லுகிறார்கள். (ரோமர் 5:18,6:22,8:1) இவர்களின் நியாயத்தீர்ப்பின் நாள் இனி வருவதல்ல, இப்பொழுதே நடந்து கொண்டிருக்கிறது. (எபிரெயர் 6 :4- 6)

இன்று ஞானஸ்நானம் பெற்ற விசுவாசிகளுக்கு வருங்காலத்தில் சோதனை இல்லை என்பதால், வருங்காலத்தில் ஒருவரும் சோதிக்கப்படுவதில்லை என்று சொன்னால் அது வசனங்களுக்கு முரண்பாடாகவே இருக்கும். பவுல், தகப்பனாகிய ஆதாமின் பாவத்தை குறித்து எழுதும் பொழுது, "(ரோமர் 5:18,1கொரிந்தியர் 15:21,22)என்கிறார். ஆதாமுக்கு ஏதேன் தோட்டம், முதல் நியாயத்தீர்ப்பின் நாளாக இருந்தது. அதாவது முழு மனுக்குலத்தின் வருங்கால நியாயத்தீர்ப்பும் இதில் அடங்கும்.

"*எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்.தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே.எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே; இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது."* (1தீமோத்தேயு 2:4-6) என்று தேவன் விரும்புவதாக பவுல் எழுதுகிறார். பவுல் சொல்லுகிறபடி மனுக்குலம் சத்தியத்தை அறிகிற அறிவை அடையும். சத்தியம் என்றால் என்ன ? " *அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்."* (யோவான் 14 :6) இயேசு மட்டுமே இரட்சிப்பின் ஒரே வழி என்பது சத்தியம் . நித்திய ஜீவனை பெற அனைவரும் இதை ஏற்று கொண்டு, கற்று கொள்ள வேண்டும். இந்த சத்தியத்தை அநேகர் அறியாமல் மரித்திருப்பதால், மரணத்திலிருந்து அனைவரும் உயிர்த்தெழுந்து உலகத்தின் வரும் நியாயத்தீர்ப்பின் நாளில் கிறிஸ்துவை குறித்த அறிவைப் பெறுவார்கள். ( அப்போஸ்தலர் 4:12)

தங்களுடைய செய்திகள் அநேக நாட்களுக்குப் பின் நிறைவேறும் அல்லது அப்பியாசப்படுத்தப்படும் என்று தீர்க்க தரிசனங்களை உரைத்த தீர்க்கதரிசிகள் அறிந்திருந்தார்களா ? அவர்கள் எழுதின காரியங்கள் முழுமையாக அவர்களால் புரிந்து கொள்ளப்பட்டது என்று நாம் தெளிவாக சொல்ல முடியாது.(1பேதுரு 1:10-12) பொதுவாக இந்த பதிவுகள் தேவனுடையவைகள் என்றும் தீர்க்கதரிசிகள் அவருடைய வாயின் வார்த்தைகளாக இருந்தார்கள் என்பதை மட்டும் தெளிவுப்படுத்துகிறது. எப்படியிருந்தாலும், தீர்க்கதரிசிகள் மேசியாவை எதிர்பார்த்தார்களோ, இல்லையோ என்பதை நாம் அறியோம். மேலும் சொல்லப்பட்ட தீர்க்கதரிசினங்கள் தங்களுடைய காலத்தில் அல்ல, விரைவில் வருங்காலத்தில் நிறைவடையும் என்று எதிர்பார்த்திருக்கலாம். (தானியேல் 12 : 8,9)

## தீர்க்கதரிசனமான எடுத்துகாட்டுகள்

சில காலங்களில் அநேக தீர்க்கதரிசிகள் ஒரே காலத்தில் வாழ்ந்தார்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் பரீட்சையமானவர்களும், அவர்கள் உரைத்த தீர்க்க தரிசனங்களையும் அறிந்திருந்தார்கள். ஓசியா,ஆமோஸ்,மீகா , ஏசாயா அனைவரும் ஒரே காலத்தில் வாழ்ந்தார்கள். இவர்களுக்கு பின் பல வருடங்கள், எந்த தீர்க்கதரிசிகளும் வரவில்லை. அதற்கு பின் எரேமியா, எசேக்கியேல், தானியேல், வந்தார்கள். ஒவ்வொருவரும், இஸ்ரயேல் அல்லது யூதாவுக்கு தேவனுடைய நியாயத்தீர்ப்பு மற்றும் தேவனுடைய வருங்கால திட்டங்களை முன் அறிவித்திருந்தாலும், தீர்க்கதரிசனமாக, வரும்காலத்தை குறித்து "அந்த நாள்" என்று நியாயத்தீர்ப்பின் நாளை குறிப்பிட்டே பேசினார்கள்.

இஸ்ரயேலின் வட இராஜ்யம் பாவத்திலிருந்து திரும்பி தேவனை ஆராதிப்பதற்காகவே ஓசியா தீர்க்கதரிசனம் உரைத்தார். ஓசியா தன்னுடைய வேசியான மனைவிக்கு பின் சென்றதுபோல,

தேவன் சோரம் போன தன்னுடைய ஜனத்திற்கு பின் சென்றார். இஸ்ரயேலின் ஒழுக்கக்கேட்டுக்கு மத்தியிலும் தேவன் தம்முடைய ஜனங்களை நேசித்து இரக்கம் காட்டினார். (அதிகாரம் 11) அவர்கள் மனம் வருந்தினால் வருங்காலத்தில் ஆசீர்வாதங்களை பெறுவார்கள் என்று அறிவித்தார்.( அதிகாரம் 14)

ஆமோஸ், சுற்றியுள்ள தேசங்களை தேவனுக்கும் , இஸ்ரயேலுக்கும் எதிராக பாவம் செய்வதை கண்டித்தார். தேவன் இஸ்ரயேலர்களை ஏன் தண்டித்தார் என்றும் அறிவித்தார். சகல நியாத்தீர்ப்புகளுக்கும் பின் தேவன் வருங்காலத்தில் தன்னுடைய ஜனங்களை கூட்டிச் சேர்ப்பார் என்று (ஆமோஸ் 9:11 -15)ஒரு நம்பிக்கையான செய்தி அறிவிக்கப்பட்டது.

ஒரு வழக்கறிஞரைப் போல் மீகா தீர்க்கதரிசி,தேவனுக்கு விரோதமாக இருந்த ஜாதி அமைப்புகள், தலைவர்கள் மற்றும் ஜனங்களை பற்றிய வழக்குகளை எடுத்துரைத்தார். நியாயத்தீர்ப்புகளை முன் அறிவித்தபொழுதும் கூட, அவரை பின் பற்றும் மீதி ஜனங்களை விடுவிப்பேன் என்றார். " *அவர்கள் ராஜா அவர்களுக்கு முன்பாக போவார். கர்த்தர் அவர்கள் முன்நிலையில் நடத்துவார். (மீகா 2:13) எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரயேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதிநாட்களாகிய பூர்வத்தினுடையது*" (மீகா 5:2) இதுவே வருங்காலத்தில் நிகழும் விடுதலையாகும். இது நியாயத்தீர்ப்பின் நாளில் நடக்கும்.

இஸ்ரயேலுக்கும் அதை சுற்றியுள்ள தேசங்களுக்கும் எதிராக நியாயத்தீர்ப்பை திட்டமாக சொன்ன முதல் தீர்க்கதரிசி ஏசாயா. அதற்கு பின் வருங்கால மேசியாவினால் ஆறுதல், மன்னிப்பு, நம்பிக்கையை குறித்த செய்திகள் அறிவிக்கப்பட்டது. பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகள் எல்லாரை காட்டிலும் ஏசாயா மேசியாவை பற்றி அதிகமாக எழுதியிருக்கிறார். " *என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை; கேடுசெய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்.* " (ஏசாயா 11:9) மீண்டும்," *என் ஆத்துமா இரவிலே உம்மை வாஞ்சிக்கிறது; எனக்குள் இருக்கிற என் ஆவியால் அதிகாலையிலும் உம்மைத் தேடுகிறேன்; உம்முடைய நியாயத்தீர்ப்புகள் பூமியிலே நடக்கும் போது பூச்சக்கரத்துக்குடிகள் நீதியைக் கற்றுக்கொள்வார்கள்.*"(ஏசாயா 26:9) தேவனை பற்றின ஞானத்தினால் இருதயத்தில் ஏற்படும் இந்த மாற்றத்தின் மூலம், யுத்தம் மற்றும் வெறுப்புணர்வு அல்லது யுத்தத்திற்கான ஆயத்த வேலைகளையும் மனுக்குலமானது அப்புறப்படுத்தும் (ஏசாயா 2:2-4)

பாவத்திலிருந்து மனம் திரும்பாவிட்டால் எருசலேமையும், அவர்களின் தேசங்களும் அழிக்கப்படும் என்று செப்பனியா யூதேயாவை எச்சரித்தார். அவர்களை பரிசுத்தப்படுத்தி சீர்பொருத்துவதற்கு இந்த தண்டனை கொடுக்கப்பட்டது. கடைசியாக இது ஆசீர்வாதத்தில் வந்தடையும் என்றார். தன்னுடைய தீர்க்கதரிசனத்தின் முடிவில் செப்பனியா தேவனுடைய கடுமையான நியாயத்தீர்ப்புகளில், இஸ்ரயேலை கூட்டிச் சேர்ப்பதினாலும், முழுமனுக்குலம் சீர்பொருந்துவதினாலும் வரும் மகிழ்ச்சியை பற்றியும் அறிவித்தார்.

யூதாவின் கடைசி ஐந்து இராஜாக்களின் காலத்தில் தேவனுடைய தீர்க்கதரிசியான எரேமியா, யூதா தேசம் பாபிலோனியர்களால் அழிக்கப்பட்டு கைப்பற்றப்படுவதை குறித்து எச்சரித்தார். பாபிலோனுக்கு கீழ்ப்பட்டு, அவர்களிடம் தங்களை ஒப்பு கொடுத்தால் தேவன் அவர்களை மீட்டுக் கொள்வார் என்றும், அதே நேரத்தில் பாபிலோனியர்களை எதிர்த்தால் அழிந்து விடுவார்கள் என்றும் அவர் முன்அறிவித்தார். வருங்காலத்தை குறித்து அவர் பேசுகையில், அவனவன் தான் விருப்பத்தோடு எடுக்கும் முடிவுகளுக்கு தக்க பலனளிக்கப்படும், என்று வரப்போகிற சோதனையின் நாளை குறித்துச் சொன்னார். "*பிதாக்கள் திராட்சக்காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின என்று அந்நாட்களில் சொல்லமாட்டார்கள். அவனவன் தன்தன் அக்கிரமத்தினிமித்தமே சாவான்; எந்த மனுஷன் திராட்சக்காய்களைத் தின்பானோ அவனுடைய பற்களே கூசிப்போகும்.*" (எரேமியா31:29,30) தேவன் ஒரு புதிய உடன்படிக்கையை ஏற்படுத்துவார் என்றும், அவர்களுடைய இருதயம் மாற்றப்படுவதினால், அனைவரும் அதை கைக்கொள்வார்கள் என்றும் தீர்க்கதரிசனம் உரைத்தார். ". *அந்நாட்களுக்குப் பிற்பாடு, நான் இஸ்ரயேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கையாவது; நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன்முதல் பெரியவன்மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்.*" (எரேமியா 31:33,34) எரேமியா உயிரோடிருந்து, தான் ஜாதிகளுக்கு விரோதமாக உரைத்த தீர்க்கதரிசனங்கள் நிறைவேறுவதை கண்முன் கண்டார். ஆனால், அவர் வருங்கால நியாயத்தீர்ப்பைக் குறித்தும் எதிர் நோக்கியிருந்தார்.

பாபிலோனில் சிறையிருப்பிலிருந்த தானியேலும், ஏசேக்கியேலும் தீர்க்கதரிசனம் உரைத்து, வருங்காலத்தில் இஸ்ரயேலின் தேசிய நம்பிக்கைகள் நிறைவேறும் பொழுது நடக்கும் சம்பவங்களை குறித்து பேசினார்கள். பிரேதக் குழியிலிருந்து மீண்டும் எழும்பும் மனிதன் அதாவது முதலில் எழும்புகள், நரம்புகள், சதைகள், கடைசியாக ஜீவன் வருவதை ஒரு எடுத்துகாட்டாக பயன்படுத்தி எசேக்கியேல் இஸ்ரயேல் மீண்டும் சீர்பொருத்தப்படும் என்று தீர்க்கதரிசனம் உரைத்தார்.( அதிகாரம் 37) அதற்கு பின் தேவன் சகல ஜாதிகளை ,இஸ்ரயேலுக்கு விரோதமாக கூட்டுவதையும், இஸ்ரயேலுக்கு விரோதமாக வருபவர்களை தண்டிப்பதையும் குறித்து சொல்லப்படுகிறது. (அதிகாரம் 38,39) தேவன் இஸ்ரயேலை கூட்டி சேர்ப்பதையும் நியாயத்தீர்ப்பின் நாளில் மனுக்குலம் மெய்யான தேவனை மீண்டும் தொழுது கொள்ள திரும்புவதை பற்றியும் ஆலயத்தின் எடுத்து காட்டின் மூலம் சொல்லப்படுகிறது. ( அதிகாரம் 36,40-48)

யூதாவின் துன்மார்க்கத்தை அறிந்த ஆபகூக் தீர்க்கதரிசி, தேவன் ஏன் அவர்களை தண்டிக்கவில்லை என்ற கேள்வியை எழுப்பினார். தன்னுடைய இந்த வேலையை செய்ய பாபிலோன் வரும் என்று தேவன் ஆபகூக்கு பதிலளித்தார். (பின்பு பாபிலோனும்

தண்டிக்கப்பட்டது) தேவன் ஒரு திட்டம் வகுத்து அதை செயல்படுத்தினார். ஆபகூக்கின் தீர்க்கதரிசனங்கள் நேரடியாகவும் சொல்லப்பட்டது. 3-ஆம் அதிகாரம் தேவனுடைய வருங்கால நியாயத்தீர்ப்புகளையும் ஜனங்களின் இரட்சிப்பையும் குறித்து சுருக்கமாக சொல்லப்பட்டிருக்கிறது.

தீர்க்கதரிசிகளுக்கு எல்லாவற்றையும் குறித்து முழுமையான நோக்கம், புரிந்து கொள்ளப்படாததினால், இஸ்ரயேலை சீர்ப்படுத்தி, தேசத்தை திருப்பி கொடுப்பதற்கு மேசியா வருவார் என்று அனைவரும் எதிர்பார்த்தார்கள். மிக ஆவலோடு நீண்ட காலங்களாக நீதி வாசம் செய்யும் வருங்காலத்தின் நாளைக் குறித்து அறிந்திருந்தார்கள். ஆம், இந்த சத்தியங்கள் அனைத்தும், நீண்ட காலமாக காக்கப்பட்டு, இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு பின் அப்போஸ்தலனாகிய யாக்கோபு, "..தேவன் புறஜாதிகளினின்று தமது நாமத்திற்காக ஒரு ஜனத்தைத் தெரிந்துகொள்ளும்படி முதல்முதல் அவர்களுக்குக் கடாட்சித்தருளின விதத்தைச் சிமியோன் விவரித்துச் சொன்னாரே. அதற்குத் தீர்க்கதரிசிகளுடைய வாக்கியங்களும் ஒத்திருக்கிறது.எப்படியெனில், மற்ற மனுஷரும், என்னுடைய நாமந்தரிக்கப்படும் சகல ஜாதிகளும், கர்த்தரைத் தேடும்படிக்கு,நான் இதற்குப்பின்பு திரும்பிவந்து, விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் எடுப்பித்து, அதிலே பழுதாய்ப்போனவைகளை மறுபடியும் சீர்ப்படுத்தி, அதைச் செவ்வையாக நிறுத்துவேன் என்று இவைகளை யெல்லாம்செய்கிற கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது. உலகத்தோற்றமுதல் தேவனுக்குத் தம்முடைய கிரியைகளெல்லாம் தெரிந்திருக்கிறது." (அப்போஸ்தலர் 15:14-18) என்று சொல்லப்படும் போது வெளிப்படுத்தப்பட்டது.

தேவனுடைய விசுவாசமுள்ள பழைய ஏற்பாட்டின் ஸ்திரீகளும், புருஷர்களும் நியாயத்தீர்ப்பின் நாளை எதிர் நோக்கினது போல் நாமும் அந்த நாளை எதிர் பார்த்திருக்கிறோம். ஆனால் சில காலம் சோர்ந்துபோன பின், ஆண்டவராகிய தேவன் " அப்பொழுது ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு, நான் அவர்கள் பாஷையைச் சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவேன்." (செப்பனியா 3 :9) இவை அனைத்தையும் நடத்துவார். தேவன் அவருடைய திட்டங்கள் நோக்கங்கள், குமாரனை பற்றிய அறிவை கொடுக்கும் அந்த காலம் மிக மகிழ்ச்சியுள்ள காலமாக இருக்கும். சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருப்பது போல், நிச்சயமாக கர்த்தரை அறிகிற அறிவினால் பூமி நிறைந்து, அனைவரும் கீழ்ப்படிந்து வாழ்வதற்கான வாய்ப்புகள் கொடுக்கப்படும். (ஏசாயா 11: 9, ஆபகூக் 2:14, ஏசேக்கியேல் 18: 23,32) நிச்சயமாக இது மிக மகிழ்ச்சிக்குரிய காலமாக இருக்கும்.

> "யேகோவா ராஜரீகம் பண்ணுகிறார், ஆகையால் பூச்சக்கரம் அசையாதபடி உறுதிப்பட்டிருக்கும்; அவர் ஜனங்களை நிதானமாய் நியாயந்தீர்ப்பார் என்று ஜாதிகளுக்குள்ளே சொல்லுங்கள்.வானங்கள் மகிழ்ந்து, பூமி பூரிப்பாகி, சமுத்திரமும் அதின் நிறைவும் முழங்குவதாக.நாடும் அதிலுள்ள யாவும் களிகூருவதாக; அப்பொழுது யேகோவாவுக்கு முன்பாக காட்டு விருட்சங்களெல்லாம் கெம்பீரிக்கும்.அவர் வருகிறார், அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார், அவர் பூலோகத்தை நீதியோடும், ஜனங்களைச் சத்தியத்தோடும் நியாயந்தீர்ப்பார்." (சங்கீதம் 96 :10-13)

## தீர்க்கதரிசிகளின் கீதம்



வாருங்கள், பரிசுத்தவான்களே,
கடைசி காலத்தில், நம் செவியை
மந்தமாக்காது - இருதயங்களை தேவனுடைய
வார்த்தைக்கு ஒருமுகப்படுத்தி உண்ணிப்பாக கவனியுங்கள் -
முற்காலத்திலிருந்து பேசப்பட்டிருப்பது,
தீர்க்கதரிசிகளின் முதுமைக்கு மேற்பட்டதா?
அவர்கள், தங்கள் செய்திகளை பத்து - நரம்புள்ள
யாழ்களில் உள்ளவைபோல் கீர்த்தனைகளாகவும்,
முதலில் மெல்லியதாகத் தொடங்கி, தொனிக்கிறதாகவும்,
ரீங்காரம் போன்று வந்து, பாட்டாக காலத்தின்
காற்றுகளினால் கொண்டு செல்லப்பட்டும் இருக்கிறது.
நமக்கு - கடைசி காலம் முடியும் தருணத்தில்
இருக்கிற பரிசுத்தவான்களுக்கு இன்று வரைக்கும்
அந்த மெல்லிசை மிகப் பிரம்மாண்டமான
வாத்திய திரளான காதுக்கினியதாகவும்,
எழும்பும் கூட்டிசை பாடும்,
ஓர் பொருளை பற்றி - "மனுக்குலத்தின் இரட்சிப்பு"
இன்னும் வரக்கூடிய யுகங்களில்,
குமாரனாகிய கிறிஸ்துவின் வழியாய் - இரட்சகரும் - இராஜாவின்
வழியாய் தேவன் பரிபூரணத்தினால் பூமியை ஆசீர்வதிப்பார்.

-Alice M. Ripper, Poems of the Way, p.127



இளைப்பாறுதலின் காலம், மறுஜென்ம காலம், மற்றும் உயிர்த்தெழுதலின் காலம் என்ற இந்த மூன்று வித்தியாசமான வார்த்தைகளும், மேசியாவின் ராஜ்யத்தில், நடக்க இருக்கும் மகிமையான வேலைகளை குறித்து விவரிக்கிறது. இவைகளின் சுருக்கம் ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்துதல் வரைக்கும் எதிரொலிக்கிறது.

இளைப்பாறுதலின் காலத்தில், (அப்போஸ்தலர் 3:19-21) பூமியின் புதிய அரசாங்கம் ஒழுங்கான முறையில் மாற்றி அமைக்கப்படும்.முழுபூமியும் சீர்ப்படுத்தப்பட்டு, ஏதேன் தோட்டத்தில் இருந்த மகிழ்ச்சியான நிலைமைகள் மீண்டும் பூமியில் ஸ்தாபிக்கப்படும்.

மறுஜென்ம காலத்தில், (மத்தேயு 19:28) முழு மனுக்குலத்தையும், பிரேதக் குழியிலிருந்து எழுப்பி மரிக்குமுன் இருந்த ஜீவ நிலைமையையும், பெலத்தையும் மீண்டும் கொடுக்கப்படும் என்பதை மிகத் தெளிவாக விவரிக்கிறது.

உயிர்த்தெழுதலில்,(யோவான் 5:28,29) புதிய ஜீவனில் எழுந்தவர்கள், சிந்தையிலும், சீரத்திலும் செயலிலும் பூரணப்பட்ட பின் அதை நித்தியமாக தக்கவைப்பது எவ்வாறு என்று சித்தரிக்கிறது.

பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்களில் ஏசாயா 35 ஆம் அதிகாரம் மட்டுமே,மனிதன் மற்றும் அவனுடைய சுற்றுச்சூழலின் சீர்ப்படுத்தும் செயல்களை பற்றி குறிப்பிடுகிறது.

**பூமி மகிழும்** - (ஏசாயா 35:1,2)

*"..வனாந்தரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து, கடுவெளி களித்து, புஷ்பத்தைப்போலச் செழிக்கும்.அது மிகுதியாய்ச் செழித்துப் பூரித்து ஆனந்தக்களிப்புடன் பாடும்; லீபனோனின் மகிமையும், கர்மேல்சாரோன் என்பவைகளின் அலங்காரமும் அதற்கு அளிக்கப்படும்; அவர்கள் கர்த்தருடைய மகிமையையும், நமது தேவனுடைய மகத்துவத்தையும் காண்பார்கள்."*

எந்த விதமான தனித்த எபிரெய வார்த்தைகளும் "அதற்கு" என்ற வார்த்தைக்கு துணை நிற்காததினால் இந்த வசனத்தில் வரும் "அதற்கு" என்ற வார்த்தை சேர்க்கப்பட்டுள்ளதா இல்லையா என்ற கேள்வி எழும்புகிறது. இப்படியிருக்க ஒரு பழமையான கைப்பிரதியில்,"yesusum" என்ற எபிரெய வார்த்தை "மகிழ்ச்சி" என்று மொழி பெயர்த்திருக்கலாம் . ஆனால் அராமிக் மற்றும் டார்கம்ஸ் மொழிகள் இதை தவிர்த்தது. இன்றும் ASV,RSV, JPS மொழிபெயர்ப்புகளிலும் தவிர்க்கப்பட்டது. ஆனால் Rotherham, Young's Literal,Leeser இந்த காரியத்தை மற்ற வார்த்தைகளை பயன்படுத்தி சேர்த்திருக்கிறார்கள்.

இந்த வார்த்தை இருப்பதாக நாம் எடுத்துக் கொண்டால், "அதற்கு" என்ற வார்த்தை யாரைக் குறிக்கும் என்ற கேள்வி இயல்பாக எழுகிறது.இந்த வார்த்தையானது முந்தய சம்பவத்தை சார்ந்திருக்கவேண்டும், ஏனென்றால் ஏசாயா 34 ஆம் அதிகாரத்தின் தொடர்ச்சியாக 35 ஆம் அதிகாரம் இருக்கிறது.

34 ஆம் அதிகாரத்தில் தேவன் ஏதோமின் மேல் வரும் நீதியான தண்டனையை பற்றி கூறுகிறார். அந்த அதிகாரத்தில் இரண்டு பகுதிகள் உள்ளது. 1-8 வசனங்கள், ஏதோமின் ஜனங்கள் மேல் தேவனுடைய தண்டனையையும், விசேஷமாக அவர்களின் தலைவர்களின் மேலும், வருவதையும்9-17 ஆம் வசனங்கள் ஏதோம் தேசத்தின் மேல் வரும் அவருடைய தீர்ப்பை பற்றியும் குறிப்பிடுகிறது.

பின் வரும் பகுதியில், நிலம் தரிசாகவும், பிரயோஜனமற்று போனதால், அங்கொன்றும் இங்கொன்றுமாக சிதறி வனாந்திர நாடோடிகள் தங்களுடைய கூடாரங்களை பெயர்த்துக் கொண்டு அங்கிருந்து கிழம்பினார்கள். மனிதனை வேட்டையாடுகிற காட்டு பறவைகளும், மிருகங்களும் இவர்களை விரட்டி விட்டு நித்தியமாக குடியேறியது.

இது சொல்லர்த்தமான ஏதோமின் அழிவை குறித்த நேரடியான தீர்க்கதரிசனமாகும். ஆனால் இதில் இன்னும் பல காரியங்கள் நிறைவேற இருக்கிறது. "ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தில் அடையாளமாக சொல்லப்பட்ட ஏதோம், வெளிப்படுத்துதலில் அடையாளமாக சொல்லப்பட்ட பாபிலோனுக்கு மற்றும் ஏசாயா, எரேமியா, எசேக்கியேல் தீர்க்கதரிசிகளின் தீர்க்க தரிசனங்களுக்கும் தொடர்புள்ளதாகவும் இருக்கிறது. (Studies in the Scriptures Vol 4,p. 17)

இந்த வறண்ட வனாந்திரமும் கடுவெளியின் துக்கமான நிலைமைகள், மகிழ்வதாக என்று சொல்லப்படுகிறது. ஒரு கட்டிட கலை நிபுணர் பழைய பாழடைந்த கட்டிடம் ஒன்றை தகர்த்து, புதிய கட்டிடம் உருவாக்கும் பொழுது இருக்கும் அதே உணர்ச்சிகரமான மகிழ்ச்சி இங்கும் காணப்படும்.

இங்கு தரிசு நிலங்கள் ஆள்தத்துவமாக பேசப்படுவதினால், நிச்சயமாக இது மனுக்குலத்தின் நித்திய குடியிருப்பாகிய பூமியை பற்றி தான் சொல்லப்பட்டிருக்கிறது.

இன்றைய பேராசைமிக்க நவீன தொழில் நுட்ப சமுதாயமானது பூமியை அழித்து நாசமாக்கி கொண்டிருக்கிறது. புகை, நச்சு வாயுக்கள் பல, பூமியின் சுற்றுப்புறத்தை கெடுத்துக் கொண்டிருக்கிறது. எண்ணை , தாதுபொருள் மற்றும் வன உற்பத்திப் பொருள்களின் தேவை அதிகரித்து கொண்டிருப்பதால், பூமி அழிந்து கொண்டிருக்கிறது. இது அழிவை குறித்து அல்ல,

ஆனால் ஏதேனை போல் உலகம் மாறுவதற்கும் முன் ஏற்படும் மாற்றங்களாகும். இந்த நம்பிக்கையற்ற சூழ்நிலைகள், ஒரு போதும் தவிர்க்கமுடியாததாகும்.எப்படியிருந்தாலும், வரும் நாட்களில் அதிகரிக்கும் அறிவு. இந்த நம்பிக்கையற்ற சூழ்நிலைகளை களிப்பாக மாற்றும்.

இந்த மாற்றங்கள் திடீர் என்று அற்புதமாக நடந்து விடாது. ஆனால் இயற்கையான காரணங்களினால் நடக்கக்கூடும். "தேவன் அவருடைய திட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையும் முன் அறிந்திருக்கிறார். அதற்கு தேவையான அனைத்து இயற்கையான முன்னேற்பாடுகளையும் அவர் செய்வார். ஆகவே சகலமும் இயற்கையாக நடந்தது போல் தோன்றும். " (Studies in the Scriptures. Vol 1,p. 161) இந்த ஒரு செயல் முறை இராஜ்யத்தின் இறுதியில் முழுமையாக நிறைவடையும்.

முதல் இரண்டு வசனங்களில் நான்கு இடங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. ("அது " என்ற வார்த்தை "யோர்தானின் வனாந்திர நிலம்" என்று செப்டாஜென்னில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அடுத்து மற்றொரு கைபிரதியில்"யோர்தானின் கறைகள்" என்று எழுதப்பட்டிருக்கிறது See Adam's clarke's Commentory)`. "லீபனோன்" அதிகமாக காடுகளுக்கும்,"கர்மேல்" அதிகமான கனி விருட்சங்களின் தோப்புகளுக்கும்,"சாரோன்" செழுமையான விளை நிலங்களுக்கும் பேர்போனதாக இருக்கிறது. மொத்தத்தில் இந்த நான்கு இடங்களும் செழித்து, மலரும் வளர்ச்சியை காட்டுகிறது. உண்மையில், மேல் கூறப்பட்ட இடங்களில் ஒன்றுமே ஏதோமில் இல்லை என்பது இஸ்ரயேலின் வளம் தன்னுடைய எல்லைக்கு அப்பாற்பட்ட இடங்களையும் செழிக்க செய்யும் என்பதை காட்டுகிறது. இது உண்மையில், உலக அளவு விரிந்து பரவும்.

இராஜ்யத்தின் மகிமை மற்றும் பிரஸ்தாபம் இஸ்ரயேல் மூலமாக வந்தாலும், அவைகளில் ஒன்றும் தேசத்திலிருந்து பெறப்பட்டதாக எண்ணப்படாமல், அதன் அனைத்து மகிமை மற்றும் விசேஷமும் யேகோவாவை துதித்ததின் விளைவாக பெறப்பட்டதாக எண்ணப்படும்.

**பொறுப்புக்கள்** ஏசாயா 35: 3,4

*"தளர்ந்த கைகளைத் திடப்படுத்தி, தள்ளாடுகிற முழங்கால்களைப் பலப்படுத்துங்கள்.மனம் பதறுகிறவர்களைப் பார்த்து: நீங்கள் பயப்படாதிருங்கள், திடன்கொள்ளுங்கள்; இதோ, உங்கள் தேவன் நீதியைச் சரிக்கட்டவும், உங்கள் தேவன் பதிலளிக்கவும் வருவார்; அவர் வந்து உங்களை இரட்சிப்பார் என்று சொல்லுங்கள்."*

ஏசாயா 34,35 ஆம் அதிகாரங்களில் தொடர்ந்து எழுதப்பட்ட தீர்க்கதரிசனங்களை வாசிக்கையில் மேல் கூறப்பட்ட 3,4 வசனங்களில் சொல்லப்பட்ட கட்டளைகளை நாம் நன்கு புரிந்து கொள்ளலாம். ஏசாயாவின் காலத்தில் அநேகர், ஏதோமியர்களை பற்றிய பயமுறுத்தலின் நிலையை அறிய ஆவலாயிருந்தார்கள். தங்கள் எதிராளிகளின் நிமித்தமாக பயந்து முறிந்து போய்விடுவோமா, என்று அவிசுவாசிகளாக இருக்கும் நபர்களை ஊக்குவிக்கும் ஆட்களை தீர்க்கதரிசிகள் கடிந்து கொண்டார்கள். எதிர்பார்த்திடாதளவுக்கு ஆசீர்வாதங்கள் தொடர்ந்து வரும்.

அடுத்து வரும் இரண்டு வசனங்களில் சொல்லப்பட்ட ஆசீர்வாதங்கள் அந்த காலத்தில் வரவில்லை. சொல்லர்த்தமான ஆசீர்வாதங்கள் ஒரு சிறு பகுதி மட்டுமே நிறைவேறியது ஆனால் அதன் மற்ற பெரும்பகுதி இனி நிறைவேறக் கூடியதாக இருக்கிறது. பாஸ்டர் ரசல் இதை குறித்து எழுதும்பொழுது - "சுவிசேஷ யுகம் முடிந்து ஆயிர வருட ஆட்சியின் தொடக்கத்தில் நடைபெறும் மாற்றங்களை பொதுவாக "உபத்திரவ காலம்" அல்லது "பழிவாங்குதலின் நாள்" என்றும் அழைக்கப்படுகிறது. அதில் தீயோரை தண்டித்து," சமாதான பிரபுவின்" கீழ் நீதியுள்ளவர்களை ஆசீர்வதிக்க இந்த உலகம் ஆயத்தப்படும். (Reprints p.247)

ஆகவே, தானியேல் 12 :1 ஆம் வசனத்தில் சொல்லப்பட்ட மகா உபத்திரவ காலத்தில், ஏதோமின் மேல் வரும் அடையாளமான மாபெரும் அழிவின் ஆவிக்குரிய நிறைவேற்றத்தை நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதை தொடர்ந்து மெசியாவின் இராஜ்யம் தொடங்குவதால்,ஏசாயா 35 ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட ஆசீர்வாதங்கள் அனைத்தும் வந்து சேரும்.

"சரிக்கட்டவும்" என்ற வார்த்தையை நாம் சற்று கவனித்தால்,அது சரியாக அளந்து அனுமதிக்கப்பட்ட தண்டனையை குறிப்பிடுகிறதாக இருக்கிறது, அதாவது ஏதோமின் பாவத்திற்கு சரி சமமான தண்டனையாகும். இதே வார்த்தையை எரேமியா பாபிலோனுக்கு பயன்படுத்துகிறார். "*நீங்கள் பாபிலோனின் அக்கிரமத்தில் சங்காரமாகாதபடிக்கு அதின் நடுவிலிருந்து ஓடி, அவரவர் தங்கள் ஆத்துமாவைத் தப்பிவியுங்கள்; இது கர்த்தர் அதினிடத்தில் பழிவாங்குகிற காலமாயிருக்கிறது; அவர் அதற்குப் பதில் செலுத்துவார்.*" (எரேமியா 51 :6)

சமம் என்ற சிந்தனையை நம்முடைய வெளிப்படுத்தின விசேஷத்தின் ஆசிரியர் குறிப்பிடும்பொழுது - ".*அவள் உங்களுக்குப் பலனளித்ததுபோல நீங்களும் அவளுக்குப் பலனளியுங்கள்; அவளுடைய கிரியைகளுக் குத்தக்கதாக அவளுக்கு இரட்டிப்பாகக் கொடுத்துத் தீருங்கள்; அவள் உங்களுக்குக் கலந்துகொடுத்த பாத்திரத்திலே இரட்டிப்பாக அவளுக்குக் கலந்துகொடுங்கள்.*" (வெளி 18 :6) இந்த பகுதியில் "டிப்லோ" மற்றும் "டிப்லோஸ்" என்ற வார்த்தையிலிருந்து "இரட்டிப்பு" என்ற வார்த்தை எடுக்கப்பட்டிருக்கிறது. (Strongs # 1363 & # 1362) இதற்கு ஆங்கிலத்தில் " duplicate" என்று பொருள் கொள்கிறது. "mishneh" என்ற எபிரெய பதம் அதே பொருளை கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. வேத பகுதிகள் மட்டுமே அது "சமமான இரண்டு பகுதிகளா" அல்லது "இரட்டிப்பா" என்று நிதானிக்க முடியும். இந்த வெளிப்படுத்தலின் பகுதியில் "சம பகுதிகள்" என்று பொருள்படும்.

**மீண்டும் சரீரம் பழைய நிலைமைக்கு திரும்புவது** (ஏசாயா 35:5-7)

*"அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம்.அப்பொழுது முடவன் மானைப்போல் குதிப்பான்; ஊமையன் நாவும் கெம்பீரிக்கும்; வனாந்தரத்திலே தண்ணீர்களும், கடுவெளியிலே ஆறுகளும் பாய்ந்தோடும். வெட்டாந்தரை தண்ணீர்த் தடாகமும், வறண்ட நிலம் நீரூற்றுகளுமாகும்; வலுசர்ப்பங்கள் தாபரித்துக் கிடந்த இடங்களிலே புல்லும் கொறுக்கையும் நாணலும் உண்டாகும்."*

மேசியாவின் இராஜ்யத்தில் சரீரம் முன் இருந்த நிலைமைக்கு மீண்டும் திரும்பும் என்ற வாக்குறுதி பல முறைகள் இந்த பகுதியில் கவிதை நடையில் விவரிக்கப்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட யோபுவினிடத்தில் எலிகூ வரும் ராஜ்யத்தை குறித்து சொன்ன பழைய வார்த்தைகள் - "*அப்பொழுது அவன் மாம்சம் வாலிபத்தில் இருந்ததைப்பார்க்கிலும் ஆரோக்கியமடையும்; தன் வாலவயது நாட்களுக்குத் திரும்புவான்.*"(யோபு 33:25) பிரேதக் குழியிலிருந்து எழும்பும் மனுக்குலம் உடனடியாக பரிபூரண சிந்தையையும் சரீரத்தையும் பெறுவதில்லை, ஆனால் அந்த நிலையில் சீராக வளர்ச்சி அடைவார்கள் என்று இந்த வசனம் குறிப்பிடுகிறது.

யோவான் ஸ்நானகன் சிறையிலிருக்கும் பொழுது தன்னுடைய இரண்டு சீஷர்களை இயேசுவிடம் அனுப்பி ,"வருகிற மேசியா நீர் தானோ ?" என்று கேட்க சொன்னார். இயேசு அந்த கேள்விக்கு நேரடியாக பதில் சொல்லாமல் அங்கு நடந்த அற்புதங்களை காண்பித்து "**குருடர் பார்வை அடைகிறார்கள் சப்பானிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்கிறார்கள், தரித்திரருக்கு சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது.**" (மத்தேயு 11:5) முன் அறிவிக்கப்பட்ட மேசியா இவர் தான் என்றும் உணர்த்தினார். இயேசு ஊமையானவர்களையும் பேசச் செய்தார் (மத்தேயு 9:33,12 :22)

குஷ்டரோகிகளை சுத்தமாக்கி, மரித்தோரை எழுப்பி இன்னும் அநேக அற்புதங்களை இயேசு செய்திருந்தாலும், இதில் பயனடைந்தவர் தங்களுடைய மரணம் மட்டுமே பயன்படுத்த முடிந்தது. ஆகவே இந்த சம்பவங்கள் இராஜ்யத்தில் மாபெரும் நித்தியமான வேலைகளுக்கு ஒரு எடுத்துகாட்டாக இருந்தது. அப்பொழுது சரீர ரீதியாக மட்டும் அல்ல, ஆவிக்குரிய பகுதியும் திரும்ப கொடுக்கப்படும். இவைகளைப்பார்க்கிலும் "பெரிய கிரியைகளை"செய்வீர்கள் என்று இயேசு இவைகளை குறித்தே சொல்லியிருந்தார். (யோவான் 14:12)

ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தின் இன்னும் ஆழமான நிறைவேற்றங்களை பற்றி பாஸ்டர் ரசல் எழுதும் பொழுது -

> "நம்முடைய ஆண்டவரின் முதல் வருகையின் பொழுது சரீர ரீதியாக, வியாதிகளிலிருந்தும், மரணத்திலிருந்தும், தற்காலிகமான ஆசீர்வாதங்களே இவ்வளவு மகிமையுள்ளதாக இருந்தால், மகிமை அடைந்த சபையாக நாமும் அவருடன் ஆயிர வருட ஆட்சியில் இவைகளைப் பார்க்கிலும் "பெரிய கிரியைகளை" நடப்பிப்பது இன்னும் எவ்வளவு ஆசீர்வாதமாக இருக்கும் என்றும், இதை கிறிஸ்துவோடு செயல்படுத்தும் நாம் கொடுத்து வைத்தவர் களாயிருப்போம். நாம் காணக்கூடிய கண்களை திறப்பதைக் காட்டிலும் , புரிந்து கொள்ளக்கூடிய மனக் கண்களை திறப்பது எவ்வளவு மேன்மையான வேலையாக இருக்கும், முடமான ஒருவரை சொஸ்தப்படுத்துவதை காட்டிலும் தன்னுடைய வாழ்க்கையின் நடத்தையில் முடமானவரை சொஸ்தப்படுத்துவது எவ்வளவு மேன்மையுள்ள காரியமாக இருக்கும். சொல்லர்த்தமான செவிடரின் செவிகள் திறப்பதை காட்டிலும், கேட்கும் செவிகளை கொடுத்து அதில் சத்தியத்தை புரிந்து கொண்டு, மெச்சி கொள்ளுவது எவ்வளவு மேன்மையான கிரியையாக இருக்கும் இயல்பான காரியங்களை பேசக்கூடிய நாவு ஊமையாக இருந்தால், உலகத்தின் காரியங்களை பேசுவதற்காக நாவு கட்டவிழ்க்கப்படுவதை காட்டிலும், தேவனை துதிப்பதற்கு நாவுகளை கட்டவிழ்க்கப்படுவது எத்தனை மேன்மையாக இருக்கும் யவீரின் குமாரத்தி, விதவையின் மக்கள் மற்றும் லாசரு, உயிர்த்து எழுப்பப்பட்டு சில வருடங்கள் மட்டுமே வாழ்ந்ததை காட்டிலும், புதிய உடன்படிக்கையின் கீழ் வரும் உலகத்தின் மனுக்குலத்திற்கு நித்திய ஜீவனை கொடுக்கும் கிரியைகள் எவ்வளவு பிரமிக்கக் கூடியதாக இருக்கும்."- ( Reprints. p. 2310)

ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தில், இராஜ்யத்தில் நடைபெற இருக்கும் அற்புதங்களை, வறண்ட நிலத்தில் நீரூற்றுகள் புறப்பட்டு, வலுசர்ப்பங்கள் தாபரித்த இடங்களில், புல்லும் , கொறுக்கையும், நாணலும் உண்டாகும் என்கிறார். சந்தேகமின்றி இவைகள் சொல்லர்த்தமாக நிறைவேறக்கூடியதாக இருக்கிறது தரிசாகக் கிடக்கும் பல மில்லியன் சதுர மைல்கள் பிரேதக் குழியிலிருந்து எழும்பும் பல பில்லியன் மக்களுக்கு உணவு அளிக்க சாகுபடிக்கேற்ற நிலமாக மாறும்.உலகத்தில் உள்ள மிகப் பெரியப் 35 பாலைவனங்களின் பரப்பளவு 7,850,000 சதுர மைல்களாகும்.[1] விக்கிப்பீடியா வின் அடிப்படையில் நாம் பார்க்கும் பொழுது, பூமியின் நில பரப்பில் உள்ள மொத்த பாலைவனங்களின் அளவு முன்றில் ஒரு பங்காகும்.

சில நேரங்களில், எழுந்து வரும் அனைத்து மரித்தோர்களுக்கும் இன்று ஜீவனோடு இருக்கும் ஆறு பில்லியன் மக்களுக்கும் இந்த பூமியில் இடம் உள்ளதா என்ற கேள்வி எழும்புகிறது. 200 மில்லியனாக ஜனத் தொகை உயர 4000 வருடங்கள் சென்றதாலும், 1804, ஆம் வருடம் வரைக்கு ஒரு பில்லியனை கூட ஜனத் தொகை எட்ட வில்லை என்பதாலும், ஏதேனிலிருந்து இந்நாள் வரையிலான ஜனத் தொகை தோராயமாக 36 பில்லியனை எட்டும் என்று நாம் கருதலாம். இன்றைய நாளில் இஸ்ரயேலில் இருப்பது போல, ஜனத் தொகையின் நெருக்கம் ஒரு சதுர கி மீ க்கு 288 நபர்களாகும்.[2]

சொல்லப்பட்ட நதிகள், அருவிகள், குளங்கள் அனைத்தும் சத்தியமாகிய தண்ணீரை அடையாள மொழியில் சொல்லப்பட்டிருக்கிறது. ஏன் என்றால் "சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருப்பது போல, பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும் என்று தீர்க்கதரிசனமாக சொல்லப் பட்டிருக்கிறது. (ஏசாயா 11 :9, ஆபகூக் 2:14)"வறண்ட நிலம்" என்ற வார்த்தையின் எபிரெய பதம் "ஷாராப்" ஆகும். (Sharab,Strong's# 8273 ) இதற்கு "பிரகாசிக்கும் மண் அல்லது "நாணல் நீர்" என்று பொருள்படும். ஆவிக்குரிய வகையில் மனுக்குலம் "கடற்கரை மணல்" (ஆதியாகமம் 32: 12) என்று மிக பொருத்தமான அடையாள பாஷையில் சொல்லப்பட்டிருக்கிறது. நாணல் நீரை போல் காட்சி அளித்த சத்தியம் இப்பொழுது உண்மையில் கிடைக்கும்.

"வலுசர்ப்பம்" சாத்தானை அடையாளமாக குறிக்கும் (வெளி 20:1-3) அவன் காத்து கிடக்கும் இடம்மெல்லாம் (பதுங்குமிடம் - Young's Literal Translation ) "புல்லும்

1. http://www.geocities.com/Axiom43/deserts.html
2. http://en.wikipedia.org/wiki/List_of_countries_by_population_density; see also Studies in the Scriptures,vol.1,pp.161-163

கொறுக்கும், நாணலும்" முளைக்கும். மனுக்குலத்தை வஞ்சித்து அழிக்க இனி ஒரு போதும் சாத்தான் மனுக்குலத்தின் மத்தியிலிருப்பதில்லை.

**பரிசுத்தமான பெரும்பாதை** (ஏசாயா 35:8-10)

*"அங்கே பெரும்பாதையான வழியும் இருக்கும்; அது பரிசுத்த வழி என்னப்படும்; தீட்டுள்ளவன் அதிலே நடந்துவருவதில்லை; அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் திசைகெட்டுப் போவதில்லை. அங்கே சிங்கம் இருப்பதில்லை; துஷ்டமிருகம் அங்கே போவதுமில்லை, அங்கே காணப்படவுமாட்டாது; மீட்கப்பட்டவர்களே அதில் நடப்பார்கள்.கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்தக்களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேலிருக்கும்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்."*

மத்திய அமெரிக்காவின் ஆஸட்டெக்ஸிலிருந்து ஓரியன்டில் இருக்கும் மங்கோல் வரைக்கும் எந்த இராஜ்யத்திலும் அதனுடைய சமுதாய கட்டுக்கோப்பை அடித்தள ஆதார அமைப்புகளில் இந்த பெரும் பாதைகள் முக்கிய பங்கைப் பெறும், இருபுறங்களிலும் மரங்கள் நாட்டப்பட்ட இந்த சாலைகள், வணிகத்திற்கு மட்டும் அல்லாமல், அருகில் உள்ள நாடுகளோடு தொடர்பு கொள்வதற்கும் பயன்படுத்தப்பட்டிருக்கும்.

ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தில் ஒரு விஷயம் , பெரும் பாதையின் மூலம் சித்தரிக்கப்படுகிறது.இந்த பெரும் பாதையை குறித்து அவர் ஐந்து தனித்தனி அதிகாரங்களில் விவரிக்கிறார்.

ஏசாயா 11:6 "இஸ்ரயேலர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டநாளில் அவர்களுக்கு இருந்ததுபோல, அசீரியாவிலே அவருடைய ஜனத்தில் மீதியானவர்களுக்கு ஒரு பெரும்பாதையிருக்கும்"

ஏசாயா 19:23,24"*அக்காலத்திலே எகிப்திலிருந்து அசீரியாவுக்குப் போகிறபெரும்பாதை உண்டாயிருக்கும்; அசீரியர் எகிப்துக்கும், எகிப்தியர் அசீரியாவுக்கும் வந்து, எகிப்தியர் அசீரியரோடுங் கூட ஆராதனை செய்வார்கள்.அக்காலத்திலே இஸ்ரயேல் எகிப்தோடும் அசீரியாவோடும் மூன்றாவதாகப் பூமியின் நடுவில் ஆசீர்வாதமாயிருக்கும்.*"

ஏசாயா 35 :8 "அங்கே பெரும்பாதையான வழியும் இருக்கும்; அது பரிசுத்த வழி என்னப்படும்; தீட்டுள்ளவன் அதிலே நடந்துவருவதில்லை; அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் திசைகெட்டுப் போவதில்லை."

ஏசாயா 40 :3" *கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவாந்தரவெளியிலே நம்முடைய தேவனுக்குப் பாதையைச் செவ்வைபண்ணுங்கள் என்றும்,*"

ஏசாயா 62:10"*வாசல்கள் வழியாய்ப் பிரவேசியுங்கள், பிரவேசியுங்கள்; ஜனத்துக்கு வழியைச் செவ்வைப்படுத்துங்கள்; பாதையை உயர்த்துங்கள், உயர்த்துங்கள்; அதிலுள்ள கற்களைப் பொறுக்கிப்போடுங்கள்; ஜனங்களுக்காகக் கொடியை ஏற்றுங்கள்.*"

முதல் இரண்டு வசனங்களில், அசீரியாவையும் எகிப்தையும் இணைக்க ஒரு பெரும் பாதை இருந்ததாக சொல்லப்பட்டுகிறது. ஏசாயாவின் காலத்தில் அப்படிப்பட்ட ஒரு பெரும் பாதை இருந்தது. இதை "மாரீஸ்" அல்லது "சமுத்திரத்தின் பாதை" என்று அழைக்கப்பட்டது. ஆகவே ஏசாயா 9:1 ஆம் வசனங்களில் குறிப்பிட்டிருக்கிறார். இந்த சாலை மத்தியதரைக்கடலின் கரையோரமாக தொடர்ந்து கிழக்கு புறமாக திரும்பி இஸ்ரயேலிருந்து கப்பர்நகூம் பட்டணம் மட்டும் வந்தது. அங்கிருந்து யேசரேல் பள்ளத்தாக்கின் வழியாக மெகிதோவில் ஒரு குருகிய கணவாய் வழியாக சீரியாவுக்கும் அசீரியாவுக்கும் தொடர்ந்து செல்லுகிறது.

ஏசாயாவின் இரண்டு பகுதிகளும் மேசியாவின் இராஜ்யத்தின் தீர்க்கதரிசனங்களாக காணப்படுகிறது. இப்படியாக இங்கு குறிப்பிடப்பட்ட பெரும் பாதையானது இராஜ்யத்தில் போக்கு வரத்து தொடர்புகளை சித்தரிக்கக்கூடியதாக இருக்கிறது. பெரிதும் வளர்ச்சி அடைந்து மெருகேற்றப்பட்ட எகிப்து மற்றும் மிகவும் நாகரீகமற்ற அசீரியா ஆகிய இரு வேற்றுமையான கலாச்சாரங்களை காட்டிலும் என்பது கற்பனைக்கு எட்டாத ஒன்றாகும். அதிகமான பாரம்ரிய வித்தியாசமான மக்களிடையே போக்கு வரத்து தொடர்புகள் எவ்வாறு ஸ்தாபிக்கப்படும் என்பதை இந்த பெரும் பாதை அடையாளமாகக் காட்டுகிறது.

இரண்டு நாடுகளுக்கு இடையில் இஸ்ரயேல் பாதி வழியில் இருப்பது போல, ஏசாயா 19:24 ஆம் வசனத்தில் புதிய கலப்பின பாரம்பரியம் ஸ்தாபிக்கப்படுவதற்கு சாதனங்கள் பயன்படுத்தப்பட்டு அவைகள் புரிந்து கொள்ளப்படும் பொழுது "தேசத்தின் மத்தியில் ஆசீர்வாதமாக இருக்கும்" என்று குறிப்பிடப்படுகிறது. இங்கு ஒரு தீர்மானமான கடக்கும் புள்ளி மெகிதோவில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ஏனென்றால் இந்த புதிய தொடர்பு சாதனங்கள் அர்மெகதோன் யுத்தத்திற்கு பின்பாக தான் ஸ்தாபிக்கப்படும்.

கடைசி இரண்டு வசன பகுதிகள் இந்த பெரும் பாதை ஸ்தாபிப்பதில், இஸ்ரயேலின் பங்கைப் பற்றி எடுத்து காட்டுகிறது. இந்த ஆவிக்குரிய பாதை அமைக்கப்படும் பொழுது கற்களையும், இடறுதலுக்கான கல்லையும் பொருக்கி போடும் படி இந்த தீர்க்கதரிசனம் இஸ்ரயேலுக்கு கட்டளையிடுகிறது. அவர்களின் கடந்தகால அனுபவங்கள் மற்றும் தோல்விகளும், இராஜ்யத்தில் மனுக்குலத்தை பரிசுத்தத்தில் கொண்டு வருவதற்கு அவர்கள் செய்யும் விசேஷ வேலைகளுக்கு அவர்களை ஆயத்தப்படுத்தும். அவர்கள் தரிக்கும் நிலையானது தெய்வீக பிரமாணங்களுக்கு உண்மையாக கீழ்ப்படிவதின் மூலம் பெற்று கொள்ளும் பரிபூரண நிலையாகும்.

ஏசாயா 40 :3 ஆம் வசனத்தை குறித்த விமர்சனத்தை பற்றி ஆதாம் கிளார்க் எழுதும் பொழுது - "இந்த ஒரு யோசனை கிழக்கத்திய இராஜாக்களின் வழக்கத்திலிருந்து எடுக்கப்பட்டதாகும். இவர்கள் எந்த ஒரு பயணத்தை மேற்கொண்டாலும், விசேஷமாக வனாந்திரம் மற்றும் பழக்கமில்லாத நாடுகள் வழியாக செல்லவேண்டியதாக இருந்தால், இவர்களுக்கு முன் ஒரு முன்னோடியை அனுப்பி,பயணத்திற்குரிய ஆயத்தங்களையும், வழியில் இருக்கும் தடைகளை அகற்றவும், பாதைகளை சீர்ப்படுத்தவும்,இவர்களை முன் அனுப்பினார்கள். "

(ஏசாயா 40:1 -11 ) வசன பகுதியில் யூத ஜனங்கள் "அவர்களின் பாவத்திற்கு இரட்டிப்பான" தண்டனைகளை பெற்ற பின் கிடைத்த ஆறுதலின் செய்தியாகும். (ஏசாயா 40:2) வருங்காலத்தில் இவர்கள் செய்யவேண்டிய முக்கியமான வேலைக்கு கடந்த கால வரலாறு இவர்களை பக்குவமாக ஆயத்தப்படுத்தியது. எரேமியாவில் ஒரு வித்தியாசமான உருவணியை நாம் காணலாம் - "*பாபிலோனின் நடுவிலிருந்தோடி, கல்தேயரின் தேசத்தைவிட்டுப் புறப்பட்டு, மந்தையின் முன்நடக்கும் கடாக்களைப்போல் இருங்கள்.*" (எரேமியா 50 :8)

ஏசாயா 35 :8 ஆம் வசனத்தில் இதை "பரிசுத்த பாதை" என்று அழைக்கப்படுகிறது. இந்த பாதையானது அசுத்தத்திலிருந்து பரிசுத்தத்திற்கு வழி நடத்தும். இதை "பாதை" மற்றும் பெரும் பாதை" என்றும் அழைக்கப்படுகிறது. இதற்கு "derek" ( #1870) என்ற எபிரெய பதமாகும். "derek" என்பதற்கு "இயல்பான முறையில் ஜீவனுக்காக நடைபெறும் செயல்" அல்லது "செயல்படும் விதம்" என்று பொருள்படும். இந்தப்பாதையில் நடப்போரை முழு உலகத்தின் மனுக்குலத்தை, ஒரு புதிய செயலுக்கு உட்படுத்தி தங்களுடைய வாழ்க்கையில் பரிசுத்தப் படுவதற்கு கற்று கொடுக்கும்.

இந்த பாதையானது அசுத்தமானவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், அந்த பாதை முழுவதும் அசுத்தமாகவே பயணிக்க முடியாது. ஆனால் அவர்களின் இணக்கமற்ற அதாவது சமாதானத்திற்கிணங்காத நிலைமை வெளிப்படுத்தப்படும் பொழுது அவர்கள் ஜீவனிலிருந்து அறுப்புண்டு போவார்கள். (ஏசாயா 65 :20) விடா முயற்சியோடு அதில் நடப்பவர்களுக்கு தவறு செய்யாமல் நித்திய ஜீவனை பெற்று கொள்ளும் வாய்ப்பை பற்றி போதிக்கப்படும்.

சாத்தான் முழுமையாக கட்டப்பட்டதினால் (வெளி 20:1-3) "கெர்ஜிக்கிற சிங்கம்" (1 பேதுரு 5 :8) போல் சுற்றி திரிந்த அவன் அங்கு இருப்பதில்லை. அங்கு நீதி வாசமாயிருப்பதினால் பயங்கரமான சோதனைகளின் துஷ்ட மிருகங்கள் அங்கு காணப்படுவதும் இல்லை.

இந்த பாதையில் நடப்போர் மீட்டு கொள்ளப்படுவார்கள். ". .கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள்" (ஏசாயா 35 :10) ஜீவனுள்ளோர் தேசத்திற்கு திரும்பி (சங்கீதம் 116:9) இஸ்ரயேலுக்கு வருவார்கள். (ஏசாயா 2:2,3) திரளான கூட்டம் பாடினது போல் - "..... *அப்பொழுது திரளான ஜனங்கள் இடும் ஆரவாரம்போலவும், பெருவெள்ள இரைச்சல்போலவும், பலத்த இடிமுழக்கம்போலவும், ஒரு சத்தமுண்டாகி: அல்லேலூயா, சர்வவல்லமையுள்ள தேவனாகியகர்த்தர் ராஜ்யபாரம்பண்ணுகிறார்.*" (வெளி 19 :6)

இவ்வளவு மகிமையான எதிர்பார்ப்புகள் இருக்க ," உம்முடைய இராஜ்யம் வருக உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூமியிலும் செய்யப்படுவதாக" என்ற ஜெபத்தை நாம் எப்படி ஜெபிக்காமல் இருப்பது? (மத்தேயு 6 :10)

## சத்திய வார்த்தை




**சத்திய வார்த்தை மாசுப்பட்ட அரிய கண்ணாடி ஜன்னலைப்போல,**
**வெளியே நின்று உற்றப்பார்த்தாலும் இரம்யமாக இல்லை,**
**தெளிவான சித்திரக்கலையல்ல ஆனால் குழப்பதினால் ஆட்கொள்ளப்படுகிறோம்,**
**இதைத்தான் மகிமையானது உள்ளிருந்து வெளிப்படுத்தும்,**
**அதை மிக ஆனந்தத்துடன் பார்த்து அதனை பருகுவோர்,**
**வளைந்தேறுகிற படிகட்டில் ஏறி, கோட்டை வாயிலுக்குள் நுழைவர்**

**சத்திய கோட்டையின் புனிதமான நுழைவாயில் தாழ்வாகவுள்ளது,**
**உவகையும் அதினுள் நுழைபவரின் கால்கள் முடங்கவும்**
**ஆழமான பணிவுடனும், ஒருமுறை உள்ளே காலை ஓடைகளின் ,**
**ஒளி ஒவ்வொரு நிறத்தையும் தெய்வீகமாக பிரகாசிக்கும் போதும் ,**
**வழிகாட்டியின் பெரிய சித்திரக்கலையை பார்த்து, கரங்களை உயர்த்தி**
**இன்பத்தினால் அதிசயத்தையும், அன்பையும், பணிவுடன் போற்றுவோம்.**

Poems of Dawn p.6

# பரலோகம் அல்ல பூமியே



எல்லோருமாக இல்லாவிட்டாலும், பெரும்பாலான மொழி பெயர்ப்பாளர்கள் இந்த வாக்கியத்தை கிரேக்க பாஷையிலிருந்து ஆங்கிலத்தில் எவ்வாறு மொழி பெயர்ப்பது என்பதை குறித்து ஒரே மாதிரியான கருத்தை கொண்டுள்ளனர். பென்ஜமீன் வில்சனும் கூட தன்னுடைய Emphatic Diaglotte -ல் இந்த வார்த்தைகளுக்கு KJV ல் கொடுக்கப்பட்டுள்ள அர்த்தத்தை இங்கு கொடுத்துள்ளார். இதை அவர்கள் செய்வதற்கான காரணம் மூன்று முக்கியமான கேள்விகளை அடிப்படையாக கொண்டிருப்பதாகும்.

### 1.இயேசு அன்றைய தினம் பரதீசுக்கு சென்றாரா?

அப்போஸ்தலர்களின் புத்தகத்தில் மீண்டும் மீண்டுமாக இயேசு மரித்து பரலோக தந்தையால் உயிர்த்தெழுப்பட்டார் என்ற உண்மை வலியுறுத்தப்படுகிறது. ஆலயத்தில் ஜனங்களிடம் பேசும் பொழுது,பேதுரு -"*அப்படியிருந்தும், தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின் படியேயும், அவருடைய முன்னறிவின்படியேயும் ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலைசெய்தீர்கள். தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார். அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது.*"(அப்போஸ்தலர் 2 :23,24) மூன்றாம் நாள் இது சம்பவித்தது என்று பேதுரு குறிப்பிட்டார் (அப்போஸ்தலர் 10 :40) பெத்தானியாவிலிருந்து பரத்திற்கு எடுத்து செல்லும் முன் இயேசு தாமே சொன்னதை இவர் கேட்டிருக்கிறார். (லூக்கா 24 :46) இயேசு மரித்த பின் கல்லறையில் வைக்கப்பட்டார் (பரதீசுக்கு போகவில்லை) என்று அறிந்திருந்தார். நிச்சயமாக அவரால் முடியாத ஒன்றை அந்த கள்ளனுக்கு இயேசு வாக்களித்திருக்க மாட்டார்.

### 2.இயேசு அன்றைய தினம் நரகத்திற்கு சென்றாரா?

"அவருடைய ஆத்துமா பாதாளத்தில் விடப்படுவதில்லை (அப்போஸ்தலர் 2 :31) என்று பேதுரு கூறுகிறார். அந்நாளில் இயேசு பாதாளத்திற்கு சென்றிருந்தால், அந்த கள்ளனுக்கு கொடுத்த வாக்கு எங்கே ?

### 3.இயேசு தன்னை நினைத்துக்கொள்ளும் படி சொன்னதினால் மட்டுமே அந்த கள்ளனுக்கு இரட்சிப்பு கிடைத்ததா?

தனக்கு சீஷர்களாக மாறி வரும் ராஜ்யத்தில் அவரோடு பங்கு பெறுவது எளிதான காரியமல்ல என்று இயேசு போதித்திருக்கிறார். "*அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். தன் ஜீவனை ரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் கண்டடைவான். மனுஷகுமாரன் தம்முடைய பிதாவின் மகிமைபொருந்தினவராய்த் தம்முடைய தூதரோடுங்கூட வருவார்; அப்பொழுது, அவனவன் கிரியைக்குத்தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார்.*" (மத்தேயு 16 :24, 25,27)

புதிய ஏற்பாடு முழுவதும் "பந்தைய பொருளை பெற நாம் "ஓட" வேண்டும் என்று சொல்லப்படுகிறது. (1கொரிந்தியர் 9 :24) முடிவு பரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான் (மத்தேயு 10:22) மரண பரியந்தம் விசுவாசமாயிருப்பவர்களுக்கு ஜீவ கிரீடம்" கொடுக்கப்படும். மரணத்தின் பொழுது மட்டும் அல்ல தங்களுடைய விசுவாசத்தை கிரியைகளோடு முடிவு பரியந்தம் நிலை நிற்கவேண்டும். (வெளி 2: 10)

Emphatic Diaglotte ல் கிரேக்க பதங்ளுக்கு கீழ், இடது பக்கத்தில் ஒவ்வொரு ஆங்கில பதமும் எழுதப்பட்டிருக்கும். வாசிக்கக்கூடிய ஆங்கில மொழிப்பெயர்ப்பு வலது பக்கத்தில் உள்ளது. ஆனால் நவீன முறையில் அச்சடிக்கப்பட்ட கிரேக்க பிரதிகள் குறியீடுகளோடு எழுதப்பட்டிருக்கிறது. மூலபிரதி, கிரேக்க வெளியிடுகளில் குறியீடுகளும் சொற்களுக்கு இடையில் இடைவெளி இல்லாதிருந்தது. அதில் பெரிய எழுத்துகளில் எழுதப்பட்டிருந்தது. Emphatic Diaglotte ல் .இடது புறத்தில் சொல்லர்த்தமான மொழிபெயர்ப்பை நாம் பார்த்தால் எழுத்துக்கள், கீழ்வருமாறு காணப்படும்

**ANDSAIDTOHIMTHEJESUSINDEEDISAYTOTHEE TO DAYWITH METHOUSHALTBEINTHEPARADISE**

தொடர்ந்து எழுதப்பட்டதை நாம் காணும் பொழுது, குறியீடுகள், இடைவெளி, பெரிய,சிறிய எழுத்துக்களின் அறிமுகம் எவ்வளவு பயனுள்ளதாக இருக்கிறது என்று நாம் மெச்சிக் கொள்ளலாம். மேலும், இது புதிய ஏற்பாட்டின் உண்மையான கிரேக்க பதிப்பில் ஒரு சிந்தனை முற்றுப் பெறுகிற அதே சமயம் மற்றொன்று துவங்குகிற புள்ளி எது என்று நிதானிப்பதில் உள்ள பிரச்சனைகள் மற்றும் தெளிவில்லாத நிலையை நாம் உணர்ந்து கொள்ளச் செய்கிறது. கிரேக்க மொழியின் வல்லுனர்களும் கூட இதை குறித்த காரியங்களில் ஒருவருக்கொருவர் ஒத்து போகிறதில்லை.

ஆதிகால கிரேக்க கைப்பிரதிகளை குறித்த Companion Bible - " இன்றைக்கு இருக்கும் குறியீடுகள் ,அன்று முழுமையாக காணப்படவில்லை" (இன்னும் நடைமுறையில் உள்ள கிரேக்க கைப்பிரதிகள் ) பத்தொன்பதாம் நூற்றாண்டு வரைக்கும்

வார்த்தைகளுக்கு இடையில் இடைவெளி இல்லாமல் வாசிக்கப்பட்டது.... அக்காலம் மட்டும் நவீன குறியீடுகளின் அடையாளங்கள் எங்கும் காணப்படவில்லை, அதற்கு பின் லத்தீனிலும் சேர்த்து எழுதப்பட்ட எழுத்துக்களிலும் மட்டுமே இது காணப்பட்டது. இவைகள் அனைத்திலிருந்தும் நாம் அறிந்து கொள்ளவேண்டியது என்னவென்றால், எல்லா நவீன கிரேக்க வெளியீடுகளும், மொழிப்பெயர்ப்புகளும், முழுமையாக மனித அதிகாரத்திற்கு உட்பட்டிருக்கிறது. மேலும், ஒரு தனிப்பட்ட பகுதியை வியாக்கியானம் செய்வதை தீர்மாணிப்பது அல்லது பாதிப்பு உண்டாக்குவதை சார்ந்தில்லை. இது ஆங்கில பெரிய எழுத்துக்களை பயன்படுத்துவதையும் இந்நாளின் நவீன இலக்கண மாற்றங்களையும் குறிக்கிறது. [1]

இயேசுவின் வார்த்தைகளின் அர்த்தம் ,இந்த குறியீடுகளின் அடிப்படையில் முற்றிலும் மாறுவதற்கு வாய்ப்புகள் உண்டு. ரோதர்ஹாம் மொழிபெயர்ப்பில் இந்த வார்த்தைகள் எவ்வளவு வித்தியாசப்படுகிறது என்று சற்று கவனியுங்கள். " அவர் அவனை நோக்கி - நான் இன்று உனக்கு சொல்லுகிறேன் - நீ என்னோடு கூட பரதீஸில் இருப்பாய்."

ஆங்கிலத்தில் ஒருவர் பேசும் வார்த்தைகள், மேற்கோள் குறியீடுகளுக்குள் எழுதப்படும். அதே போல் கிரேக்க "hoti "என்ற வார்த்தையானது (Strong's# 3754 ) "அது" என்று மொழிப்பெயர்க்கப்பட்டு, மேற்கோள் குறியீடுகள் செய்யும் வேலையை செய்கிறது. ஆனால் இப்பொழுது கிரேக்கத்தில் நேரடியான மேற்கோள் குறியீடுகள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. எடுத்து காட்டாக -இயேசு சகேயுவினிடம் வந்த பொழுது, "And Jesus said unto him that.....(Greek :hoti, இந்த வார்த்தை K J V யில் காணப்படுவதில்லை. "This day is salvation come to this house"(லூக்கா 19:9) இயேசு அந்த வீட்டிற்கு சென்ற நாளை தெளிவாக குறிப்பிடுகிறார். " hoti " என்ற வார்த்தை லூக்கா 23 :43 ஆம் வசனத்தில் இல்லாததினாலும், நிச்சயமற்ற பொருளை கொடுப்பதினாலும், மொழி பெயர்ப்பாளர்கள்-

1. இயேசு கள்ளனிடம் ,அன்றைய தினமே பரதீஸில் அவரோடு கூட இருப்பதாக சொல்லியிருக்கலாம் அல்லது

2." இன்றைக்கு " என்ற வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, அந்த வாக்குறுதியானது வருங்காலத்தில் நிறைவேறும் என்றும் மொழிபெயர்க்கலாம் என்று யோசித்திருக்க உபாகமம்4 :26 ஆம் வசனத்தை மாதிரியாக எடுத்துக் காட்டுகிறது. "*இந்நாளில் உங்களுக்கு விரோதமாய் வானத்தையும் பூமியையும் சாட்சி வைக்கிறேன்; நீங்கள் அதிலே நெடுநாள் இராமல் நிர்மூலமாக்கப்படுவீர்கள்.*" இந்த ஒரு விவரிப்பு 42 முறைகள் எழுதப்பட்டிருக்கிறது. "மெய்யாகவே" என்ற வார்த்தை "ஆமென்" அல்லது "அப்படியே ஆகக்கடவது" என்று பொருள் கொடுப்பது போல, "semeron " என்ற வார்த்தை (Strong's #4594, "இன்றைக்கு"என்ற பதம் பதினெட்டு முறைகளும், "இந்த நாள்" என்ற பதம் இருபது முறைகளும் K J V வேதாகமத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. )

இயேசுவின் சொற்களுக்கு ஒரு முக்கியத்துவத்தையும் தனிதன்மையையும் கொடுத்தது. *"இயேசுவை நோக்கி - ஆண்டவரே நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்பொழுது அடியேனை நினைத்தருளும் என்றான்."* (லூக்கா 23: 42) அந்த கள்ளன் வருங்காலத்தை மற்றும் வருங்கால "இராஜ்யத்தை" பற்றியும் யோசித்து கொண்டிருந்தான். அவர்கள் அன்று மரிப்பார்கள் என்று அவன் அறிந்திருந்தான். இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் பொழுது, அவனை " நினைவு கூறுவதாக" இயேசு அவனிடம் சொன்னார்

## பரதீஸ்

பரதீஸ் எங்குள்ளது ? இது பரலோகமல்ல,மேலும் இயேசு பரலோகத்தை குறித்து பேசுவதாக அந்த கள்ளன் நிச்சயமாக நினைக்கவில்லை. யூதர்களின் போதனைகளிலோ அல்லது சிந்தையிலோ, இப்படிப்பட்ட விசுவாசம் எந்த பகுதியிலும் இருந்ததில்லை. சில யூதர்கள் மரித்தோரின் உயிர்த்தெழுதலை விசுவாசித்தார்கள், சிலர் அதை விசுவாசிக்கவில்லை. "என்னத்தினாலென்றால், சதுசேயர் உயிர்த்தெழுதல் இல்லையென்றும், தேவதூதனும் ஆவியும் இல்லையென்றும் சொல்லுகிறார்கள். பரிசேயரோ அவ்விரண்டும் உண்டென்று ஒப்புக்கொள்ளுகிறார்கள்." (அப்போஸ்தலர் 23:8) இந்த சதுசேயர்கள் தங்களுடைய பழமையான எழுத்துக்களில், துன்மார்க்கரான இராஜாக்களையும் " நித்திரையில்" இருக்கிறார்கள் என்று ஏன் குறிப்பிட்டிருக்கிறார்கள். என்ற சதுசேயர்கள் சொல்லும் விளக்கத்தை குறித்து வேதம் நமக்கு எதுவும் விவரிப்பதில்லை. (1இராஜாக்கள் 22 :40 ஆம் வசனத்தை காண) எதிர்காலத்தில் எழும்பும் நம்பிக்கையிருந்தால் மட்டுமே "நித்திரை" என்ற வார்த்தை இங்கு வாக்கியத்தின் முழுமையான பொருளைக் கொடுக்கும்.

பரதீஸ் பரலோகமாக நினைக்கப்படுவதற்கு இதைக் காட்டிலும் கடினமான எதிர்ப்புகள் உள்ளன. ஒருவர் முதலில் பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டால் மட்டுமே உயிர்த்தெழுதலில் பரத்திற்குரிய மேனியை பெற முடியும். (1பேதுரு 1 :3, 4) இயேசு இந்த வசனப்பகுதியை பேசும் பொழுது அவர் மட்டுமே பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப் பட்டவராக இருந்தார். (மத்தேயு 3:16,17 யோவான் 7:39 , அப்போஸ்தலர் 1:5,8 2:4) ஆவியினால் ஜெனிப்பித்தல் தொடர்ந்து ஆவியினால் பிறக்கவேண்டும். (1கொரிந்தியர் 15 :47 -50) தேவனுடைய இராஜ்யத்தை காண்பதற்கு ஒருவன் "மறுபடியும் பிறக்க" வேண்டும் என்று இயேசு நிக்கோதேமிடம் விவரித்தார். (யோவான் 3 :3 ,5) இப்படிப்படட ஒரு காரியம் மனம் வருந்திய கள்ளனிடம் நிச்சயமாக ஏற்படவில்லை.

Paradeisos,என்ற கிரேக்க பதம் (Strong's#3857) paradace என்ற எபிரெய பதத்திலிருந்து (Strong's#6508) எடுக்கப் பட்டுள்ளது. இதற்கு "பூங்கா" என்று பொருள், பழைய ஏற்பாட்டில் நந்தவனம் அல்லது பழத்தோட்டம் என்று மொழிப் பெயர்க்கப்பட்டுள்ளது. Paradeisos என்பதற்கு "ஏதேன் (வருங்கால மகிழ்ச்சிக்குரிய ஸ்தலம் )" என்று ஸ்டிராங்க்ஸ் கூறுகிறார். இந்த கிரேக்க வார்த்தையானது கீழ்காணும் இரண்டு இடங்களில் காணப்படுகிறது

*" அந்த மனுஷன் பரதீஸ்க்குள் எடுக்கப்பட்டு, மனுஷர் பேசப்படாததும் வாக்குக்கும் எட்டாததுமாகிய வார்த்தைகளை கேட்டான் என்று அறிந்திருக்கிறேன்." (11கொரிந்தியர் 12 :3)*

*" ஆவியானவர் சபைக்கு சொல்லுகிறதை காதுள்ளவன் கேட்கக்கடவன் ஜெயம் கொள்ளுகிறவன் எவனோ*

1. Companion Bible, Appendix 94(emphasis in the original)

*அவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவ வருட்சத்தின் கனியை புசிக்க கொடுப்பேன் என்றெழுது* " (வெளி 2 : 7)

"ஜீவ விருட்சம்" என்ற குறிப்பு, உண்மையான ஏதேனை சிந்தைக்கு கொண்டு வருகிறது. "*தேவனாகிய கர்த்தர், பார்வைக்கு அழகும் புசிப்புக்கு நலமுமான சகலவித விருட்சங்களையும், தோட்டத்தின் நடுவிலே ஜீவவிருட்சத்தையும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தையும் பூமியிலிருந்து முளைக்கப்பண்ணினார்.*" (ஆதியாகமம் 2:9)

"*பரதீஸ் தொலைந்ததை பற்றிய விமர்சனத்தோடு வேதாகமம் துவங்கி, வருங்காலத்தில் நீதியின் ஆட்சிக்கு உட்பட்டு, அதை சம்மந்தப்பட்ட விதிமுறைகளை மனப்பூர்வமாக ஏற்று கொள்பவர்களுக்கு வருங்காலத்தில் "ஏதேன் திரும்பகொடுக்கப்படும் என்பதோடு முடிவடைகிறது*-" பின்பு, *பளிங்கைப்போல் தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டுவருகிறதை எனக்குக் காண்பித்தான். நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டுவிதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள்.ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்.*" (வெளி22 :1,2,17)

முதலில் பூமிக்குரிய பரதீஸாகிய ஏதேன் தோட்டத்தை எப்படியிருந்தது என்று மனக் கண்களுக்கு முன் கொண்டு வந்து பார்த்தால் நாம் இன்னும் தெளிவாக ஏதேனை பற்றி புரிந்து கொள்ளலாம். ஆதாம் மற்றும் ஏவாள் எந்த விதமான உடல், மனம்,மற்றும் ஒழுக்க ரீதியான குறைவுகளோ, வியாதிகளோ இன்றி வாழ்க்கையை மகிழ்ச்சியோடு அனுபவித்தார்கள். எப்பக்கத்திலும் எந்த விதமான பயமின்றி அவர்களோடு மிருக இனங்களும் படைக்கப்பட்டது. தேவைப்பட்ட சிறு முயற்சிகளினால் பூமி அதிகமான பலன் தந்தது. ஆனும் பெண்ணும் தங்களுடைய சிருஷ்டிகரோடு நித்தம் உரையாடி மகிழ்ந்தார்கள் (ஆதியாகமம் 3:8) எல்லாவற்றிற்கும் மேலாக அங்கு மரணம் இல்லை. அவர்களை சுற்றியிருந்த சுற்றுச் சூழல் எல்லா விதத்திலும் மனித இனத்திற்கு முற்றிலும் ஏற்றதாயிருந்தது. உண்மையில் தேவன்தாமே, "*அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது; சாயங்காலமும் விடியற்காலமுமாகி ஆறாம் நாள் ஆயிற்று.*"(ஆதியாகமம் 1:31)என்றார். தேவனுடைய திட்டம் பூரண நிலையை அடையும் பொழுது, அதாவது, பூமியில் உள்ள முழுக் குடும்பங்களும் ஆசீர்வதிக்கப்படும் பொழுது, இந்த பரதீஸின் நிலைமை பூமியின் மேல் திரும்ப கொடுக்கப்படும். (எசேக்கியேல் 36 :35,36, ஏசாயா 35 :1,2)

மனம் வருந்திய கள்ளன் அங்கிருப்பான், உண்மையில் இரு கள்ளர்களும் ஜீவனோடு உயிர்ப்பிக்கப்படுவார்கள், (அப்போஸ்தலர்24 :15) இயேசு அந்த இரண்டாவது கள்ளனிடம் வருங்காலத்தை குறித்து பேச வில்லை. ஏனென்றால் அவன் அதை பற்றி விசுவாசிக்கவும் இல்லை, அதை குறித்து கேட்கவும் இல்லை. எப்படியிருந்தாலும் இயேசு இரண்டாம் கள்ளனை குறித்து எந்த தீர்ப்பையும் சொல்லவில்லை. வரும் உயிர்த்தெழுதலில் ரோம வீரர்களோடு தங்களுடைய பதவிகளையும் அதிகாரத்தையும் தக்க வைத்து கொள்வதற்காக எதையும் செய்ய துணிந்த இரத்த வெறி கொண்ட பரிசேயர்களும், சதுசேயர்களும் எழுந்திருப்பார்கள். இவர்கள் செய்த கிரியைகளினிமித்தம் இப்படிப்பட்ட பரிசை பெறாமல்,இயேசு தன்னுடைய ஜீவனை அனைவருக்கும் மீட்கும் பொருளாக தந்ததினால், பரதீஸில் இருப்பார்கள். "*எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே; இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது*"(1தீமோத்தேயு 2:6) "*ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப் படுவார்கள்.*" (1கொரிந்தியர் 15 :22,ரோமர் 5:18)

எப்படியிருந்தாலும் , மனம் வருந்திய கள்ளனின் இருதயத்தின் நோக்கமானது, இராஜ்யத்தின் கோட்பாடுகளை வெகு சீக்கிரம் ஏற்றுக்கொண்டு விசேஷமாக ஆசீர்வதிக்கப்பட்டு, கீழ்ப்படியும் மற்றவர்களோடு கூட நித்திய ஜீவனை பெற்று கொள்வான் என்று தெரிகிறது.


## மரண படுக்கையில் மனம் வருந்துதல்

ஒருவன் தன்னுடைய வாழ் நாட்கள் முழுவதும் தனக்கு பிரியமான எதை வேண்டுமானாலும் செய்து விட்டு, "மரண படுக்கை"யில் மனம் வருந்தினால் நிச்சயமாக இரட்சிக்கப்படுவோம் என்று லூக்கா 23:43 ஆம் வசனம் போதிப்பதில்லை. இந்த வசனத்தில் சொல்லப்படும் மற்ற உண்மைகள் -

1. கள்ளன் அன்றைய தினம் பரதீஸ்க்கு செல்லவில்லை, அவன் மரித்து, மரணத்திற்குள் நித்திரையில் உயிர்த்தெழுதலுக்காக காத்திருக்கிறான்.
2. இயேசு கிறிஸ்துவும் அன்றைக்கு பரதீஸ்க்குசெல்ல வில்லை, அவர் மரித்த இரண்டு நாட்களுக்கு பின் உயிர்த்தெழுந்தார்.
3. பரதீஸ், அதாவது திரும்ப கொடுக்கப்படும் ஏதேன், இன்றைய நாளில் மட்டும் அல்ல அந்நாளிலும் காணப்படவில்லை.
4. இன்னும் நடை பெறாவிட்டாலும் கிறிஸ்துவின் இராஜ்யத்தில் இந்த முழு உலகமும் பரதீஸாக (ஏதேன் திரும்ப கொடுக்கப்படும்) மாறும்.

"*மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்.அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது.சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவர்: இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார். பின்னும், அவர்: இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகள், இவைகளை எழுது என்றார்.*" (வெளி 21:3 -5)

இராஜ்யத்தில், இந்த முழு உலகத்தின் மனுக்குலத்தை ஆசீர்வதிப்பதற்கான தேவனுடைய, இந்த மிக பெரிய திட்டம் எவ்வளவு அற்புதமாக இருக்கிறது. (எசேக்கியேல் 34 :26)



"சகல ஜாதிகளையும் அசையப்பண்ணுவேன், சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் வருவார்; இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப்பண்ணுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." (ஆகாய் 2 :7)[1]

Aaran Marten

கிறிஸ்தவர்கள் பரலோகத்திற்குரிய பரிசை எதிர்பார்த்து கொண்டிருந்தாலும் வேதாகமத்தில் இந்த உலகத்தின் மனுக்குலத்திற்கு வாக்களிக்கப்பட்ட அநேக ஆசீர்வாதங்களை எண்ணிப்பார்க்கையில் மகிழ்ச்சி அடைவதை நாம் தவிர்க்கமுடியாது. "கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்தக்களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேலிருக்கும்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்." (ஏசாயா 35:10) இந்த உலகத்தை இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் சூழ்ந்து கொண்டிருந்தாலும், இந்நாள் வரைக்கும் மனுக்குலம் அறியாமையில் மூழ்கிக் கொண்டிருக்கிறது. நிகழ் காலத்தில் பின் வரும் காரியங்களை குறித்து அநேகருக்கு நம்பிக்கையில்லை. மற்றவர்கள், இயேசுவை பின்பற்றி, தங்களை அப்பணித்து, அவரோடு கூட பலி செலுத்துபவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட பரலோக பரிசுகளை தவறாக தங்களுக்கென்று உரிமை கோருகிறார்கள். சிலர் பழமையான பாரம்பரிய பழக்கவழக்கங்களையும் விசுவாச அறிக்கைகளையும் இறுகப்பற்றிக் கொண்டு, மனுக்குலத்தில் அநேகரை நித்திய ஆக்கினைக்கு நியாயம் தீர்த்துக் கொண்டிருக்கிறார்கள். மனிதன் தன்னுடைய நித்திய வாழ்வுக்காக என்ன நினைத்திருந்தாலும் சரி, தேவனுடைய அளவற்ற அன்பு மற்றும் ஞானத்தினால், அவர் வைத்திருக்கும் திட்டத்தின் பலனாக சகலமும் திரும்ப கொடுத்தலின் காலத்தில், பூமி முழுமையும் ஆசீர்வதிக்கப்படும் என்று வேத வசனங்கள் குறிப்பிடுகிறது.

## ஈடுபலி அனைவரையும் மீட்கும்

"எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் (தேவன்) சித்தமுள்ளவராயிருக்கிறார்." (1தீமோத்தேயு 2 : 4) முழு மனுக்குலத்தை ஆதாமின் மூலம் வந்த மரணத்திலிருந்து மீட்க தேவன் விரும்பினால், இதற்கான மனிதனால் போடப்படும், எவ்வளவு பெரிதான திட்டங்களும், தேவனுடைய வல்லமைக்கு முன், அவைகளை செயல்படுத்துவது, மிகக் குறைவானதாகவே இருக்கும். ஆதாம் செய்த ஆதி பாவத்திற்கு செலுத்த மற்றொரு பூரண மனித ஜீவன் வேண்டும் - *"தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே; இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது"* (1தீமோத்தேயு 2 :5,6) இந்த வசனத்தில் "அனைவரும்" என்ற வார்த்தை "எல்லா விசுவாசிகளுக்கும்", அல்லது "எல்லா கிறிஸ்தவர்களுக்கும்" மட்டுமே என்று நினைத்து கொள்ளாதபடிக்கு வேத வசனங்கள் நம்மை தெளிவுபடுத்துகிறது - *"நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்."* (1யோவான் 2 :2), *"பூமியின் எல்லைகளெல்லாம் நினைவுகூர்ந்து கர்த்தரிடத்தில் திரும்பும்; ஜாதிகளுடைய சந்ததிகளெல்லாம் உமது சமூகத்தில் தொழுதுகொள்ளும்."* (சங்கீதம் 22:27), *"பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்."* (ஆதியாகமம் 12 :3) , *"சமாதான வழியை அவர்கள் அறியாதிருக்கிறார்கள்; அவர்கள் கண்களுக்கு முன்பாகத் தெய்வபயமில்லை, என்று எழுதியிருக்கிறதே. மேலும், வாய்கள் யாவும் அடைக்கப்படும்படிக்கும், உலகத்தார் யாவரும் தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்புக்கு ஏதுவானவர்களாகும்படிக்கும், நியாயப்பிரமாணம் சொல்லுகிறதெல்லாம் நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டிருக்கிறவர்களுக்கே சொல்லுகிறதென்று அறிந்திருக்கிறோம்."* (ரோமர் 5:17 -19) ஆம், கல்வாரியில் இயேசு செலுத்திய ஈடுகிரையம் முழு மனுக்குலத்திற்கும் உரியதாகும், இதில் இயேசுவை என்றுமே பின்பற்றாதவரும் அடங்குவர்.

# சகல ஜாதிகளின் விரு

தேவன் முழு மனுக்குலத்தின் [illegible] ஈடு [illegible] சம்பவிக்கவில்லை ? வாக்களிக்கப்பட்ட இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை மனுக்குலத்தை சேராதபடிக்கு தேக்கி வைப்பது எது? இந்த உலகம் இன்னும் தேவனிடம் ஏன் திரும்ப வில்லை?

## உலகின் மாற்றம், எதிர்காலத்தில்

"**அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்.**" ( ஏசாயா 55 :11) யோர்தானில் ஆண்டவரின் ஞானஸ்நானத்திலிருந்து இந்நேரம் வரைக்கும் விசுவாசிகளிலிருந்து "சிறுமந்தை" யாக அழைக்கப்பட்டு தேர்வு நடந்து கொண்டிருக்கிறது. (லூக்கா 12 : 32) பழைய ஏற்பாட்டின் இஸ்ரயேலின் காலத்தை போல இதுவும் ஒரு யுகம் . இதில் கிறிஸ்துவுக்கு ஏற்ற மணவாட்டிகளாக தேவன் தம்முடைய ஆவியை கொடுத்து வளர்த்து வருகிறார். முழு மனுக்குலமும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே தேவனுடைய சித்தம். இந்த ஒரு காரியம் முடிவு பெறாததினால், உலகம் மாற்றப்படுவதற்கான முயற்சிகள் இன்னும் எடுக்கப்படவில்லை. ஆகவே இனி வருங்காலத்தில இவைகள் நடைபெற உள்ளது.

இந்த உலகத்தில் எந்த அளவுக்கு சுவிசேஷ செய்திகள் கேட்டு கொண்டிருந்தாலும், அதாவது தேவனுடைய சித்தத்தை செய்ய தங்களை அற்பணிக்காவிட்டாலும், ஒரு அனுகூலமான வாய்ப்பு பெற்று ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். இக்காலத்தில் அவர்கள் சோதனைக்கு உட்படாமல், இருந்தாலும், உயிர்த்தெழுதலின்

1. All Scripture quotations are from theNASB unless otherwise specified

பொழுது ஆதாமின் வம்ச வழி வந்த அனைவரும் நித்திய ஜீவனை பெற பாத்திரவான்களா என்று சோதிக்கப்படுவார்கள். மனம் வருந்தி, மறுரூபமாவதற்கு இப்பொழுது மனுக்குலத்திற்கு அழைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. வேத வசனங்களின் அடிப்படையில், நீதியான நல் நடக்கையில் நடக்க முயற்சி செய்பவர்களை நாம் நிச்சயமாக ஊக்குவிக்கவேண்டும். இப்பொழுது நாம் செய்யும் சுய பரிசோதனை, பாவத்தை தவிர்ப்பது மற்றும் வேதாகம கோட்பாடுகளை கைக்கொள்வது, போன்ற காரியங்கள் வருங்காலத்தில் தேவனுடைய இராஜ்யத்தில் பெரும்பாதையில் நடப்போரை நடத்துவதற்கு உதவியாக இருக்கும். "அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர்போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார் என்றான்." (அப்போஸ்தலர் 17 : 30,31)

## பரிபூரண மனுஷனுக்கு பரிபூரண உலகம்

இந்த உலகம் தேவனிடத்தில் திரும்புவது, என்னவென்றால், அது ஜீவனை பெறுவதற்கு மட்டும் அல்ல, ஏதேனில் ஆதாம் ஏவாள் பெற்றிருந்த பரிபூரண சரீரம் , சிந்தை, ஒழுக்கமும் திரும்ப கொடுக்கப்படும் பூமி ஏதேன் இருந்த நிலைக்கு திரும்ப மாற்றப்படும் ". *வனாந்தரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து, கடுவெளி களித்து, புஷ்பத்தைப்போலச் செழிக்கும். அது மிகுதியாய்ச் செழித்துப் பூரித்து ஆனந்தக்களிப்புடன் பாடும்; லீபனோனின் மகிமையும், கர்மேல்சாரோன் என்பவைகளின் அலங்காரமும் அதற்கு அளிக்கப்படும்; அவர்கள் கர்த்தருடைய மகிமையையும், நமது தேவனுடைய மகத்துவத்தையும் காண்பார்கள்."* (ஏசாயா 35 : 1,2 )

தேவன் இந்த பூமியை ஏதேனின் நிலைமைக்கு திரும்ப மாற்ற போகிறார் என்பதை வேத வசனங்கள தெளிவாக குறிப்பிடுகிறது. "*நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டுவிதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள். இனி ஒரு சாபமுமிராது. தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும்.*"(வெளி 22 : 2,3) ". *கர்த்தர் சீயோனுக்கு ஆறுதல் செய்வார்; அவர் அதின் பாழான ஸ்தலங்களையெல்லாம் தேறுதலடையச்செய்து, அதின் வனாந்தரத்தை ஏதேனைப்போலவும், அதின் அவாந்தரவெளியைக் கர்த்தரின் தோட்டத்தைப்போலவும் ஆக்குவார்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் துதியும் கீதசத்தமும் அதில் உண்டாயிருக்கும்."( ஏசாயா 51: 3) "உலகத்தின் திரும்பகொடுத்தலின் வேலைகள் சகலத்தையும் முந்திய சீருக்கு கொண்டு வருவதையும் உள்ளடக்கியுள்ளது.*

பரலோகம் அல்ல, பூரணப்பட்டு, சீர்பொருந்தப் பட்ட பூமி பூரண மனுஷனுடைய குடியிருப்புக்கு ஏற்ற சிறந்த இடமாகும். "வானத்திற்குரிய மேனிகளும் உண்டு பூமிக்குரிய மேனிகளும் உண்டு வானத்திற்குரிய மேனிகளுடைய மகிமையும் வேறே பூமிக்குரிய மேனிகளுடைய மகிமையும் வேறே " (1கொரிந்தியர் 15 :40) பரிபூரண மனிதனுக்கேற்ற பரிபூரண சுற்றுப்புறம் எப்படியிருக்கவேண்டும் என்று தேவன் அறிந்திருக்கிறார். அப்படிப்பட்டவைகளை தேவன் ஏதேன் தோட்டத்தில் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் கொடுத்திருந்தார். ஏதேன் என்ற எபிரெய பதத்தை "மகிழ்ச்சி" (அ) ஆனந்தம் " என்று மொழிப் பெயர்க்கப் பட்டிருக்கிறது. ஆகவே பூமி, ஏதேனை போல நிலைமையை பெற்று மகிழ்ச்சி அடையும் பொழுது, பரிபூரண மனுக்குலம் சந்தோஷப்பட்டு திருப்தி அடைவார்கள் - பரலோகத்திற்குரிய வாஞ்சை இனி அவர்களுக்கு இருப்பதில்லை.

பரலோக நம்பிக்கையை உரிமையை கோரும் அநேகர் தாங்கள் எதை கேட்கிறார்கள் என்பதை அறியாமல் இருக்கிறார்கள். பரலோகத்திற்கு சென்று அங்கு என்ன செய்வீர்கள் என்று கேட்டால், பூமிக்குரிய சகல நன்மைகளையும் நித்தியமாக அனுபவிப்போம் என்கிறார்கள். விட்டுப் போன தங்களுடைய குடும்பங்களோடும் நண்பர்களோடும் சேர்வோம் என்கிறார்கள். மற்றவர்கள் அங்கு சென்று என்ன செய்ய வேண்டும் என்பதை அறியோம் என்கிறார்கள். ஆனாலும் அங்கு செல்ல வேண்டும் என்பதை விரும்புகிறார்கள். இந்த உணர்ச்சிகரமான எதிர்ப்பார்ப்புகள் அனைத்தும் டாக்டர் ஆர்த்தர் கோலாஹன்ஸ் தன்னுடைய சொந்த நாடாகிய அயர்லாந்திற்கு எழுதின பிரபலமான நேசகீதமாகிய" கால்வே பே" கடைசி பத்தியில் மிக அருமையாக வெளிப் படுத்தியிருக்கிறார்.

ஒரு வேளை இதற்கு பிறகும் ஒரு வாழ்க்கை இருந்தால்,
அப்படியிருக்கும் என்றே நான் நிச்சயத்திருக்கிறேன்,
நான்தேவனிடத்தில்என்னுடைய பரலோகத்தை உருவாக்கும்படி கேட்பேன்,
ஐரீஷ் கடல் ஓரத்தில் உள்ள என் அருமை தேசத்தில்.

ஆயிர வருடத்தில் உலகத்தின் குடும்பங்களையும் ஆசீர்வதிக்க, உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்கள் பரலோகத்தில் "இராஜாக்களாகவும் ஆசாரியர்களாகவும் பூமியின்மேல் ஆளும் பொழுது" செய்யக்கூடிய வேலைகளை வேத வசனங்கள் விவரிக்கிறது. (வெளி 5 : 10) "*ஆனாலும் உன்னதமான வருடைய பரிசுத்தவான்கள் ராஜரீகத்தைப் பெற்று, என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்வார்கள் என்றான்.*"(தானியேல் 7 : 18) இந்த உலகம் மற்றும் விழுந்து போன தூதர்களுக்கு நியாயாதிபதிகள் என்று அழைக்கப்படுகிறார்கள். " *பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா? உலகம் உங்களால் நியாயந் தீர்க்கப்படுவதாயிருக்க, அற்ப வழக்குகளைத் தீர்க்க நீங்கள் அபாத்திரரா? தேவ தூதர்களையும் நியாயந்தீர்ப்போமென்று அறியீர்களா? அப்படியிருக்க, இந்த ஜீவனுக்கேற்றவைகளை நீங்கள் தீர்த்துக் கொள்ளக்கூடாதிருக்கிறது எப்படி?* (1கொரிந்தியர் 6 : 2,3)

ஒருவர் பரிசுத்தவான்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை எதிர்பார்த்து அதற்கு ஆயத்தப்படாவிட்டால், உண்மையில் அவர் பரலோகத்தை எதிர்பார்க்க வில்லை. அநேகர் உண்மையில் விரும்பவது (அவ்வப்பொழுது பரலோகமான பரதீஸை குறித்த தங்கள் விவரிப்பில் குறிப்பது ) சமாதானத்தின் பிரபு மற்றும்

அவருடைய பரிசுத்தவான்களின் ஆளுகைக்கு உட்பட்டு பூரணமாக சீர்பொருந்தப்பட்ட பூமியாகும். தாங்கள் கேட்டு கொள்ளுவதின் முக்கியத்தை உணராமல் அநேகர் பூரண உலகத்திற்காக ஜெபிக்கிறார்கள்."*உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக.*"(மத்தேயு 6 : 10) இந்த இராஜ்யத்தின் நிலைமையே சொல்லப்படாத மனுக்குலத்தின் ஆழமாக, விருப்பத்தின் ஆதாரமாக இருக்கிறது.

## ஏதேனுக்கான வாஞ்சை

அனைவரும் சந்தோஷத்தையும் சமாதானத்தையும் அநேக துறைகளில் தேடுகிறார்கள் - சொத்து, சமுதாயம், வேதாந்தம், மதம், குடும்பம், அரசியல், இன்னும் பல........ ஆயினும் தனி நபரின் சுயாதீனம் , நேரம் , திறமைகள், அளவற்ற ஆசைகள் அதிக அதிகமாக வளர்ந்து கொண்டேயிருக்கிறது. தேவனோடு ஐக்கியத்தை கிறிஸ்துவின் இரத்தத்தால் மறுபடியும் திரும்ப பெற்றால் மட்டுமே உண்மையான சந்தோஷம், சமாதானமும், மறு மலர்ச்சிகளும் பெற முடியும் "யாக்கோபின் தேவனைத் தன் துணையாகக் கொண்டிருந்து, தன் தேவனாகிய கர்த்தர்மேல் நம்பிக்கையை வைக்கிறவன் பாக்கியவான்."(சங்கீதம் 146 : 5)

இலவச சந்தை மூலதனம், ஜனநாயகம், கம்யூனிசம், சோஷியலிசம் மற்றும் தேசியமயமாக்குதலில் சமீப காலமாக மனுக்குலம் முயற்சித்த பல்வேறு அரசியல், பொருளாதார பரிசோதனைகளை கருத்தில் கொள்ளவும். ஒவ்வொன்றும் நீதியாகவும், நேர்மையாகவும், சமாதானமாகவும் காணப்படுகிறது. மேலும், உண்மையில் அடிக்கடி தவறாக வழிநடத்தப்பட்டாலும், சரியாக திட்டம் தீட்டாவிட்டாலும் இந்த அமைப்புகளின் உள்ளான நோக்கத்தில் சரியான நீதி, சமத்துவம், மற்றும் பொதுவாக மனுக்குலத்தை உயர்த்த வேண்டும் என்ற அடிப்படை விருப்பமாக உள்ளது எண்ணிக்கையில்லா டாலர்கள், பல்வேறு வகையில் காணப்படும் பாவங்களை விரட்ட செலவளிக்கப்படுகிறது - வியாதிகள், வறுமை, போதை பொருள், குற்றங்கள், யுத்தங்கள் போன்றவை. ஆனால் கிறிஸ்துவின் இராஜ்யத்தில் இவை அனைத்தும் முற்றிலுமாக வேரோடு அழிக்கப்படுவதை நாம் ஒப்பிட்டு பார்த்தால், இன்றைக்கு வெகு சில அளவிற்கே முன்னேற்றங்கள் ஏற்பட்டிருப்பதை நாம் காணலாம்.

பாவத்தின் விளைவுகளிலிருந்து விடுப்பட இந்த உலகம் ஏங்குகிறது. ஆதாம் ஏவாள் ஏதேன் தோட்டத்தில் "தேவனுடைய பிள்ளைகளாக" இருந்த நிலைமையை முழுமை திரும்பி பெற ஏங்குகிறது. பாவத்தின் கட்டுகளிலிருந்து விடுபடவும், உண்மையான விடுதலையை பெறவும் உலகம் விரும்புகிறது. சபை மற்றும் உலகத்திற்கு இருக்கும் விருப்பதை குறித்து அப்போஸ்தலர் பேசுகையில் - "*மேலும் தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக்கொண்டிருக்கிறது. அதேனென்றால் சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்கிற நம்பிக்கையோடே, அந்தச் சிருஷ்டியானது சுயஇஷ்டத்தினாலே அல்ல, கீழ்ப்படுத்தினவராலேயே மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது. ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப்படுகிறது. அதுவுமல்லாமல், ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம்.*"(ரோமர் 8: 19 -23)

எப்படிப்பட்ட அளவற்ற ஆசீர்வாதங்கள் இந்த உலகத்தின் மனுக்குலத்திற்காக காத்திருக்கிறது. உலக மனுக்குலத்திற்கு காத்திருக்கும் ஆசீர்வாதங்கள் தான் எத்தனை!, உலகத்திற்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கும் இந்த மகிமையான நம்பிக்கையை பார்க்கும்பொழுது அவைகளை மகிமையான ஆசீர்வாதங்களாக கருதவேண்டும். அதே சமயம், நேரம் கிடைக்கும்பொழுது உலகத்தோடு இந்த ஆசீர்வாதங்களை பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைய வேண்டும். ஆதாமின் சாபத்திலிருந்து மனுக்குலத்தை, தூக்கி எடுத்து, ஆசீர்வதித்து, தேவனோடு மீண்டுமாக ஒப்புரவாக்குவதில் சிறுமந்தையின் அங்கத்தினர்களாகிய விசுவாசமுள்ள ஒவ்வொருவரும் பங்கு பெறுவது ஒரு சிறப்புரிமையாகும். மனுக்குலம் முழுமையாக ஜீவனுக்கு திரும்பி, தேவனோடு இசைந்திருக்கும் பொழுது, அனைத்து ஜாதிகளின் விருப்பமும் "உண்மையில் நடந்து விட்டது என்று சொல்லப்படும்.

## தேவ குடும்பத்தின் ஒருமை

"ஒற்றுமையுடன ஒன்றாக ஒருமைபாட்டில் வாசம் செய்வது எவ்வளவு நன்மையும் இரம்யமுமாக இருக்கும். "
ஒருமைப்பாடான தேவனுடைய குடும்பத்தில் உள்ள
ஓரின்மை அவர் தம் பிள்ளைகள் தான் சொல்லும்.

அதினுள் ஒருவர் போதகர், மற்றவரெல்லாம் சகோதரர்கள்.
ஓர் சரீரமும், தலையாக கிறிஸ்துவும் கொண்டது.
அதே இடுக்கமான வாசலின் வழியாய் ஒரு ஒருத்தராய், பரிசுத்த ஆவியின் வழி நடத்துதலினாலே.


யூதரென்றும் கிரேக்கரென்றும் அடிமையென்றும் சுயாதீனனென்றும் இல்லை,
அனைவரும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாக இருக்கிறார்கள்.
நம் தப்பிதங்கள் அனைத்தும் நீதியின் உடையால் மறைக்கப்பட்டுள்ளது,
ஆனால் அவரின் ஓர் அன்பின் கட்டளையை கடைப்பிடிப்பர்.

எவ்வளவு பொக்கிஷமாக உள்ளது தேவனுடைய குடும்பம்,
ஒரே விசுவாசமும், நம்பிக்கையும், ஞானஸ்நானமும் அவர்களுடையதே.
அவர்களுடைய ராஜாவினோடே அவர்கள் ஆளுகையை பகிரும் வரை.சத்திய வார்த்தையை
அவர்கள் ஒரே மேஜையில் உண்ணுவர்

ஓ, ஏற்றுக் கொள்ளுதலை அவர்கள் அறிவார்கள்,
ஏனெனில் அவர்களுடைய ஒன்றான பிதா, தேவன்
அவர்களை தம்முடைய குமாரனுக்கு
மணவாட்டியாக அழைத்திருக்கிறார்.
அவருடைய சிங்காசனத்தில் அவர்களுடைய
மீட்பராகிய ஆண்டவர் அருகில் அமருவார்கள்.
அவர்களுடைய ராஜாவோடு கூட அவர்கள்
ஆளுகை செய்வார்கள்.

மரித்தோர் உயிர்தெழுந்த ஜீவனுள் நுழையும் தருவாயில்,
பரலோகத்திலும் பூலோகத்திலும் ஒற்றுமை நிலவும்,
"தொலைந்துப்போன பரதீஸ்" திரும்பவும் "திரும்பும்" -
தேவனை நோக்கி துதிப்பாடி அனைவரும் மகிமைபடுத்துவார்.

-Poems of the way,p.63



# திரும்ப கொடுத்தலின் காலங்கள்

**"உங்கள் பாவங்கள் நிவிர்த்திசெய்யப்படும்பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள்.உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும்." (அப்போஸ்தலர் 3 : 20 - 21)**

தாயின் வயிற்றிலிருந்து முடவனாக பிறந்த ஒருவன் குணமடைந்த காட்சியை கண்டு ஈர்க்கப்பட்ட கூட்டத்தின் மத்தியில் பேதுரு இந்த வசன பகுதியை பேசிக் கொண்டிருந்தார். இயேசு மேசியாவாக முந்தி பாடுப்படவேண்டியது அவசியம் என்று தேவனுடைய தீர்க்கதரிசிகள் முன் அறிவித்ததைப் பற்றி பேதுரு கூறினார் ( அப்போஸ்தலர் 3: 18) தங்களுடைய பாவத்திற்கு மனம் வருந்தும்படி வேண்டிக்கொண்டார். இந்த இயேசு "இளைப்பாருதலின் காலம்" வரைக்கும் பரலோகத்தில் இருப்பார் என்று தொடர்ந்து பேசினார்.

இதை கேட்ட ஜனங்கள் தங்களுடைய தேசம் திரும்ப விடுவிக்கப்பட்டு, தாவீது, சாலோமோன் இருந்த காலத்தின் நிலைக்கு மீண்டும் சீர்படுத்தப்படும் என்று எண்ணியிருக்க வேண்டும். அப்போஸ்தலர்களும் இவைகளையே எதிர்பார்த்தார்கள். இயேசு பரலோகத்திற்கு எடுத்து கொள்வதற்கு முன் அவர்கள் இயேசுவினிடம் பேசும் பொழுது,"ஆண்டவரே இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரயேலுக்கு திரும்பக்கொடுப்பீர்" (அப்போஸ்தலர் 1:6) ரோம பேரரசின் ஆதீக்கம் முடிந்து, யூதர்களுக்குரிய காரியங்களை தாங்களே தலைமையேற்று செய்யவும், வரலாற்று பூர்வமாக சொல்லப்பட்டு வருவதைப் போல், தேவனுக்கு ஏற்புடைய தேசமாக இருக்க விரும்பினார்கள்.

அமெரிக்க காங்கிரஸின் வீட்டின் நீண்ட நாள் சபாநாயகராகிய தாமஸ் "டிப்போ" நெயில் ஒரு முறை கூறும் பொழுது "அனைத்து அரசியலும் உள்நாட்டு விவகாரமே" என்றார். எருசலேம் மற்றும் கிறிஸ்துவின் முதல் சீஷர்களுக்கும் இதுவே நிலைமையாக இருந்தது. புறஜாதிகள், மற்றும் மரித்த நிலையில் உள்ள மற்றவர்களை பற்றி அவர்கள் யோசிக்கவே இல்லை. வருங்கால ஆட்சியாளர்களாக தங்களுடைய நிலையை அவர்கள் முன்னதாகவே பொறுப்பெடுத்தார்கள். சிலுவையில் அறையப்படும் இயேசு அவர்களிடம் இப்படியாக கேள்வி எழுப்பினார் - *"அவர் கப்பர் நகூமுக்கு வந்து, வீட்டிலே இருக்கும்போது, அவர்களை நோக்கி நீங்கள் வழியிலே எதைக்குறித்து உங்களுக்குள்ளே தர்க்கம் பண்ணினீர்கள் என்று கேட்டார். அதற்கு அவர்கள் பேசாமல் இருந்தார்கள் ஏனெனில் அவர்கள் தங்களுக்குள்ளே எவன் பெரியவன் என்று வழியில் தர்க்கம்பண்ணினார்கள்."* (மாற்கு 9:33,34)

பேதுரு தன்னுடைய பிரசங்கத்தில வேறு எந்த விதமான புதிய போதனைகளை சொல்லவில்லை என்பதை தெளிவுப்படுத்தினார். தேவனுடைய பரிசுத்த தீர்க்கதரிசிகள் பேசுகையில், "உலக துவக்கத்திலிருந்து" , என்ற வார்த்தைகள் "ஆதி யுகத்திலிருந்து" ( Weymouth) என்றும், "பழையதிலிருந்து " (RSV ) என்றும்," மனித சிந்தையிலிருந்து மிகப் பழமைவாய்ந்த காலத்திலிருந்து (Amplified) என்றும் மொழிப் பெயர்க்கப்பட்டிருக்கிறது. இதை நிரூபிக்க அவர் மோசே சொன்னார் என்று *"உன் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்; அவருக்குச் செவிகொடுப்பீர்களாக.என் நாமத்தினாலே அவர் சொல்லும் என் வார்த்தைகளுக்குச் செவிகொடாதவன் எவனோ அவனை நான் விசாரிப்பேன்."* (உபாகமம் 18 : 15 , 19)

மோசே மற்றும் இயேசுவின் வாக்கியங்களை பேதுரு எப்படி இணைத்து பேச முடிந்தது ? சமீபத்தில் அவரும் மற்றவர்களும் பெற்ற பரித்த ஆவியின் தூண்டுதலினால் இவர் இப்படி பேசியிருக்கக்கூடும். மறுரூப மலையில் அவர் பார்த்த காட்சியின் மூலம் அவர் கற்றுக் கொண்ட பாடமாகவும் இருந்திருக்கக்கூடும். (மத்தேயு 17 : 1 -9) இந்த மறுரூப காட்சியில், இயேசு இரண்டு நபர்களாகிய மோசே மற்றும் எலியாவோடு பேசிக் கொண்டிருப்பதாக பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் நினைத்தார்கள். இவர்கள் இயேசுவின் மரணத்தை குறித்து பேசினதாக நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது (லூக்கா 9 : 31), இது உண்மையாக இருந்தாலும்,இன்னும் மற்ற காரியங்களையும் பேசியிருக்கக்கூடும். ஆனால் இந்த தரிசனத்தில் "மோசே" - "நான் சொல்லியிருந்த தீர்க்கதரிசி நீங்கள் தான்" என்று சொல்லியிருக்க எந்த வாய்ப்புமில்லை.

25 ஆம் வசனத்தில் பேதுரு -*"நீங்கள் அந்தத் தீர்க்கதரிசிகளுக்குப் புத்திரராயிருக்கிறீர்கள்; உன் சந்ததியினாலே பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும் என்று தேவன் ஆபிரகாமுக்குச் சொல்லி, நம்முடைய முன்னோர்களோடே பண்ணின உடன் படிக்கைக்கும் புத்திரராயிருக்கிறீர்கள். "*என்பதை நினைவு கூர்ந்தார். இந்த மிகப் பெரிய வாக்குறுதி ( ஆதியாகமம் 22 : 18) ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### உயிர்த்தெழுதல்

தேவனுடைய திட்டத்தில், ஜீவனோடு இருப்பவர்களையோ, அல்லது மனித இனத்தில் உள்ள ஒரு வகுப்பாரை மட்டும் ஆசீர்வதிப்பது அவருடைய நோக்கமல்ல. அவருடைய திட்டமானது கால போக்கில் மனுக்குலம் முழுவதும் ஆசீர்வதிக்கப்படும், அதில் ஜீவனோடிருப்பவர்களும், மரித்தோரிலிருந்து எழுப்ப வேண்டும். அநேக யூதர்கள் உயிர்த்தெழுதலை விசுவாசித்தார்கள், இந்த ஒரு விசுவாசமே சதுசேயர்களுக்கும், பரிசேயர்களுக்கும் வித்தியாசத்தை காட்டியது."என்னத்தினாலென்றால், சதுசேயர் உயிர்த்தெழுதல் இல்லையென்றும், தேவதூதனும் ஆவியும் இல்லையென்றும் சொல்லுகிறார்கள். பரிசேயரோ அவ்விரண்டும் உண்டென்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். (அப்போஸ்தலர் 23 : 8) சதுசேயர்களுக்கு மரணத்திற்கு பின் உணர்வுகள் மற்றும் வருங்காலத்தை குறித்து எந்த நம்பிக்கையும்

இல்லை. இப்பொழுது இங்கு நடப்பது மட்டுமே அவர்களுக்கு நிஜமாக இருந்தது.

ஆனால் தேவனுடைய பரிசுத்த தீர்க்கதரிசிகள் வருங்காலத்தில் பெறப் போகிற ஆசீர்வாதங்களை குறித்து பேசினதினால் உயிர்த்தெழுதலை விசுவாசித்தார்கள். அது மட்டும் அல்ல, மரித்தவர்களுக்கு "நித்திரை" என்ற வார்த்தையை பயன்படுத்தினார்கள். தீயோருக்கும் இதே வார்த்தையை பயன்படுத்தினார்கள். "*ஆகாப் தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின், அவன் குமாரனாகிய அகசியா அவன் ஸ்தலத்தில் ராஜாவானான்* "(1இராஜாக்கள் 22 -40) மரித்த லாசரை இயேசு நித்திரையிலிருப்பதாக கூறினார். (யோவான் 11-11,14) மரித்துப் போன ஒருவரை நித்திரையிலிருப்பதாக கூறினார், அவர் மீண்டும் ஒரு காலத்தில் உயிரோடு எழும்புவார் என்பது பொருளாகும். அப்பொழுது தான் சொல்லப்பட்ட வாக்கியத்திற்கு பொருள் உண்மையாகும்.

இயேசு மார்த்தாளிடம் அவளுடைய சகோதரன் லாசருவை பற்றி பேசும் பொழுது, உயிர்த்தெழுதலை குறித்து சம்பாஷித்தார்கள் - " *இயேசு அவளை நோக்கி: உன் சகோதரன் உயிர்த்தெழுந்திருப்பான் என்றார். அதற்கு மார்த்தாள்: உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசிநாளிலே அவனும் உயிர்த்தெழுந்திருப்பான் என்று அறிந்திருக்கிறேன் என்றாள். இயேசு அவளை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்;*" (யோவான் 11 : 23 - 25)

1கொரிந்தியர் 15 ஆம் அதிகாரத்தின் விளக்க உரையின் இறுதிப் பகுதியில் ஆதாம் கிலார்க் உயிர்த்தெழுதலை பற்றி இப்படியாக கூறினார் - "

> என்னால் தவிர்க்க முடியாத ஒரு குறிப்பை நாம் சொல்ல வேண்டியதாக இருக்கிறது, இன்றைய கிறிஸ்தவர்களை காட்டிலும் பண்டைய கால கிறிஸ்தவர்கள் மத்தியில் இந்த உயிர்த்தெழுதலின் போதனை அநேக பின் விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. இது எப்படியானது ? அப்போஸ்தலர்கள் இதை வலியுறுத்தி கொண்டே தேவனை பின் பற்றுவர்களை, ஊக்குவித்து, உற்சாகப்படுத்தி, மகிழ்வித்தார்கள். அவர்களை தொடர்ந்து வந்தவர்கள் இந்நாட்களில் இதை பற்றி எப்பொழுதாவது மட்டுமே பேசுகிறார்கள். ஆகவே அன்றைய அப்போஸ்தலர்கள் போதித்ததினால் ஆதிகால கிறிஸ்தவர்கள் நம்பினார்கள். இவைகளை நாம் போதித்தால் , கேட்போர் விசுவாசிப்பார்கள். சுவிசேஷத்தில் எந்த விதமான உபதேசங்களும் தனிப்பட்ட முறையில் வலியுறுத்தவதும் இல்லை, மேலும், இன்றைக்கு போதிக்கும் அமைப்புகளில் எந்த விதமான போதனைகளும் முற்றிலுமாக தள்ளப்படுவதுமில்லை.

ஒரு மனிதனின் மரணத்திற்கு பின் நடக்கும் காரியங்களை பற்றி சிலவற்றை மட்டுமே ஏற்று கொள்வதினால் உயிர்த்தெழுதலை அரிதாக போதிப்பதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். திரும்ப ஒருவர் உயிர் பெற்று எழும் பொழுது அவருடைய பாவத்திற்கேற்ற தண்டனையை அவர் பெறுவார் என்பது அர்த்தமில்லாததாகும். வேதாகமத்தில் - "*இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்.*"(யோவான் 5: 28,29)இப்படி எழுதினபடியால், அனைவரும் மேலே கூறிய கருத்தை நம்புகிறார்கள். ஆனால் (American Standerd Version)இல் (யோவான் 5:29) ன் சரியான மொழி பெயர்ப்பை வாசிக்கலாம் - "தீமைசெய்தவர்கள் தண்டனைத்தீர்ப்பை பெறும்படி எழுந்திருக்கிறவர்களாளவும்...." மரணத்திற்கு முன் ஆண்டவரும் ஏஜமானனுமாகிய இயேசுவின் அடிச்சுவடுகளில் நடப்பவர்களே நன்மை செய்தவர்கள். மற்றவர் அனைவரும் தீமை செய்தவர்கள். இவர்கள் உலகத்தில் மகா "நியாயத்தீர்ப்பின் நாளில்" ஜீவனோடுஎழுந்து, அவர்களின் தீர்ப்பை கேட்க போகிறதில்லைஆனால் ஏசாயா தீர்க்கதரிசியின் வார்த்தையின் படி "அனைவரும் நீதியாக போதிக்கப்படுவர்.."*கர்த்தாவே, உம்முடைய நியாயத்தீர்ப்புகளின் வழியிலே உமக்குக் காத்திருக்கிறோம்; உமது நாமமும், உம்மை நினைக்கும் நினைவும் எங்கள் ஆத்தும வாஞ்சையாயிருக்கிறது. என் ஆத்துமா இரவிலே உம்மை வாஞ்சிக்கிறது; எனக்குள் இருக்கிற என் ஆவியால் அதிகாலையிலும் உம்மைத் தேடுகிறேன்; உம்முடைய நியாயத்தீர்ப்புகள் பூமியிலே நடக்கும் போது பூச்சக்கரத்துக்குடிகள் நீதியைக் கற்றுக்கொள்வார்கள்.*" (ஏசாயா 26: 8,9)

## புறஜாதிகள்

அப்போஸ்தலர் முதலாம் அதிகாரத்தில், இராஜ்யத்தை இஸ்ரயேலுக்கு எப்பொழுது திரும்ப கொடுக்கப்படும் என்று கேள்வியை அப்போஸ்தலர்கள் கேட்டபொழுது அவர்கள் இன்னும் பரிசுத்த ஆவியை பெறாமலிருந்தார்கள். சில நாட்களுக்கு பின் பெந்தெகொஸ்தே நாளில், ஒரு வீட்டின் மேல் மாடியில், பரிசுத்த ஆவியை பெற்றார்கள் அதற்கு பின் சில வருடங்கள் (10 அதிகாரங்கள் வரைக்கும்) சுவிசேஷம் யூதர்களுக்கு மட்டுமே போதிக்கப்பட்டது. கொர்நேலியுவையும் அவர் குடும்பத்தினரையும் , கிறிஸ்துவின் சீஷர்களாக அழைப்பதற்கு பேதுருவுக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டது. தேவனுடைய பரிசுத்த தீர்க்கதரிசிகள் உரைத்தபடி சில யூத கிறிஸ்தவர்களுக்கு இதை ஏற்றுகொள்ள மிகக் கடினமாக இருந்திருக்கும். அப்போஸ்தலனாகிய யாக்கோபு யூதர்களை ஏற்று கொண்டதைப் போல புறஜாதிகளும் தேவனை ஏற்று கொள்ளும் காலம் வரும் என்று ஆமோஸ் தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனத்தை எடுத்து சொன்னார். (ஆமோஸ் 9 : 12) " தேவன் முதல் முறையாக புறஜாதிகள் மேல் இரக்கம் காட்டினதும் , அவருடைய நாமத்திற்கு தங்களை அற்பணித்தவர்களை தேர்வு செய்ததையும் பற்றி சீமோன் நம்மிடத்தில் பேசும் பொழுது கூறினார்." இது தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளோடு செய்த ஒப்பந்தமாகும், அதில் "*தேவன் புறஜாதிகளினின்று தமது நாமத்திற்காக ஒரு ஜனத்தைத் தெரிந்துகொள்ளும்படி முதல்முதல் அவர்களுக்குக் கடாட்சித்தருளின விதத்தைச் சிமியோன் விவரித்துச் சொன்னாரே. அதற்குத் தீர்க்கதரிசிகளுடைய வாக்கியங்களும் ஒத்திருக்கிறது. எப்படியெனில், மற்ற மனுஷரும், என்னுடைய நாமந்தரிக்கப்படும் சகல ஜாதிகளும், கர்த்தரைத் தேடும்படிக்கு, நான் இதற்குப்பின்பு திரும்பிவந்து, விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் எடுப்பித்து, அதிலே பழுதாய்ப்போனவைகளை மறுபடியும் சீர்ப்படுத்தி, அதைச்*

*செவ்வையாக நிறுத்துவேன் என்று இவைகளை யெல்லாம் செய்கிற கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது."* (அப்போஸ்தலர் 15 : 14 - 17) என்று எழுதப்பட்டிருக்கிறது.

தீத்து ராயனின் சேனைகள், கி பி 70 ல் எருசலேமை முற்றிலும் அழித்த பொழுது, யூதர்கள் தூர தேசங்களுக்கு சிதறடிக்கப்பட்டார்கள். அக்காலத்திலிருந்து சுவிசேஷ செய்திகள் பெரும்பான்மையாக புறஜாதிகளுக்கு கொடுக்கப்பட்டது. *"மேலும், சகோதரரே, நீங்கள் உங்களையே புத்திமான்களென்று எண்ணாதபடிக்கு ஒரு இரகசியத்தை நீங்கள் அறியவேண்டுமென்றிருக்கிறேன்; அதென்னவெனில், புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும் வரைக்கும் இஸ்ரயேலரில் ஒரு பங்குக்குக் கடினமான மனதுண்டாயிருக்கும்."* (ரோமர்11: 25) இஸ்ரயேல் நித்தியமாக கைவிடப்படவில்லை, ஏனென்றால் பவுல் அடுத்த வசனத்தில் ," யூதர்கள் அனைவரும் இரட்சிக்கப்படுவார்கள்." என்கிறார். "இளைப்பாருதலின் காலத்தில்" இஸ்ரயேலின் இரட்சிப்பு அவிசுவாசயான இவ்வுலகத்தின் மனுக்குலத்தோட நடை பெறும்.

## திரும்பகொடுத்தல்

திரும்பபொடுத்தல் என்பதற்கு "திரும்புவது அல்லது முந்தியிருந்த நிலைமைக்கு சீர்பொருந்தவது" என்று பொருள்படும். (American Heritage Dictionary) தந்தையாகிய ஆதாமும், தாயாகிய ஏவாளும் தங்களுடைய பரிபூரண நிலையில் மகிழ்ச்சியாக இருந்த முந்திய நிலைமையைத் திரும்ப கொடுப்பதே தேவ திட்டமாகும். கடந்த 6000 வருடங்களாக இந்த உலகம் பாவம் , மரணம், அபூரணம் கீழ்ப்படியாமையின் விளைவுகளை அனுபவித்தது. வரும் இராஜ்யத்தில் இந்த உலகம், நீதியைக் கற்று கொண்டு, அனைவரும் பரிசுத்தமான பெரும்பாதையான வழியில் பொறுமையாக நடந்து முடிவில் பூமிக்குரிய பரிபூரணத்தை பரிசாக பெறுவார்கள். " *அங்கே பெரும்பாதையான வழியும் இருக்கும்; அது பரிசுத்த வழி என்னப்படும்; தீட்டுள்ளவன் அதிலே நடந்துவருவதில்லை; அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் திசைகெட்டுப் போவதில்லை.அங்கே சிங்கம் இருப்பதில்லை; துஷ்டமிருகம் அங்கே போவதுமில்லை, அங்கே காணப்படவுமாட்டாது; மீட்கப்பட்டவர்களே அதில் நடப்பார்கள்."* (ஏசாயா 35: 8,10) இதுவே நம்முடைய யோவான் விவரித்திருக்கிறார் - அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார் இனி மாணமுமில்லை துக்கமில்லை முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது.(வெளி 21 : 4)

இவ்விதமான திட்டத்தை ஒரு சிறந்த ஞானமும், இரக்கமும் உள்ள, சர்வ வல்லமையுள்ள சிருஷ்டிகரிடமிருந்து மட்டுமே நாம் எதிர்பார்க்க முடியும் நம்முடைய ஆதி தாய் தந்தையை சிருஷ்டித்து அவர்களை கீழ்படியாமையின் பாதையில் வழிநடத்த சாத்தானை அனுமதித்ததில் தேவன் எந்த தவறும் செய்யவில்லை. இந்த உலகத்தை அவர் வீணில் படைக்கவில்லை, அல்லது காலப் போக்கில் அவர் "இதை சுட்டெறிக்கவும் " போகிறதில்லை. " *வானங்களைச் சிருஷ்டித்துப் பூமியையும் வெறுமையாயிருக்கச் சிருஷ்டியாமல் அதைக் குடியிருப்புக்காகச் செய்து படைத்து, அதை உருவேற்படுத்தின தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: நானே கர்த்தர், வேறொருவர் இல்லை."* (ஏசாயா 45 : 18)

தேவன் முழு மனுக்குலத்தையும், இஸ்ரயேலையும் ஆசீர்வதிக்கும் அற்புதமான எதிர்க்காலத்தை குறித்து அப்போஸ்தலர் எழுதுகையில் - *"அந்த நாட்களுக்குப்பின் நான் இஸ்ரயேல் குடும்பத்தாரோடே பண்ணும் உடன்படிக்கையாவது: என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன்; நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள். அப்பொழுது சிறியவன் முதற்கொண்டு பெரியவன்வரைக்கும் எல்லாரும் என்னை அறிவார்கள்; ஆகையால், கர்த்தரை அறிந்துகொள் என்று ஒருவன் தன் அயலானுக்கும், ஒருவன் தன் சகோதரனுக்கும் போதிக்கவேண்டுவதில்லை.ஏனெனில் நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்"* (எபிரெயர் 8 : 10 -12)

## சங்கீதம் 72
## (தெரிந்துகொள்ளப்பட்ட வசனங்கள்)

1. தேவனே, ராஜாவுக்கு உம்முடைய நியாயத்தீர்ப்புகளையும், ராஜாவின் குமாரனுக்கு உம்முடைய நீதியையும் கொடுத்தருளும். அவர் உம்முடைய ஜனங்களை நீதியோடும், உம்முடைய ஏழைகளை நியாயத்தோடும் விசாரிப்பார்.
2. பர்வதங்கள் ஜனத்திற்குச் சமாதானத்தைத் தரும்,மேடுகள் நீதியின் விளைவோடிருக்கும். ஜனத்தில் சிறுமைப்படுகிறவர்களை அவர் நியாயம் விசாரித்து, ஏழையின் பிள்ளைகளை இரட்சித்து, இடுக்கண் செய்கிறவனை நொறுக்குவார்.
4. சூரியனும் சந்திரனுமுள்ளமட்டும், அவர்கள் உமக்குத் தலைமுறை தலைமுறையாகப் பயந்திருப்பார்கள். புல்லறுப்புண்ட வெளியின்மேல் பெய்யும் மழையைப்போலவும் இறங்குவார்.
5. அவருடைய நாட்களில் நீதிமான் செழிப்பான் , சந்திரனுள்ளவரைக்கும் மிகுந்த சமாதானம் இருக்கும்.
6. ஒரு சமுத்திரந்தொடங்கி மறுசமுத்திரம்வரைக்கும்,நதிதொடங்கிப் பூமியின் எல்லைகள்வரைக்கும் அவர் அரசாளுவார்.
7. வனாந்தரத்தார் அவருக்கு முன் பாகக் குனிந்து வணங்குவார்கள், அவருடைய சத்துருக்கள் மண்ணை நக்குவார்கள்.
9. சகல ராஜாக்களும் அவரைப் பணிந்துகொள்வார்கள், சகல ஜாதிகளும் அவரைச் சேவிப்பார்கள்.
10. கூப்பிடுகிற எளியவனையும், உதவியற்ற சிறுமையானவனையும் அவர் விடுவிப்பார். பலவீனனுக்கும் எளியவனுக்கும் அவர் இரங்கி, எளியவர்களின் ஆத்துமாக்களை இரட்சிப்பார்.
12. அவர்கள் ஆத்துமாக்களை வஞ்சகத்திற்கும் கொடுமைக்கும் தப்புவிப்பார்,அவர்களுடைய இரத்தம் அவருடைய பார்வைக்கு அருமையாயிருக்கும்.
18. அவருடைய மகிமைபொருந்திய நாமத்துக்கு என்றென்றைக்கும் ஸ்தோத்திரமுண்டாவதாக, பூமிமுழுவதும் அவருடைய மகிமையால் நிறைந்திருப்பதாக. ஆமென், ஆமென்.

**Sweet Songs of Ancient Israel**

# வருங்காலத்தை குறித்து பேசின தேவனுடைய தீர்க்கதரிசிகள்:

**ஆமோஸ் -**

"என் ஜனமாகிய இஸ்ரயேலின் சிறையிருப்பைத் திருப்புவேன்; அவர்கள் பாழான நகரங்களைக் கட்டி, அவைகளில் குடியிருந்து, திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளுடைய பழரசத்தைக் குடித்து, தோட்டங்களை உண்டாக்கி, அவைகளின் கனிகளைப் புசிப்பார்கள். அவர்களை அவர்கள் தேசத்திலே நாட்டுவேன்; நான் அவர்களுக்குக் கொடுத்த தேசத்திலிருந்து அவர்கள் இனிப் பிடுங்கப்படுவதில்லையென்று உன் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றார்."(ஆமோஸ் 9:14,15)

**மீகா -**

"ஆனாலும் கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்பட்டிருக்கும், எல்லா ஜாதிகளும் அதனிடத்திற்கு ஓடிவருவார்கள்.திரளான ஜாதிகள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்." (மீகா 4 :1,2)

**யோயேல் -**

"அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள்." (யோயேல் 2 :28)

**ஓசியா -**

"பின்பு இஸ்ரயேல் புத்திரர் திரும்பி, தங்கள் தேவனாகிய கர்த்தரையும், தங்கள் ராஜாவாகிய தாவீதையும் தேடி, கடைசிநாட்களில் கர்த்தரையும், அவருடைய தயவையும் நாடி அஞ்சிக்கையாய் வருவார்கள்." (ஓசியா 3 : 5)

**ஆபகூக் -**

"சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்." (ஆபகூக் 2 : 14 )

**செப்பனியா -**

"ஆகையால் நான் கொள்ளையாட எழும்பும் நாள்மட்டும் எனக்குக் காத்திருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; என் சினமாகிய உக்கிர கோபத்தையெல்லாம் அவர்கள்மேல் சொரியும்படி ஜாதிகளைச் சேர்க்கவும், ராஜ்யங்களைக் கூட்டவும் நான் தீர்மானம் பண்ணினேன்; பூமியெல்லாம் என் எரிச்சலின் அக்கினியினால் அழியும்."

அப்பொழுது ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும் படிக்கு, நான் அவாகள் பாஷையைச் சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவேன்." (செப்பனியா 3 - 8, 9)

**தாவீது -**

"............சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலையில் களிப்புண்டாகும்" (சங்கீதம் 30 - 5)

**ஏசாயா -**

" என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை; கேடுசெய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்." (ஏசாயா 11 : 9)

**ஆகாய் -**

" சகல ஜாதிகளையும் அசையப்பண்ணுவேன், சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் வருவார்; இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப்பண்ணுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." (ஆகாய் 2 : 7)

**சகரியா -**

" அந்நாளிலே ஜீவதண்ணீர்கள் எருசலேமிலிருந்து புறப்பட்டு, பாதி கிழக்குச் சமுத்திரத்துக்கும், பாதி மேற்குச் சமுத்திரத்துக்கும் போய், மாரிகாலத்துக்கும் கோடைகாலத்துக்கும் இருக்கும். அப்பொழுது கர்த்தர் பூமியின் மீதெங்கும் ராஜாவாயிருப்பார்; அந்நாளில் ஒரே கர்த்தர் இருப்பார், அவருடைய நாமமும் ஒன்றாயிருக்கும்." (சகரியா 14 :8, 9)

**எரேமியா -**

" இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன்முதல் பெரியவன்மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்."( எரேமியா 31 : 34)

**மோசே -**

" பூமியெல்லாம் கர்த்தருடைய மகிமையினால் நிறைந்திருக்கும் என்று என்னுடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்."(எண்ணாகமம் 14 : 21)

**எசேக்கியேல் -**

" அவர்கள் என் கட்டளைகளின்படி நடந்து,: என் நியாயங்களைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்ய நான் அவர்களுக்கு ஏக இருதயத்தைத் தந்து, அவர்கள் உள்ளத்தில் புதிய ஆவியைக் கொடுத்து, கல்லான இருதயத்தை அவர்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை அவர்களுக்கு அருளுவேன்." (எசேக்கியேல் 11:19 )

**யோவான் -**

" மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்.அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது." (வெளி 21 : 3,4)

# ஜீவனுக்குரிய தண்ணீர்

**"விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்."** (வெளி 22 : 17)

David Christiansen

இந்த வசனத்திலுள்ள வார்த்தைகள் எவ்வளவு அருமையாக நம் காதுகளில் ஒலிக்கின்றன, கிறிஸ்துவின் இராஜ்யத்தில் இந்த பூமியின் மேல் வாழும் ஒவ்வொருவரும் தேவனுடைய சத்தியத்தை கற்றுக் கொண்டு, நித்தியமாக ஜீவிக்க வாய்ப்பு பெறுவார்கள் என்று வேதமாணவர்களாகிய நாம் விசுவாசிக்கிறோம். மேலே கூறப்பட்டுள்ள வேத வசனமாகிய வெளி 22 : 17 ஆம் வசனத்தின் முன் பகுதியில் - *"ஆவியும் மணவாட்டியும் வா" என்கிறார்கள், கேட்கிறவனும் வா என்பானாக, தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்"* என்று நாம் வாசிப்பதின் மூலம் இவ்வாறாக நாம் விசுவாசிக்கிறோம். மணவாட்டி இந்த வார்த்தைகளைப் பேசுவதால் சபை வகுப்பார் மணவாட்டியாக மாறியிருக்க வேண்டும். எனவே, இந்த விமர்சனம் கிறிஸ்துவின் இராஜ்யத்திற்குரியதாகும். "அநேக தீர்க்கதரிசிகளும் நீதிமான்களும் நீங்கள் காண்கிறவைகளை காணவும், நீங்கள் கேட்கிறவைகளை கேட்கவும் விரும்பியும், காணாமலும் கேளாமலும் போனார்கள் என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன்". என்று மத்தேயு 13 : 17 ஆம் வசனத்தில் இயேசு சொன்னதற்கு இது எதிர்மாறாக இருக்கிறது. இந்த முரண்பாட்டை புரிந்து கொள்ள, வேதாகமத்தில் தண்ணீர் தேவனுடைய சத்தியத்தை அடையாளப்படுத்துவதை அறிந்து கொள்ள வேண்டும்.

இந்த கருத்தைப் புரிந்துகொள்ள பின்வரும் இரண்டு வசனங்கள் நமக்கு உதவுகிறது. "உம்டைய சத்தியத்தினாலே அவர்களை பரிசுத்தமாக்கும், உம்முடைய வசனமே சத்தியம் "(யோவான் 17: 17) "தாம் அதை திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து பரிசுத்தமாக்குகிறற்கும்", (எபேசியர் 5 : 26). யோவான் சுவிசேஷம் தேவனுடைய வார்த்தை தான் சத்தியம் என்று நமக்குப் போதிப்பதால், சத்தியவசனமாகிய தண்ணீரினால் கழுவப்பட்ட சுத்திகரிப்பைப் பெற்று பரிசுத்தமாக்கப்படுகிறார் என்று நாம் காண்கிறோம்.

## ஜீவத்தண்ணீர்

இயேசு சமாரிய ஸ்திரீயுடன் யாக்கோபின் கிணற்றண்டையில் பேசும்போது இந்த அடையாளத்தை மிகவும் அழகாக நம் கவனத்திற்கு கொண்டு வருகிறார். " *இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: நீ தேவனுடைய ஈவையும், தாகத்துக்குத்தா என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதையும் அறிந்திருந்தாயானால், நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுத்திருப்பார் என்றார்.அதற்கு அந்த ஸ்திரீ: ஆண்டவரே, மொண்டுகொள்ள உம்மிடத்தில் பாத்திரமில்லையே, கிணறும் ஆழமாயிருக்கிறதே, பின்னை எங்கேயிருந்து உமக்கு ஜீவத்தண்ணீர் உண்டாகும்.இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: இந்தத் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகமுண்டாகும். நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக்கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார்.*; (யோவான் 4:10.11.13.14)

நம் கர்த்தர் சொல்லர்த்தமான தண்ணீரையோ நீரூற்றைப் பற்றியோ கூறவில்லை. ஆனால் அவர் கிணற்றின் தண்ணீரை அடையாளமான சத்திய தண்ணீருடன் ஒப்பிட்டு பேசினார். சத்தியம் மட்டுமே, நித்திய ஜீவனுக்கு வழிநடத்தக்கூடியது, என்பதை எடுத்து காட்டுவதற்கு இவைகளை இணைத்து உருவகப்படுத்தினார். இதுவே ஜீவத்தண்ணீர் என்று அழைக்கப்படுகிறது.

இராஜ்யத்தில் கிடைக்கும் ஜீவத்தண்ணீருக்கும் சுவிசேஷயுகத்தில் கிடைக்கும் ஜீவத்தண்ணீருக்கும் வேறுபாடு உண்டா? இல்லை. தேவனுடைய சத்தியம் தேவனுடைய சத்தியம் தான். நித்திய ஜீவன் நித்திய ஜீவன் தான். அநேக நீதிமான்களும் தீர்க்கதரிசிகளும் தேவனுடைய சத்தியத்தை அறிந்து கொள்ள (1பேதுரு 1:10 -12) இயலாதவர்காளக இந்த பொல்லாத பிரபஞ்சத்தில் (கலாத்தியர் 1:4) இருப்பதை நாம் இந்த வசனங்களின் வாயிலாக காண்கிறோம். இது " விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன் என்ற தலைப்பு வசனத்திற்கு முரண்பாடாக உள்ளது. இயேசுவின் சீஷர்கள் உண்மையிலேயே சிறுமந்தையாக (லூக்கா 12: 32) தான் இருந்தனர், இருக்கின்றனர். எனவே சத்திய தண்ணீர் இந்த பொல்லாத பிரபஞ்சத்தில் இருப்பதைப் போலவே இனிவரும் உலகத்திலும் இருக்கும். இதை இப்பொழுதிருக்கும்

சிறுமந்தையார் மட்டுமே புரிந்து கொண்டுள்ளனர். இயேசுவின் சிறுமந்தையினர் சத்திய தண்ணீரினால் கழுவப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு வளர்ந்து வருகின்றனர். இந்த சத்திய தண்ணீர் இல்லாவிடில் ஆவியில் வளர முடியாது. தங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கிக் கொண்டு சிறுமந்தையினராக இருப்பவர்கள் என்றென்றும் உயிரோடிருக்கும் சாவாமையை பெற்றுக்கொள்வார்கள். தேவ இராஜ்யத்தில் உயிர்த்தெழுந்து வரும் உலக மக்களுக்கு சத்திய ஜீவத்தண்ணீரை மகிமையடைந்த சபை கொடுக்கும். " **வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்.**; (யோவான் 7 : 38)

## சுத்தமான நதி

"*பின்பு, பளிங்கைப்போல் தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டுவருகிறதை எனக்குக் காண்பித்தான்.நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டுவிதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள்.*"(வெளி 22 :1,2) மேசியாவின் யுகத்தில் உள்ள ஜீவத்தண்ணீரை முந்தைய யுகங்களுடன் ஒப்பிட்டு பார்க்கையில் ஒரு சில அருமையான விஷயங்களை நாம் காணலாம். ஏதேன் தோட்டத்திலும் ஒரு நதி இருந்தது.

"*தோட்டத்துக்குத் தண்ணீர் பாயும்படி ஏதேனிலிருந்து ஒரு நதி ஓடி*" (ஆதியாகமம் 2 : 10) ஆதியாகமத்திலும் வெளிப்படுத்தலிலும் கூறப்பட்டுள்ள நதிகள் மரங்களுக்கு தண்ணீரைக் கொடுத்தன. ஏதேனில் இருந்த மரங்கள் ஆகாரத்திற்கு ஏற்ற நல்ல மரங்களாக இருந்தன. ஆயினும் அதன் நடுவே நன்மை தீமை அறியத்தக்க ஒரு மரமும் இருந்தது. அந்த மரத்தின் கனியைப் புசித்ததினால் இந்நாள் வரை மனுக்குலம் அனுபவிக்கும் சாபத்திற்குள்ளாக தள்ளப்பட்டது. ஆனால் வெளிப்படுத்தல் 22ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள தேவனுடைய இராஜ்யத்தில் அப்படிப்பட்ட மரமே இல்லை. (ஆதியாகமம்2: 17) ஆம் வசனத்தில் கொடுக்கப்பட்ட சாபம் இந்நாள் வரைக்கும் மனுக்குலத்தில் இருக்கிறது என்று வெளி 22 ஆம் அதிகாரம் குறிப்பிடுகிறது.

## ஜீவ விருட்சம்

"ஜீவ விருட்சம்" என்ற ஒரு மரம் ஏதேன் தோட்டத்தில் இருந்தது. அது ஒரு மரமோ அல்லது ஒரு வகையான மரமோ என்பது முக்கியமல்ல. ஆனால் அது ஜீவனை தக்க வைத்துக்கொள்ளும் தன்மையை பெற்றிருந்தது, என்பது மட்டும் தெளிவாக தோன்றுகிறது. வெளிப்படுத்தல் 22 : 2லும் ஒரு "ஜீவ விருட்சம்" உள்ளது. இங்கு ஒன்றுக்கும் மேற்பட்ட மரங்கள் இருப்பதாக சொல்லப்படுகிறது. "நதியின் இருகரையிலும் பன்னிரண்டு விதமான கனிகளை தரும் ஜீவ விருட்சம் இருந்தது" இந்த ஜீவ விருட்சங்களின் இலைகள் "ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள்". ஏதேன் தோட்டத்தில் பாவம் செய்யுமுன் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் ஆரோக்கியமடைய அவசியம் இல்லாதிருந்தது. ஜீவ விருட்சத்தின் கனி, மனிதனுடைய பரிபூரண ஜீவனை தக்கவைக்கக்கூடியதாக இருந்தது. சாபத்தின் அனுபவங்களை பெற்றிருந்த மனுக்குலத்திற்கு தேவனுடைய இராஜ்யத்தில் அதிகமாக குணப்பட வேண்டியிருக்கிறது. அவர்கள் பூரணமடைந்த பின்னர் அதை தக்க வைத்துக்கொள்ள தேவையான தன்மைகளும் தேவைப்படுகின்றன.

## ஆவியின் கனி

பளிங்குபோல தெளிவான ஜீவத் தண்ணீர் தேவனும், ஆட்டுக் குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வந்து ஜீவவிருட்சங்களுக்கு தண்ணீர் பாய்ந்தது. (வெளி 22:1) இந்த நதியின் தண்ணீர் மரங்களின் கனிகளின் வளர்ச்சிக்கும், பாதுகாப்பிற்கும் போதுமானதாகும். இந்த மரங்களின் கனியை மனிதன் புசிப்பதினால் இவைகள் மிக முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. பொதுவாக கனியில் 80 % தண்ணீர் உள்ளது- நாம் கனி புசிக்கும் பொழுது அந்த தண்ணீருடன் இருக்கக்கூடிய கனியில் உள்ள சத்துக்களையும் சேர்ந்து உட்கொள்கிறோம். "பளிங்கு போல ஜீவத்தண்ணீர்" மரங்களின் இலைகளையும் போஷிப்பிக்கிறது. இந்த தண்ணீர் தேவனும், ஆட்டுக் குட்டியானவருடைய சிங்காசனத்திலிருந்து நேரடியாக வருவதினால் மனுக்குலத்தை குணப்படுத்தும் பரிபூரண உணவை உற்பத்தி செய்கிறது. இந்த உணவை உட்க்கொள்கிறவர்கள் காலப் போக்கில் பூரணப்படுவார்கள். தண்ணீர் சுத்தமாய் இருப்பதினால் மட்டுமல்ல, அவைகள் பார்த்த உடனே புரிந்து கொள்வதற்கு தெளிவாக இருப்பதினால் "பளிங்கைபோல் தெளிவான நதி" என்று எழுதப்பட்டிருக்கிறது - (வெளி 22 :17) விருட்சங்களின் கனி நமக்கு ஆவியின் கனியை நினைவூட்டுகிறது.

"*ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்;* " (கலாத்தியர் 5:22,23) இவை அனைத்தும் பவுல் அப்போஸ்தலர் ஆரம்பத்தில் குறிப்பிட்ட அன்பின் உட்பாகங்களாக கருதப்படலாம். கனி என்ற ஒருமைப்பதம் உபயோகப்படுத்தப்பட்டிருப்பதால் பவுல் அப்போஸ்தலர் ஆவியின் கனி

அன்பு என்றும் பின்னர் அந்த அன்பின் சில குணாதிசயங்களை குறிப்பிட்டுள்ளார்.

வெளிப்படுத்தல் 22: 2 ஆம் வசனத்தில் 12 கனிகள், 12 மாதங்கள் கொடுக்கப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம். இவற்றை நாம் பெருக்கினால் 12 X 12 = 144 கிடைக்கிறது. இத்துடன் தேவ இராஜ்யத்தின் ஆயிர வருடத்தை பெருக்கினால் 1,44,000 வரும் தங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்தி தெய்வீக சுபாவத்தைப் பெற்று கொள்ளும் அழைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை இது காட்டுகிறது. (வெளி 7:4) தேவ இராஜ்யத்தில் உலக மனுக்குலத்தை ஆரோக்கியமாக்குதல், நீர் பாய்ச்சுதல் மற்றும் உணவளிக்கும் பணிகளில் மகிமைப்படுத்தப்பட்ட சபை முக்கிய பங்கு வகிக்கும் என்றும் இது கூறுகிறது. தேவ இராஜ்யத்தில் மனுக்குலம் குடிக்கவும், புசிக்கவும் ஆரோக்கியப்படுத்தப்பட வேண்டும். குடிப்பதற்கு பளிங்கைப் போல் தெளிவான தண்ணீரை தேவன் கொடுப்பார். புசிப்பதற்கு 12 விதமான கனிகளையும், ஆரோக்கியமடைவதற்கு இலைகளையும் கொடுக்கும் ஜீவ விருட்சத்திற்கு சுத்தமான நதி நீர் பாய்ச்சும். கிணற்றண்டையில் இயேசு சமாரிய ஸ்திரீயிடம் சொன்னது போல் இன்றைய கிறிஸ்தவர்களுக்கு நித்திய ஜீவனை பெறும் திறவுகோல் (வழி) சத்திய தண்ணீராகும்.

**ஆலயத்திலிருந்து தண்ணீர் பாய்கிறது**

எசேக்கியேல் 47: 1 - 12[1] ஆம் வசனங்களில் ஜீவத்தண்ணீர் உள்ள நதியைக் குறித்த இன்னொரு ஆர்வமூட்டும் காட்சி காணப்படுகிறது. அங்கே "வாசற்படியின் கீழிருந்து தண்ணீர் புறப்பட்டு கிழக்கே ஓடுகிறதாயிருந்தது, ஆலயத்தின் முகப்பு கிழக்கு நோக்கியிருந்தது." (எசேக்கியேல் 47 :1)இங்கு சொல்லப்பட்டிருக்கும் தண்ணீருக்கும் வெளி 22 ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கும், தண்ணீருக்கும் நாம் சில ஒற்றுமைகள் பொருந்துவதைக் காணலாம். முதலில் "வீடு" என்பது ஆலயமாகும். (எசேக்கியேல் 43: 4 - 7 ஆம் வசனங்களை காண ). தண்ணீர் தேவனிடமிருந்து வருகிறது. ஆலயத்திலிருந்து புறப்பட்ட தண்ணீர் அதிகரித்து கொண்டே போனது என்று எசேக்கியேல் 47 ஆம் அதிகாரத்தில் காண்கிறோம். இது கிறிஸ்துவின் பூமிக்குரிய இராஜ்யத்தை குறித்த ஒரு தேவனுடைய சத்தியம் சிறுமந்தைக்கு மட்டும் அல்ல, மாறாக எல்லா மனுக்குலத்திற்கும் கொடுக்கப்படும்.

தண்ணீர் ஆலயத்திலிருந்து கிழக்காக சவக்கடலை நோக்கி பாய்ந்தது. கடல் ஜீவராசிகள் கூட உயிர்வாழ முடியாத அளவுக்கு உப்பாக இருப்பதால் அது சவக்கடல் என்று அழைக்கப்படுகிறது. இது ஆதாமின் மரணத்திற்கு ஒரு அருமையான அடையாளமாகும். "அதின் தண்ணீர் ஆரோக்கியமாகும். என்ற ஒரு அற்புதமான முரன்பாட்டை எசேக்கியேல் 47 - 8 ஆம் வசனத்தில் காண்கிறோம். மரண வீடாகிய சிறைச்சாலை திறக்கப்பட்டு, முழு மனுக்குலத்திற்கும் ஜீவன் பெற ஒரு வாய்ப்பு கொடுக்கப்படுவதை இது காட்டுகிறது. ஆதாமின் மரணம் ஜெயம் கொள்ளப்படும். என்றாலும், எசேக்கியேல் 47 ல் ஒரு சிறிய பிரச்சினை இருக்கிறது. ஆலயத்திலிருந்து கிழக்காக தண்ணீர் பாய்ந்தால் ஒலிவ மலைக்குள் நேராக செல்லும் என்று அஜாக்கிரதையாக எசேக்கியேலினால் கவனிக்கப்பட்டதை சகரியா மிகத் துல்லியமாக எடுத்துரைத்தார். "*அந்நாளிலே அவருடைய பாதங்கள் கிழக்கே எருசலேமுக்கு எதிரே இருக்கிற ஒலிவமலையின்மேல் நிற்கும்; அப்பொழுது மகா பெரிய பள்ளத்தாக்கு உண்டாகும்படி ஒலிவமலை தன் நடுமையத்திலே கிழக்கு மேற்காய் எதிராகப் பிளந்துபோம்; அதினாலே, ஒரு பாதி வடபக்கத்திலும் ஒரு பாதி தென்பக்கத்திலும் சாயும்.*; (சகரியா 14 : 4) டிடல் அவீவ்வின் நில அமைப்பியல் நிறுவனம் ஒரு டிபரிய பாதை ஒலிவ மலைக்கு நடுவே புகுந்து நேராக சவக்கடலுக்கு[2] செல்வதை அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தேவ இராஜ்யத்தில் அளிக்கப்படும் தேவனுடைய ஆரோக்கியமளிக்கும் சத்தியத்தின் தண்ணீர்களை நிறுத்த எந்த ஒரு தடையும் இருக்காது.

"*அப்பொழுது என்கேதிதுவக்கி எனெக்லாயிம் மட்டும் மீன்பிடிக்கிறவர்கள் அதின் கரையிலே நிற்பார்கள்; அதெல்லாம் வலைகளை விரிக்கிற ஸ்தலமாயிருக்கும்; அதின் மச்சங்கள் பெரிய சமுத்திரத்தின் மச்சங்களைப்போலப் பல ஜாதியும் மகா ஏராளமுமாயிருக்கும்.*"(எசேக்கியேல் 47 :10) சுவிசேஷ யுகத்தில் நம் ஆண்டவர் தம் சீஷர்களை "மனுஷரைப் பிடிக்கிறவர்களாக" மாறச் சொன்னார். இருந்தபோதிலும் இப்பொழுது மீன்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாக இருக்கிறது. தேவ இராஜ்யத்தில் "மீன்பிடிக்கிறர்களைப்" போல "மீன்களும்" ஏராளமாக இருக்கும்.

யூதேயாவில் உள்ள சவக்கடலின் மேற்கு கரையின் நடுவில் என்கேதி அமைந்துள்ளது. எனெக்லாயிம் "தோராயமாக சவக்கடலில் இருக்கிறது. என்கேதியிலிருந்து பக்கத்திலா அல்லது தொலைவிலா, கடலின் கிழக்கு கரையிலா அல்லது மேற்கு கரையிலா என்று உறுதியாக சொல்லமுடியாது" (ஸ்மித் வேதாகம அகராதி). ஆலயத்தின் தண்ணீர்கள் இப்பொழுது ஒரு மச்சமும் இல்லாத அந்த சமுத்திரத்தை குணமாக்கிய பின்னர் அங்கே ஏராளமாய் மீன்கள் (மச்சங்கள்) இருக்கும். ஒரு பக்க சமுத்திரத்தின் நடுவிலிருந்து சமுத்திரத்தின் தெரியாத இடம் வரைக்கும் மீன்பிடிக்கிறவர்கள் அநேகர் இருப்பார்கள். சுவிசேஷயுக முடிவில் என்ன ஒரு வித்தியாசம், "அறுப்பு உண்மையிலேயே மிகுதி (தரமும் வேலையும் அதிகம்), ஆனால் வேலையாட்களே குறைவு" (லூக்கா 10 :2) Reprints p.2674

1. See Reprints,p.3642,for more details about Ezekiel 47
2. See http:/www.abbaswatchman.com/page%2023%20sea%20page%202.htm

" *அந்நாளிலே ஜீவத்தண்ணீர்கள் எருசலேமிலிருந்து புறப்பட்டு, பாதி கிழக்குச் சமுத்திரத்துக்கும், பாதி மேற்குச் சமுத்திரத்துக்கும் போய், மாரிகாலத்துக்கும் கோடைகாலத்துக்கும் இருக்கும்.*" (சகரியா 14 :8) கிழக்கு சமுத்திரம் சவக்கடல் ஆகும். மேற்கு சமுத்திரம் மத்திய தரைக்கடல் ஆகும். இவ்வாறாக எசேக்கியேல் 47 ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்டதுடன் மற்றொரு நதி சேர்க்கப்பட்டுள்ளது. எசேக்கியேலின் நாட்களில் மத்திய தரைக்கடல் வணிகத்தின் மையப்பகுதியாக இருந்தது. தேவ இராஜ்யத்தில் உலகம் வியாபாரம் செய்யும் விதமாகவே ஆரோக்கியமாக்குதலும் இருக்கும் என்று காட்டுகிறது. தன்னைப் போல தன் அயலானையும் நேசிக்கும்போது வர்த்தகம் இன்று இருப்பதைக்காட்டிலும் வித்தியாசமானதாக இருக்கும். எனவே, சகரியா 14 மற்றும் எசேக்கியேல் 47 ஆம் அதிகாரங்களை இணைத்து பார்க்கும் பொழுது இராஜ்யத்தை பற்றிய சித்திரம் ஏற்றவாறு எடுத்துக்காட்டப்படுகிறது. மேலும், "ஜீவத்தண்ணீர்களே " திறவுகோலாக மீண்டுமாக இங்கு காணப்படுகிறது.

## ஈசாக்கின்(துரவுகள்) கிணறுகள்

"அப்பொழுது ஈசாக்கு அவ்விடம்விட்டுப் புறப்பட்டு, கேராரின் பள்ளத்தாக்கிலே கூடாரம் போட்டு, அங்கே குடியிருந்தான். தன் தகப்பனாகிய ஆபிரகாமின் நாட்களில் வெட்டினவைகளும், ஆபிரகாம் மரித்தபின் பெலிஸ்தர் தூர்த்துப்போட்டவைகளுமான துரவுகளை மறுபடியும் தோண்டி, தன் தகப்பன் அவைகளுக்கு இட்டிருந்த பேர்களின்படியே அவைகளுக்குப் பேரிட்டான். ஈசாக்குடைய வேலைக்காரர் பள்ளத்தாக்கிலே வெட்டி, அங்கே சுரக்கும் நீரூற்றைக் கண்டார்கள் கேராரூர் மேய்ப்பர் இந்தத் தண்ணீர் தங்களுடையது என்று சொல்லி, ஈசாக்குடைய மேய்ப்பருடனே வாக்குவாதம் பண்ணினார்கள்; அவர்கள் தன்னோடே வாக்குவாதம் பண்ணினபடியால், அந்தத் துரவுக்கு ஏசேக்கு[1] என்று பேரிட்டான்.வேறொரு துரவை வெட்டினார்கள்; அதைக்குறித்தும் வாக்குவாதம்பண்ணினார்கள்; ஆகையால் அதற்கு சித்னா[2] என்று பேரிட்டான்.பின்பு அவ்விடம்விட்டுப் பெயர்ந்துபோய், வேறொரு துரவை வெட்டினான்; அதைக்குறித்து அவர்கள் வாக்குவாதம் பண்ணவில்லை; அப்பொழுது அவன்: நாம் தேசத்தில் பலுகும்படிக்கு, இப்பொழுது கர்த்தர் நமக்கு இடம் உண்டாக்கினார் என்று சொல்லி, அதற்கு ரெகொபோத்[3] என்று பேரிட்டான்."(ஆதியாகமம் 26:17- 22)

முதலில் ஈசாக்கு தோண்டின துரவை "ஆபிரகாம் மரித்தபின் பெலிஸ்தர்கள் தூர்த்துப்போட்டார்கள்." அதன் பின் ஈசாக்கின் வேலைக்காரர் அதே இடத்தில் ஒரு துரவை தோண்டும்போது அங்கே "சுரக்கும் நீரூற்றைக்" (ஜீவத்தண்ணீரைக்) கண்டார்கள். இந்த தடவை "கேராரூர் மேய்ப்பர், இந்த தண்ணீர் எங்களுடையது" என்று வாக்குவாதம் செய்தார்கள். மூன்றாவது துரவு (கிணறு) தோண்டப்பட்டது. அதே மேய்ப்பர்கள் அதற்காகவும் வாக்குவாதம் செய்து தங்களுக்கென்று எடுத்து கொண்டனர். ஆனால் ஈசாக்கு வேறொரு இடத்திற்கு சென்று நான்காவது முறையாக ஒரு துரவை தோண்டினார். எனவே மொத்தம் நான்கு துரவுகள் தோண்டப்பட்டன. ஆகவே இந்த நான்கு துரவுகளும் நான்கு வித்தியாசமான காலங்களில் தம்முடைய ஜனங்களுக்கு தண்ணீரை கொடுப்பதை அடையாளப்படுத்துகிறது.

1. ஏதேனில் ஆதாமின் பூரணமான ஜீவனை தக்கவைத்துக் கொள்வதற்காக கொடுக்கப்பட்ட ஜீவத்தண்ணீரை ஆபிரகாமின் துரவு குறிக்கிறது. ஆதாம் பாவம் செய்த பின்னர் அவன் ஏதேன் தோட்டத்தில் அனுமதிக்கப்பட வில்லை. பெலிஸ்தர்கள் இந்த துரவுகளைக் கைப்பற்றி பெயரை மாற்றிக் கொள்வதன் மூலம் இது அடையாளப்படுத்தப்படுகிறது.

2. ஈசாக்கு அதே பகுதியில் தோண்டி "சுரக்கும் நீரூற்று" அல்லது ஜீவத்தண்ணீர் நிறைந்த ஒரு துரவை கண்டான். இஸ்ரயேலருக்கு நியாயப்பிரமாணத்தையும் கொடுத்து அதன் மூலமாக ஜீவனை கொடுத்ததை அடையாளப்படுத்தலாம். அவர்கள் தேவனுக்குக் கீழ்படிந்தால் அவர்களுடைய - " கூடையும், மாப்பிசைகிற தொட்டியும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும் (உபாகமம் 28:5) இருந்தபோதிலும், கேராரூர் மேய்ப்பர்கள் அவர்களை விரட்டி விட்டனர். அந்த துரவின் பெயர் ஏசேக் (சண்டை அல்லது சச்சரவு) என்று அழைக்கப்பட்டது. இஸ்ரயேலர்களின் துன்பங்களையும் அவர்கள் வீடு அவர்களுக்கு பாழாக்கி விடபபட்டதையும் இது மிகவும் பொருத்தமான வகையில் படம் பிடித்துக் காட்டுகிறதல்லவா –

3. ஈசாக்கு மற்றொரு துரவை தோண்டினான் மீண்டும் கேரோரர் மேய்ப்பர் சண்டையிட்டனர். இந்த முறை துரவு சித்னா (எதிர்ப்பு, வெறுப்பு என்று பொருள்) என்ற பெயரிடப்பட்டது. பொய் சபை மெய் சபையை வெறுப்பதை அல்லது முற்றிலும் அழிப்பதை இது படம்பிடித்துக் காட்டுகிறது. பொய் சபை தவறான வழியில் மெய் சபையின் அதிகாரத்தை எடுத்துக்கொண்டு தான் மட்டுமே ஜீவத்தண்ணீர் பெற்று கொள்ள முடியும் என்று உரிமை கொண்டாடுகிறது. அந்த பொய்

சபை உடனே தன் பொய் போதகங்களினால் தண்ணீரை மாசுப்படுத்தியது.

4. கடைசியாக ஈசாக்கு ஒரு துரவை தோண்டுவதற்காக வேறொரு இடத்திற்கு சென்றான். அங்கே போராட்டம் இல்லை. இது "ரெகோபோத்" (அறை என்று பொருள்) என்று பெயரிடப்பட்டது. "நாம் தேசத்தில் பலுகும்படிக்கு" கர்த்தர் நமக்கு இடம் உண்டாக்கினார் என்று ஈசாக்கு சொன்னார். கிறிஸ்துவின் இராஜ்யத்தின் ஜீவத்தண்ணீர்கள் பாயும்போது. அதன் பலனை அறுவடை செய்ய அனைவருக்கும் இடம் உண்டு. அங்கு போராட்டமோ, சச்சரவோ அல்லது வெறுப்போ இருக்காது. ";*என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை; கேடுசெய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்.*;(ஏசாயா 11 :9)

முதல் இரண்டு "ஜீவத்தண்ணீர்கள்" தேவனால் ஆதாமுக்கும் இஸ்ரயேலருக்கும் கொடுக்கப்பட்டது. அடுத்த இரண்டு "ஜீவத்தண்ணீர்கள்" சிலுவையில் இயேசு பலி செலுத்திய பின்னரே கொடுக்கப்படும். இயேசு மரித்தபோது அவரது உடலிலிருந்து வெளிவந்த இரத்தமும் தண்ணீரும் இதை அடையாளப்படுத்துகிறது. ;*ஆகிலும் போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான்; உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது.* (யோவான் 19:34).∴ தண்ணீர் இயேசுவிடம் இருந்து நேரடியாக வருகிறது. ஆனால் அந்த தண்ணீர் அவருடைய இரத்தத்தோடு கலந்து வருகிறது இதை அவர் உலக மக்களின் ஜீவனுக்காக இலவசமாக கொடுத்தார்.




**காரல் ஹேகன்சிக்**

செப்டம்பர் 17, 1934 - மே 23, 2008

காரல் ஹேகன்சிக் (Carl Hagensick ) தன்னுடைய தனிப்பட்ட சந்திப்புகள் மற்றும் அவர் தம் எழுத்துப் படைப்புகளின் மூலமாக சற்றும் களைப்பில்லாமல் வேதமாணவர்களுக்கும் உலகம் முழுவதுமுள்ள மற்றவர்களுக்கும் சேவை செய்ய தன்னை அர்ப்பணித்திருக்கிறார். போதக வேதாகமம் நிறுவனத்தின் ( Pastoral Bible Institute ) இயக்குனராகவும், 1992ல் இந்த பத்திரிக்கையின் நிர்வாக பதிப்பாசிரியராக பணியாற்றினார். முதலில் எல்லா வெளியீடுகளையும் அவரே செயல்படுத்தினார். அநேக வேத பாடங்களை அவரே எழுதினார். ஹெரால்டு பத்திரிக்கை ஒரு குறிப்பிட்ட ( theme ) விஷயத்தைப் பற்றி எழுதப்படும்போது காரல் அநேக விஷயங்களை தேர்ந்தெடுத்தார்.

கடந்த 17 வருடங்களாக காரல் அவருடைய இடுப்பிலிருந்து கீழ்வரைக்கும் முடக்கு வாதத்தினால் பாதிக்கப்பட்டிருந்த போதிலும் அவருடைய செயல்பாடு கட்டுப்படுத்தப்படவில்லை. அவர் தொடர்ந்து வேதாகம மாநாடு கூட்டங்களுக்கு சென்று வந்தார். இன்னும் அதிகமாக அவர் எழுத ஆரம்பித்தார். அவருடைய வாழ்க்கையின் இறுதியில், அவருக்கு வரைபடத்தில் உள்ள எழுத்துக்களைக் காண்பித்து, அதை உச்சரிக்க சொன்னபோது தான் அவருடைய "வேகம் குறைந்தது."

இந்த போதக வேதாகமம் நிறுவனத்திற்கும், விசேஷமாக இந்த வெளியீடு மிகவும் விரிவாக கொடுக்கப்படவும் அவருடைய பங்களிப்புகள் ஏராளம். அவரது பூமிக்குரிய சரீரத்தின் குறைபாடுகள் இப்போது கடந்து சென்றதையும், அவருடைய வாழ்க்கையில் அவர் எதிர்பார்த்திருந்ததை பெற்றுக்கொள்ள தயாராக இருப்பதையும் அறிந்து நாம் களிகூறுகிறோம்.



# உலக தினம்

"பூமியும் அதின் நிறைவும், உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது" (சங்கீதம் 24:1)

முதலாம் உலக தினம் 1970-ஆம் வருடம், ஏப்ரல் 22-ஆம் தேதி, கடைபிடிக்கப்பட்டபொழுது, அன்றைய சூழ்நிலை உபத்திரவம் நிறைந்ததாகவும், உறுதியளிக்க முடியாததாகவும் இருந்தது. அரசியல் மற்றும் மதரீதியாக எருசலேம் 1967-ஆம் வருடம் நடைபெற்ற யுத்தத்திற்கு பின்பு இஸ்ரயேலின் ஆளுகைக்குள் இருந்தது. ரோம கத்தோலிக்க திருச்சபை விசுவாசத்தை அசைக்கும் மாற்றங்களை 1965-ஆம் ஆண்டு வாட்டிக்கன் -2 -ல் அமுலுக்கு கொண்டுவந்தது. சக்திவாய்ந்த நாடுகளின் அணு ஆயுத பரிமாற்றம் அமெரிக்க விமான பாதுகாப்பு படை குண்டு வீச்சாளர்களை இரவும் பகலும் அணு ஆயுதத்துடன் விழித்திருக்கச் செய்தது. கம்யூனிச சீனா உலக வல்லரசாக உருவெடுத்தது மற்றும் அதன் "கலாச்சார புரட்சி" உலகில் பதற்றத்தை உயர்த்தியது. அமெரிக்காவில் இரண்டாம் உலக போரில் பங்கு பெற்று வெற்றிக்காக போராடி தியாகம் செய்த "மாபெரும் சந்ததி", அதுபோன்ற தேசபற்று உணர்வுடன் வியட்னாம் போரில் பங்கு பெற்று போராட விரும்பாத தங்களுடைய பிள்ளைகளோடு போராட வேண்டியிருந்தது. முதல் முதலாக யுத்தத்தின் கொடூரமான காட்சிகள் வெளிப்படையாக இரவு நேர செய்திகளில் வெளியிடப்பட்டது. பலவகையான போதை மருந்துகளின் பெயர்கள் நடைமுறையில் சாதாரணமாக உச்சரிக்கப்பட்டது. இது அதிகரிக்கப்பட்ட போதை பழக்கத்தை அடையாளப்படுத்துகிறதாக இருந்தது. இது "இலவச நேசம்" மற்றும் "பாலியல் சுதந்திரம்" போன்றவற்றிற்கான காலமாயிருந்தது.

அதே சமயம், பழமையான நன்நெறிகள் ஒதுக்கப்பட்டதால் சமுதாய சீர்கேடு நடந்தது. "முப்பதுக்கு மேலானவர்களில் ஒருவரையும் நம்பாதே" என்ற வளரும் சந்ததியின் கொள்கை, சந்ததிகளுக்குள் பிரிவு ஏற்படக் காரணமாயிருந்தது. அமெரிக்காவின் முக்கிய நகரங்களில், புதிய அரசியல் உரிமைகள் ஏற்படுத்தின இனவெறி சூரையாடல்களின் தழும்பு இன்னமும் காணப்படுகிறது. இறுதியாக, இந்த முதலாம் "உலக தினம்" ஒகியோ நகரில் கடைப்பிடிக்கப்பட்ட இரண்டு வாரத்திற்கு பின்பு, வியட்னாம் போரை எதிர்த்த நான்கு மாணவர்கள் கெண்டஸ் மாகான பல்கலைகழக வளாகத்தில் சுட்டு கொல்லப்பட்டதின் மூலம் தேசம் மீண்டும் அசைந்தது. இதிலிருந்தே முதலாவது "உலக தினம்" பிறந்தது.

உலக தினம் பற்றின கருத்து உருவாகுவதை முதன் முதலில் உணர்ந்தவர், இருபதாம் நூற்றாண்டு அறிவியலில் முக்கிய சிந்தனையாளரும், தனிமனிதனாக எழுந்து மற்றும் இரண்டு சந்ததிகளுக்கு முன்பாக சிந்திக்கும் விசேஷித்த திறமைக்குரியவரைச் சேரும். இவர், வாழ்வியல், இயற்பியல், வேதியல் மற்றும் புவியியலின் கலப்பினை ஆராய்வதில், பூமியை விண்வெளியிலிருந்து பார்ப்பது போன்று கற்பனை செய்யும்மாறு தம்முடைய வாசகர்களை அழைத்தார். இவர் தம்முடைய கருத்தை "பூமியின் முகம், விண்வெளியிலிருந்து பார்க்கும் பொழுது, ஆகாயத்தில் உள்ள அனைத்து சிருஷ்டிகளிலுமிருந்து வேறுபட்டதாக ....தனித்தன்மையுடன் காட்சியளிக்கிறது" என்ற வார்த்தைகளின் மூலம் துவங்குகிறார் (விலாடிமிர் ஐ. வெர்நாடஸ்கி, தி பையோஸ்பியர் 1926 ). நம்முடைய பூமியை ஒரு விசேஷித்த அல்லது தூதர்களுக்கு ஒத்த நிலையிலிருந்து பார்க்கும்படியான இவருடைய அழைப்பு, 1969- ஆம் ஆண்டு, ஜூலை மாதம், சந்திரனை சுற்றி வந்து இன்று நாம் காண்கிறதான



Earthrise, seen from Apollo 11, July 1969

"பூமி - உதயம் " காட்சிகளை படம் எடுத்த அப்பலோ குழுவினர் மூலம் உணரப்பட்டது. உலகம் முழுவதும் உள்ள ஜனங்களுக்கு அந்த காட்சி பிரமிக்கத்தக்கதாக இருந்தது. விண்வெளியில் வெகு தூரத்தில் உள்ள சந்திரனிலிருந்து பார்க்கும் பொழுது, பூமியானது சிறிய ஜீவனுள்ள பொக்கிஷமாக காட்சியளிக்கிறது. நாம் அனைவரும் விண்வெளியின் பரந்துவிரிந்த வெற்றிடம் மற்றும் ஜீவனில்லாத "சந்திர மண்டலம்" போன்றவற்றிலிருந்து வேறுப்பட்டு விசேஷித்த நீல நிறத்தில் பிரகாசிக்கிற, ஜீவ தீவில் வாழ்வது உணரப்பட்டது. ஜனங்கள், ஜீவனுக்கு தேவையான சமுத்திரம், நிலம் மற்றும் விகிதத்தில் ஆப்பிள்கனியின் தோல் போன்று சிறிதாயிருக்கும் காற்று மண்டலம் போன்றவற்றை தந்த நம்முடைய சர்வ ஞானமுள்ள சிருஷ்டிகரை அதிசயமாக பார்த்தனர்.

"உலக தினத்தை" ஏற்படுத்துவதற்கான முந்தய முயற்சிகள் தோல்வியில் முடிந்தது. இப்பொழுது, அதே முயற்சிகள் உற்சாகமான பங்கேற்பை அட்லான்டிக்கின் இரண்டு பகுதிகளிலும் கண்டது. இதை பின் வருமாறு, முதலாவது உலக தினத்தின் அமைப்பாளர், விஸ்கான்சின் மாகாண பிரதிநி, கே டார்ட நெல்சன் கூறுகிறார் - "உலக தினத்தின் வெற்றி சாதாரண ஜனங்கள் மத்தியில் பெற்ற தொடர்ச்சியான பங்களிப்பின் மூலம் உண்டானது. அதில் பங்கேற்ற இருபது மில்லியன் பங்கேற்பாளர்கள் மற்றும் ஆயிரக்கணக்கான பள்ளிகள் மற்றும் சமூக அமைப்புகளை கவனிக்க எங்களுக்கு போதுமான நேரம் மற்றும் அத்தியாவசிய வசதிகள் இல்லை. இவை ஏதுமில்லாமல் தானாக அமைந்தது ... உலக தினத்தின் விசேஷமாகும். "

இன்று "சுற்று சூழலில்" பத்தாண்டு என்று அமெரிக்காவில் அழைக்கப்படும் இதர கட்சிகளின் ஆதரவு "சுற்று சூழல் பாதுகாப்பு நிறுவனம்" என்ற "சுற்றுச் சூழலுக்கான பரிந்துறையாளர்" போன்ற அமைப்பு உருவாக காரணமானது (டிசம்பர் 2 , 1970). அதை தொடர்ந்து, மாதத்தின் இறுதியில், வருடத்தின் கடைசி நாளில், முக்கியம் வாய்ந்த சுற்று சூழல் சட்டம் நிறைவேற்றப்பட்டது - சுத்த காற்று சட்டம் 1970. இதை தொடர்ந்து சுத்த நீர் சட்டம் அக்டோபர் 18 , 1972 - ல் நிறைவேற்றப்பட்டது. அது முதல் , வேறு முக்கிய சட்டங்கள் இன்னும் அதிகமான நிலபகுதியை "பாதுகாக்கப்பட்ட" நிலைக்கு சுற்று சூழலை பாதுக்கும் நோக்குடன் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டது. இன்று வளர்ந்துவரும் உலக அரசியலில் சுற்று சூழலை பாதுகாப்பது அடிப்படை அரசியல் கடமையாக உணரப்பட்டுள்ளது. ஐரோப்பாவில் "பசுமை" குழுக்கள் சுற்று சூழலை பாதுகாக்கும் நோக்குடன் தங்களுடைய பாதையில் பணியாற்றுகின்றனர். சமீபத்தில் நடந்த உலக தினத்தில் (ஏப்ரல் 22, 2008 ) ஜனாதிபதி புஷ் சூறாவளியால் பாதிக்கப்பட்ட நியூ ஆர்லியன்ஸ் பகுதியில் ஓக் மரக்கன்று நட்டார். அவருடைய "உலக தின" பங்களிப்பை தொடர்ந்து வெள்ளை மாளிகையின் செய்தி தொடர்பாளர்கள் சீதோஷன மாற்றம், சுத்தமான காற்று மற்றும் சுத்தமான நீர் பற்றி அனைத்தையும் கொண்ட நான்கு பக்க அறிக்கையை உலகத்தின் சமுத்திரங்களை பாதுகாத்து பராமரிப்பதின் முக்கியத்துவத்தை பொது ஜனங்களுக்கு உணர்த்த வெளியிட்டனர். அதோடு அந்த அறிக்கை பாப்பாஹானாமோகுவாகி (ஹவாய்) பகுதியை அமெரிக்க வரலாற்றில் பாதுகாப்பிற்காக அர்ப்பணிக்கப்பட்ட மிக பெரிய பகுதியாகவும், உலகிலேயே பாதுகாக்கப்பட்ட மிக பெரிய கடல் பகுதியாகவும் வெளியிட்டது.

கிறிஸ்துவுக்கு தூதுவர்களாகிய நாம், (11 கொரிந்தியர் 5 : 20) இன்றைய உலக அரசியல் அமைப்பின் (ஏசாயா 40 : 15 - 17) சாதனைகளை கொண்டாடுவதோ, அதன் குறைபாடுகளை விமரிசிப்பதோ இல்லை. சுற்று சூழலை பாதுகாப்பது போன்ற நல்ல காரியங்களை உலகம் நிறைவேற்றும் பொழுது நாம் நன்றி சொல்கிறோம். உண்மையில், முதல் மனிதனிடத்தில் தேவன் வைத்த உள்ளான விருப்பத்தை இது வெளிப்படுத்துகிறது. ஆனால், இது மாத்திரம் மனிதனுடைய பிரச்சனைகளை தீர்க்குமா? இல்லை, ஆனால் இது மனுக்குலத்தின் விருப்பத்தையும் கிறிஸ்துவின் இராஜ்யத்தில் நிறைவேற்றப்படுவதையும் குறித்து விவரிக்கிறது. அந்நாளில் , தோளோடு தோள் சேர்ந்தவர்களாக அனைவரும் பரலோக பிதாவின் மாபெரும் "உலக தின" திட்டத்தில் பணியாற்ற முயற்சிப்பார்கள். (செப்பனியா 3: 8,9 அப்போஸ்தலர் 3 : 19 - 21).